# அம்பிகையின் அருள்வடிவங்கள்



JPL
C11825

வெளியீடு:
சர்வானந்தமய பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# அம்பிகையின் அருள் வடிவங்கள்

(சக்திவழிபாட்டின் பல்வேறு பரிமாணங்களை எடுத்து விளக்கும் அருட்களஞ்சியம்)

KOHA JPL

05 JUL 2016

ஆக்கம்:
வித்யாபூஷணம், சாதகதிலகம்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(HONS)
(கோப்பாய் சிவம்)

4 251106

வெளியீடு

ௐ

## சர்வானந்தமய பீடம்

பதினான்காவது ஆண்டு நிறைவு
வியாச பூர்ணிமை
ஆனி 2014.

251106 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீட்டுத் தரவுகள்

நூலின் பெயர் அம்பிகையின் அருள்வடிவங்கள்

மொழி தமிழ், சம்ஸ்கிருதம்.

விடயம் சக்திவழிபாட்டின் பல்வேறு பரிமாணங்களை விளக்கும் தகவல்களும், படங்களும், ஆதாரங்களும், விளக்கங்களும் அடங்கிய அருட்களஞ்சியம்.

தொகுப்பு கோப்பாய் சிவம்

வெளியீடு : சர்வானந்தமய பீடம்

கணினி வடிவமைப்பு:

'வித்யாபூஷணம்', 'வித்யா ப்ரகாசனர்',
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.Hons.
(கோப்பாய் சிவம்)
இணுவில் மேற்கு, சுன்னாகம்.
தொ. பே. 021 224 1504

அச்சுப்பதிப்பு ஷாம்பவி அச்சகம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**விலை:** ரூ 500.00

இந்நூலின் முதற்பதிப்பு திரிகோணமலை ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு, ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்களின் ஜ்யேஷ்ட புதல்வர் பிரம்மஸ்ரீ இ. கைலாசசங்கர் சர்மா அவர்களின் சிவாசார்யாபிஷேக வைபவத்தை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தினரால் 01.06. 2014இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# பொருளடக்கம்


ஞானகுரு - வழிகாட்டி 04
ஞான முதல்வன் - சக்தி கணபதி 05
பரப்பிரம்மம் - நிலைச்சக்தி 06
பிரபஞ்ச மூலம் - ஓங்காரம் 07
உலகம் யாவையும் ஊக்கிடும் தேவி காயத்ரி 08
அருட்சக்தி திரிபுரசுந்தரி 09
சர்வம் சக்திமயம் 10
ஆழ நுழைந்தும் அகல விரிந்தும் இயக்கும் சக்தி 12
இந்துநாகரிகத்தில் சக்தி வழிபாடும் தத்துவமும் 16
அருட்சக்தி ஆலயத்தில் நிறைவது எவ்வாறு? 25
நமது வழிபாட்டின் நயமான பெருமைகள் 34
சக்தி வணக்கத்தில் அடங்கிய அரிய தத்துவம் 35
ஸ்ரீ பத்திரகாளி மான்மியம் 37
சப்த மாதர் - படங்கள் 42
சப்த மாதர் (இன்னொரு வகை) - படங்கள் 51
நவதுர்க்கா படங்கள் - சிவதாண்டவமும் 58
நவதுர்க்கா - தியானங்கள் 68
அஷ்டபுஜதுர்க்கை, ஷோடசபுஜதுர்க்கை,
ருத்ராம்சதுர்க்கை, அஷ்டாதசபுஜதுர்க்கை 70
நவசக்தி 71
நவக்கிரக சக்திகள் 72
தசமஹா வித்யா 73
லலிதா நாமாவளி கூறும் தசாவதார மகிமை 88
அஷ்டலக்ஷ்மீ ஸ்துதி 89
அம்பிகையின் அருள்வடிவங்கள்
மஹாகாளி 91
மஹாலக்ஷ்மி 92
மஹாசரஸ்வதி 93
பிரத்யங்கிராதேவி 94
சாகம்பரீ தேவி 95




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான குரு - வழிகாட்டி




குருர் பிரம்மா குருர் விஷ்ணு:
குருர் தேவோ மஹேஸ்வர:
குருஸ் ஸாக்ஷாத் பரப் பிரம்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நம:

ஸ்ரீநாதாதி குரு த்ரயம் கணபதிம்
பீட த்ரயம் பைரவம்
ஸித்தெளகம் வடுக த்ரயம் பதயுகம்
தூதி க்ரமம் மண்டலம்
வீரேசாதி சதுஷ்க ஷஷ்டி நவகம்
வீராவளீ பஞ்சகம்
ஸ்ரீமன் மாலினி மந்த்ர ராஜ ஸஹிதம்
வந்தே குரோர் மண்டலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான முதல்வன் - ஞாலத் தலைவன்

## ஸ்ரீ வித்யா கணபதி ~ சக்தி கணபதி



ஸ்ரீ ஸக்தி கணபதி

ஆலிங்க்ய தேவீம் ஹரிதாங்க யஷ்டிம்
பரஸ்பராலிஷ்ட கடிப்ரதேசம்
ஸந்த்யாருணம் பாச ஸ்ருணீ வஹந்தம்
பயாபஹம் சக்தி கணேசமீடே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பரப்பிரம்மம் - நிலைச்சக்தி (மூலப் பரம்பொருள்)

## நிஷ்பிரபஞ்ச நிலை (நிர்குண பிரமம்)

## அருவம்

அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து

எங்கும் எவையும் எரியுறு நீர்போல் ஏகம்
தங்கும் அவன் தானே தனி

- *திருவருட்பயன் - பதிமுதுநிலை 1, 8.*

நானறிந் தப்பொருள் நாட இடமில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடும்
ஊனறிந் துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறிந் தெங்கும் தலைப்படலாமே

உண்ணின் றொளிரும் உலவாப் பிராணனும்
விணிணின் றியங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மணிணின் றியங்கும் வாயுவு மாய்நிற்கும்
கண்ணின் றிலங்கும் கருத்தவன்றானே

- *திருமந்திரம் - சர்வ வியாபி 2, 15.*

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே...............

- *சிவபுராணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்ச மஹாசக்தி - பேரருட்சக்தி

## (இயக்க சக்தி)

## ஓங்காரம்- சர்வ மந்த்ர ஸ்வரூபம்



"எந்த பக்தன் நம்பிக்கையுடன் எந்த வடிவத்தை
அர்ச்சிக்க விரும்புகிறானோ
அவனுடைய அசையா நம்பிக்கைக்குத்தக்க வடிவத்தை
நான் மேற்கொள்கிறேன".

- **பகவான் ஸ்ரீகிருஷ்ணர். (பகவத்கீதை, ஞா.யோ. 21)**

"யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்"

- **அருணந்தி சிவாச்சாரியார் (சிவஞான சித்தியார்)**


"அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவரெனவடி வுடையவர்"

- **நம்மாழ்வார் (நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத நாயகி - மந்திரச் செல்வி

## உலகம் யாவையும் ஊக்கிடும் தேவி - காயத்ரி







"விரும்பிய வரங்களை அளிப்பவளும், அக்ஷரப் பொருளும், வேதத்தால் அறியப்படுபவளும், வேத மாதாவும் ஆகிய காயத்ரீ தேவியே! நீ எங்கள்முன் எழுந்தருளி எங்கள் ஆராதனையை ஏற்கவேண்டும். நீயே பிராண சக்தியாகவும், இந்திரிய சக்தியாகவும், பகைகளை வெல்லும் திறமையாகவும், அங்கங்களின் வலிமையாகவும், ஞான ஒளியாகவும், தேவர்களுடைய பிரகாசமாகவும், உலக வடிவாகவும், காலரூபியாக உலகின் ஆயுளாகவும், அனைத்தையும் வெல்பவளாகவும், எல்லாமாகவும் இருக்கிறாய்"

- சந்த்யாவந்தன மந்த்ரம்.

சென்னியது உன்பொற் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு **மந்திரம்** சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்தன் பரமாகம பத்ததியே.

கண்ணியது உன்புகழ் கற்பது உன்நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன்னிரு பாதாம்புயத்தில் பகல் இரவா(க)
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏதுஎன் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

- அபிராமி அந்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்தப் பெருங்கருணைச் சக்தி



## அளவிலா விளையாட்டுடை அருட்சக்தி
## திரிபுரசுந்தரி

அறிவார் பராசக்தி ஆனந்தம் என்பார்
அறிவார் அறிவுரு வாமவள் என்பார்
அறிவார் கரும மவளிச்சை என்பார்
அறிவார் பரனு மவளிடத் தானே - திருமந்திரம் 1054

சிந்தையி னுள்ளே திரியும் சிவசக்தி
விந்துவும் நாதமு மாயே விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொ டாதிய தாம்வண்ணத் தாளே - திருமந்திரம் 1138

வாயும் மனமும் கடந்த மனோன்மனி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நல்தாரமும் ஆமே - திருமந்திரம் 1178

இமவான் மகட்குத்
தன்னுடை கேள்வன் மகன், தகப்பன், தமையன் - மணிவாசகம்

எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருள் - மணிவாசகம்

தவளே இவளெங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையுமாயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வமுண்டாக மெய்த்தொண்டு செய்தே. - அபிராமி அந்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வம் சக்திமயம்

சக்தியும் சிவனும் ஒன்றே. சிவனின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவனுமில்லை. மிக உயர்ந்த நிலையில் பிரிவற்ற ஒருமையே உள்ளது. இறைவன் ஆனந்த மிகுதியால் திருவிளையாடல் புரியும்போதே அவனுடைய திருவுருவங்கள் அமைகின்றன. பரன் ஆணையால் பரை அனைத்துயிரையும், அனைத்து உலகங்களையும் படைக்கிறாள். உயிர்களை வினைபுரிய வைத்து, அன்பும் அருளும் சொரிந்து, இருள் மயக்கங்களைத் தீர்த்து, உண்மையொளி வீசி, அவற்றைப் பக்குவப்படுத்தி, உருமாற்றி இறுதியில் மீண்டும் இறைவனிடம் சேர்ப்பிப்பவள் மஹாசக்தி.

பரம்பொருளிலிருந்து பிரிவுபடாமல் பழமும் சுவையுமாக, நெருப்பும் சூடுமாக, விளங்கும் பராசக்தியே திருவருட்சக்தி. அதுவே மாயையாகிய திரோதான சக்தியும். அதுவே ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து வேதங்கள் போற்றும் இயற்கைச் சக்திகளாகவும், ஆகமங்கள் பூஜிக்கும் அருள்வடிவத் திருவுருவங்களாகவும், புராணங்கள் புகழும் வீரசக்திகளாகவும், பாமரமக்கள் வழிபடும் கிராமியத் தேவதைகளாகவும் விளங்கும் பெருமைக்குரியது.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயில்கின்ற பெம்மானும் என்ஐயனுமே.

- அபிராமி அந்தாதி

காஷ்மீரத்திலே அம்பாள், ராஜபுதனத்தில் பவானி, கூர்ஜரத்தில் கல்யாணி, வங்கத்திலே காளி, அசாமில் காமரூபி, மைசூரில் சாமுண்டி, காசியில் விசாலாட்சியும் அன்னபூரணியும், மலையாளத்தில் பகவதி.........

தமிழகத்தில் பார்த்தால் - காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, திருவொற்றியூர் வட்டபுரி அம்மன், மாமல்லபுரம் கருக்கமர்ந்த காளி, தில்லைக் காளி, கோயமுத்தூர் கோணியம்மன், சமயபுரம் கருமாரி, தஞ்சாவூர் முத்துமாரி, திருவேற்காடு முத்துமாரி, பாரியூர் கொண்டத்துக் காளி, நாட்டரசன் கோட்டை கண்ணாத்தாள், காரைக்குடி கொப்புடையம்மன், தென் எல்லையில் கன்யாகுமரி, வடக்கிலிருந்து வந்த உஜ்ஜயினி மஹாகாளி, ஆந்திரத்திலிருந்து வந்த சக்கம்மாதேவி, இன்னும் பல இடங்களிலே எல்லை அம்மன், எல்லைப்பிடாரி, வடக்குவாசல் செல்லி, ஆத்தாயி, மாரியாத்தா, பிடாரி, மாயி, மகமாயி, ..............

சிலப்பதிகாரத்திலே மதுரையின் காவல் தெய்வம் மதுராபதி. மணிமேகலையில் சம்பாபதியைக் காண்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தை நோக்கினால், நயினை நாகபூஷணி (புவனேஸ்வரி பீடம்), வேலணை புளியங்கூடல் முத்துமாரி, பெருங்குளம் முத்துமாரி, தெல்லிப்பளை துர்க்கையம்மன், சாவகச்சேரி விளைவேலி துர்க்கை, திருநெல்வேலி முத்துமாரி, திருகோணமலை பத்திரகாளி, முனீஸ்வரம் வடிவாம்பிகை (அளகேஸ்வரம் சக்தி பீடம்), மாத்தளை முத்துமாரி, நாவலப்பிட்டி முத்துமாரி என்று நீண்டு செல்லும் ஒரு பட்டியல்.

எங்கும் நிறைந்த பராசக்தி பூரணி, ராஜராஜேஸ்வரி, மூலப் பிரகிருதி.
முத்தொழில் புரியும்போது பிரம்மாணி, வைஷ்ணவி, ருத்ராணி.
ஈசனுக்கு ஒப்பாக துர்க்கை.
கல்விக்கு சரஸ்வதி.
செல்வத்திற்கு இலக்குமி.
காலசொரூபம் காளி
புக்தி முக்தி ப்ரதாயினி - போக மோட்சப் பிரதாயினி.

புத்தியின் ஞானசக்தியும் மனத்தின் இச்சாசக்தியும் உடலின் கிரியாசக்தியும் அவளுடைமைதான். அவளிடமிருந்துதான் பிரமன், விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன் என்ற பஞ்ச கர்த்தரும் தோன்றினர். சித்சக்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்ற பஞ்ச சக்திகளும் அவளிடமே தோன்றினர்.

பிரமவிஷ்ணு ருத்ரர்களின் சக்திகளாகவும் தேவர்களின் சக்திகளாகவும் சப்த மாதர்களாகவும் துர்க்கா லட்சுமி சரஸ்வதியாகவும் பஞ்சவிம்சதி எனும் மஹேஸ்வர மூர்த்தங்கள் 25 இற்கும் சக்தியாகவும், 64 சிவமூர்த்தங்களின் சக்தியாகவும் 64 பைரவர்களின் யோகினிகளாகவும் விளங்குகிறாள்.

தேவி பாகவதம், தந்திர சாரம், சிவாகமங்கள், சிற்ப நூல்கள், சம்ஹிதைகள், மந்திர சாஸ்திரம், தியான ரத்னாவளி, மகாபுராணங்கள், உபபுராணங்கள் முதலிய பல நூல்களில் தெய்வத் திருவுருவங்கள் வகை வகையாக விபரிக்கப்படுகின்றன. ஒரே சக்திக்கு அநேக மூர்த்தங்கள் சொல்லப்படுவது மட்டுமல்லாமல் ஒரே மூர்த்தத்திற்கே அநேக தோற்றப் பொலிவுகளை வர்ணிக்கின்றன இந்த நூல்கள்.

துர்க்கை, லட்சுமி, காளி ஆகிய சக்தி வடிவங்களை மது, மச்சம், மாமிசம், மாது, முத்திரை என்னும் பஞ்ச மகாரங்கள்மூலம் வழிபடுவர் சிலர். இது வாமாசாரம் எனப்பட்டது. நள்ளிரவில் இடுகாட்டில் பிரேதங்களைப் பூசித்தல், பெண்களை நிறுத்திப் பூசித்தல் (பூர்ண பிட்சை), மது மாமிசங்களால் பூசித்தல் முதலிய தவறான வழக்கங்கள் புகுந்தமையால் பெரியோரால் கண்டிக்கப்பட்டன.

இங்கு சொல்லப்படும் பஞ்ச மகாரங்கள் உண்மையில் தத்துவார்த்தங்களே. சித் சந்த்ர மண்டலத்திலிருந்து ஒழுகும் அமிர்த தாரையே மது. பட்டினி, விரதங்களால் உடல் வேட்கைகளை ஒடுக்குதலே மாமிசம். மச்சமும் முத்திரையும் இடை பிங்கலை நாடிகள். மாது என்பது பெண்கள் அனைவரையும் தாயாகக் காணுதல். வாமாசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌல மார்க்கம் எனவும் சொல்லப்படும். "கௌலமார்க்க தத்பர சேவிதா" என லலிதா சஹஸ்ரநாமம் புகழ்கிறது.

தகுந்த குருவை அடைந்து ஸ்ரீவித்யா உபதேசம் பெற்று தச மஹா வித்யா மந்திரங்களை உபாசனை செய்வதே தட்சிணாசாரம். இது தென்னாட்டிற்கே உரிய சிறப்பான வழிபாடு. உபநிடதங்களும் சாக்த தந்திரங்களும் கௌடபாதரின் சுபகோதயமும் சௌந்தர்ய லஹரியும் இவ்வழிபாட்டின் மூல நூல்கள். பாஸ்கரராயர், லட்சுமீதரர் முதலானோரின் பத்ததிகள் வழிநூல்களாகும். பாஸ்ரராயரின் லலிதா சஹஸ்ரநாம பாஷ்யம், சேதுபந்தனம், வரிவஸ்யா ரஹஸ்யம் ஆகிய மூன்று நூல்களும் ஸ்ரீ வித்யைக்கு **பிரஸ்தான த்ரயம்** எனப்படும்.

அம்பிகையின் உறைவிடம் ஸ்ரீசக்ரம். இதை சிவன் சக்தி இருவரின் சரீரம் எனவும் மந்திர நூல்கள் கூறும். பூ பிரஸ்தாரம், மேரு பிரஸ்தாரம், கைலாச பிரஸ்தாரம் (அர்த்த மேரு) என மூவகையாக ஸ்ரீசக்ரம் அமைக்கப்படும். இதன் அமைப்பை சௌந்தர்யலஹரி 11ம் செய்யுள் அழகாகக் கூறும். முக்கியமான மந்திரங்கள் பஞ்சதசாட்சரீயும் ஷோடசாட்சரீயும். "தந்திர, மந்திர, யந்திர ரூபிணி" என அம்பிகையைப் போற்றுவர்.

தமிழகத்தின் பல கோவில்களில் புராதனமாகவே ஸ்ரீசக்ரங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். காஞ்சி காமாட்சி (காமகோடி பீடம்), திருக்குற்றாலம் (ஸ்ரீசக்ர பீடம்), ஆவுடையார் கோவில் (இங்கு ஸ்ரீசக்ர பீடத்தின்மேல் தேவியின் பாதுகை வழிபாடு), திருவானைக்காவில் அகிலாண்டேஸ்வரியின் காதணி ஸ்ரீசக்ரம், காசியில் இரு இடங்களில் சக்ர லிங்கேஸ்வரரர் (சிவலிங்கத்தின்மேல் ஸ்ரீசக்ரம்), திருவிடைமருதூரில் மஹாமேரு, சிதம்பரம் சிதாகாசத்தில் சம்மேளன சக்கரம் முதலியனவாக இவை இன்னும் பெருகும். ஈழத்திலும் இன்று பல இடங்களில் ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டையைக் காணலாம்.

இவ்வாறு தாந்திரிக வழியிலான ஸ்ரீசக்ரங்களிலும் சிவாகம மரபிலான சிவாலயங்களிலும் தேவீ ஆலயங்களிலுமுள்ள அம்பிகையின் பல்வேறு விதமான அருளுருவங்களிலும் கிராமிய மரபிலமைந்த பக்திமார்க்கமான வழிபாட்டு முறைகளிலும் எம்பெருமாட்டி பரந்து விரிந்து நிலைபெற்றும் கரந்துறைந்தும் அருள்செய்யும் பாங்கு அற்புதமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 251106

# ஆழ நுழைந்தும் அகல விரிந்தும் இயக்கும் சக்தி

நாம் பூமி எனும் கோளத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பூமி சூரியக் குடும்பத்தில் ஓர் அங்கம். சூரியக் குடும்பம் பால்வெளியில் அமைந்துள்ளது. பால்வெளி பிரபஞ்சத்தில் இருக்கிறது என்பர். பிரபஞ்சம் என்பது பஞ்ச என்ற சொல்லிலிருந்து வந்தது. பஞ்ச என்றால் ஐந்து என்பது பொருள். நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் என்னும் ஐந்து மூலப் பொருட்கள் - பஞ்சபூதங்கள் - இவை அனைத்துக்கும் அடிப்படையாக உள்ளன. பூதம் என்றால் உண்டாகுவது எனப் பொருள். பிரபஞ்சத்திலுள்ள எந்தப் பொருளை எடுத்துப் பகுப்பாய்வு செய்தாலும் அது இந்த ஐந்து மூலப்பொருட்களாலும் ஆக்கப்பட்டதாகவே இருக்கும். இது ஒரு நியமம் ஆகும். நியமம் - கட்டுப்பாடு, ஒழுங்கு.

இந்த நியதியை ஏற்படுத்தியவர் யார்? இந்தக் கேள்வி மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வருகிறது. நாம் எங்கிருந்து எப்படி வந்தோம்? எவ்வாறு இயங்குகிறோம்? இறந்தபின் என்ன நடக்கிறது? இவையும் விடை தெரியாத கேள்விகள்! நம்மைக் **கட**ந்து நின்று இந்தப் பிரபஞ்சத்தை இயக்குபவராகவும் நமக்குள் **உள்**ளேயிருந்து நம்மை இயக்குபவராகவும் யாரோ ஒருவர் அல்லது ஒரு சக்தி இருக்கின்றது என்பதை உணர்ந்தபோது அதனையே கடவுள் (கட + உள்) என்றனர்.

உலகின் முதல் இலக்கியமாக இன்றளவும் நிலவிக்கொண்டிருக்கின்ற வேத இலக்கியங்கள் இயற்கையினூடாக இந்த உயர்சக்தியைக் கண்டறிந்து போற்றியுள்ளமை வியப்புக்குரியது. சூரிய சந்திரர்களின் இயக்கமும் காலங்களின் சுழற்சியும் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மனிதர்கள் எனும் உயிரினங்கள் ஒன்றில் ஒன்று தங்கி வாழும் முறைமையும் ஓர் ஒழுங்குமுறையில் இருப்பதை அவதானித்து அதற்கு அந்த வேதகால மக்கள் மதிப்பளித்துள்ளனர் என்பதை அந்த இலக்கியங்களை நோக்கும்போது உணரமுடிகின்றது. அந்த ஒழுங்குமுறைக்கு அவர்கள் 'ரிதம்' என்று பெயரிட்டிருக்கின்றனர்.

பூமி சுழல்கிறது. சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. பூமி சூரியனைச் சுற்றுகிறது. மிகப்பெரும் சக்திக்கனலான அந்த சூரியன் எனும் பிரபஞ்ச மூலப் பொருளும் இயங்கியவாறே உள்ளது. **இயக்கம் இல்லாவிடில் சக்தி உண்டாக மாட்டாது. சக்தி இல்லாவிடில் இயக்கம் இல்லை** என்னும் எதிரும் புதிருமான இந்தப் பேருண்மையை ஆராய்ந்த ஞானிகள் இரண்டு பேருண்மைகளைப் புரிந்துகொண்டனர்.

**சக்தியே முதன்மையானது என்பது முதலாவது பேருண்மை.**

**அந்த சக்தி சரியாகச் செயற்படவேண்டுமானால் எல்லா நிலைகளிலும் ஓர் ஒழுங்கமைப்பு பேணப்படவேண்டும் என்பது இரண்டாவது பேருண்மை.**

இயற்கையில் இயல்பாகவே தொடர்ச்சியாகப் பேணப்படும் இந்த ஒழுங்கமைப்பை அவதானித்து வியக்கும் நிலை மட்டுமல்லாமல் அந்த ஒழுங்குநிலை (இயல்பாகவே ஏதுமொரு இனம் தெரியாத மாற்றத்தால்) குழம்பும்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மனிதர்களால் ஏதுமொரு தேவைகருதி) குழப்பப்படும்போதும் இயற்கையில் ஏற்படும் சீற்றத்தையும் அதனால் ஏற்படும் அழிவுகளையும் கண்டுணர்ந்து பயப்படும் நிலையும் அந்த ஆதிகாலத்து அறிஞர்களிடம் இருந்தது. அவர்கள் இயற்கைக்கு மதிப்பளித்து அதனோடு இசைந்து வாழ்ந்தனர்.

சக்தியின் இரு நிலைகளை அந்த ஞானிகள் விளங்கிக்கொண்டனர். ஒன்று இயங்கா நிலையில் எல்லாப் பொருட்களினுள்ளும் மறைந்து கிடக்கும் நிலைச் சக்தி (Potential energy). மற்றது பொருட்கள் இயங்கும்போது அதிலிருந்து வெளிப்படும் இயக்க சக்தி (Kinetic energy). இயங்காநிலையிலுள்ள பொருட்களினுள் சமநிலை பேணும் ஒரு பொருளும் சக்தியை வெளிப்படுத்தக்கூடிய ஒரு பொருளும் மறைபொருட்களாகக் கரந்துறைகின்றன என அவர்கள் உணர்ந்துகொண்டனர்.

இந்த அளவில் ஒருமைப்பட்டிருந்த ஞானிகள் இதன்பின் இரு நிலைகளில் செயற்பட ஆரம்பித்தனர்.

ஒரு வகையினர் வெளியே நோக்கி (அகன்ற நோக்கில்) தங்கள் பார்வையைச் செலுத்தி விஞ்ஞானிகள் ஆயினர்.

மறுவகையினர் உள்ளே நோக்கி (ஆழ்ந்த நோக்கில்) தங்கள் பார்வையைச் செலுத்தி மெய்ஞ்ஞானிகள் ஆயினர்.

இயங்காநிலைப் பொருட்களிலும்கூட இலத்திரன் என்னும் இயங்குநிலைத் துணிக்கையையும் அதற்கு ஆதாரமான புரோத்தன் என்னும் நிலையான துணிக்கையையும் விஞ்ஞானிகள் கண்டறிந்து அதனைப் பலவிதமாகச் சேர்த்தும் பிளந்தும் சக்தியை அளவிடமுடியாத அளவில் பெருக்கியும் உலகையே ஆட்டி வைக்கின்றனர் இன்று. அணுயுகமும் மாறி இலத்திரன் யுகம் வந்து தாமே படைத்த சக்தியைத் தாமே கட்டுப்படுத்தமுடியாமலும் தடுமாறி, வியந்தும், மகிழ்ந்தும் வருந்தியும் திகைத்தும் வாழ்கின்றனர்.

மறுபுறம், பிரபஞ்சமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பெரும் இயக்க சக்திக்கு ஆடல்வல்லான் எனப் பெயரிட்டு நடராஜ வடிவத்தைக் கொடுத்து மகிழ்ந்தனர் மெய்ஞ்ஞானிகள். அந்த இயக்க சக்தியை ஆகாயப் பெருவெளியிலிருந்து படிப்படியாக காற்று, நீர், நெருப்பு என்னும் பூதங்களினூடாக இறக்கிவந்து (யாகங்கள், ஹோமங்கள், அபிஷேகங்கள், பூஜைகள், பிரார்த்தனைகள் மூலமாக) நிலையான புவிப்பொருட்களான கருங்கல், செப்பு உலோகம், மரம் முதலிய இயற்கைப் பொருட்களாலான விக்கிரகங்களில் அசையாத நிலைச் சக்தியாகச் சேமித்துவைத்து, வேண்டிய பொழுதில் வழிபாடுகளின் மூலம் இதயப் பெருவெளியில் (சிதாகாசம்) கொண்டு வந்து மறுபடியும் இயங்குநிலையில் அந்த சக்தியைப் பயன்கொண்டு மகிழ்கின்றனர். சிவலிங்கம் என்னும் அருவுருவப் பொருளில் அந்தப் பெரும் சக்தி நிலைச்சக்தியாக அடங்கியிருக்கிறதை உணர்கின்றனர். இலத்திரனும் புரோத்தனுமாக விஞ்ஞானிகள் கண்டறியும் துணிக்கைகளை இவர்கள் சிவமும் சக்தியுமாகக் கண்டுணர்கின்றனர். அதனைத்தான் லிங்கமும் ஆவுடையாருமென அமைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனும் சக்தியும் மகிழ்கின்றவாறு தாமும் நல்ல இல்லறத்தில் நின்று "பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்று நல்ல குடும்பத்தை இனிதே பேணி மகிழ்கின்றனர். அங்கு பேணும் நல்லறமே தருமம் ஆகும். அதுவே ஒழுக்கமாகும். அதையே ஒழுங்கு என்றும் கட்டுப்பாடு என்றும் கூறுகிறோம்.

ஒரு புள்ளி ஒழுங்கான முறையில் இயங்குமாயின் அது ஒரு வடிவத்தை உண்டுபண்ணும் என்பது கணித நியதி. மாறாத ஒரு குறித்த தூரத்தை ஒரு புள்ளியிலிருந்து பேணுகின்ற இன்னொரு புள்ளி அந்தத் தூரத்தை ஆரமாகக் கொண்ட ஒரு வட்டத்தை உருவாக்குகிறது. இது அந்தப் புள்ளியின் **ஒழுக்கு** எனபது கணித பாஷை. ஒழுங்கு என்பதிலிருந்தே இச்சொல் வந்திருக்கிறது.

சூரியனைச் சுற்றும் கோள்களின் பாதை ஓர் ஒழுங்கில் அமைந்துள்ளது.

இந்த ஒழுங்கமைப்புக்கள் பேணப்படும்போதுதான் இயற்கை நியதிகள் சரியாக அமையும் என்பதைப் புரிந்துகொண்ட ஞானிகள் நமது வாழ்க்கைக்கு பல ஒழுங்கமைப்புக்களை அமைத்துத் தந்தனர். அந்த ஒழுக்கக்கோவைகள்தான் தர்ம சாஸ்திரங்கள். இப்படி இப்படி வாழவேண்டும், இப்படி இப்படி வாழக்கூடாது என எவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். அதேபோல சில ஒழுங்கமைப்புக்களை விஞ்ஞானிகள், வைத்தியர்கள், பொருளாதார நிபுணர்கள், சமூகவியல் அறிஞர்கள் முதலானோரும் நமக்கு விதித்துள்ளனர். நாம் அவற்றைப் பேணும்போது சமநிலை வாழ்க்கை ஒழுங்காக நடைபெறுகிறது.

பாடசாலையில் மாணவர்களுக்கு சில விதிமுறைகள் உள்ளன. தெருவில் நடந்தும் வாகனங்களிலும் செல்பவர்களுக்கும் தனித்தனியான சில விதிமுறைகள் உள்ளன. அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்கு சில ஒழுங்குமுறைகள் உள்ளன. இவற்றை யாவரும் பேணிவருதல்தான் ஒழுக்கம் எனப்படும்.

உலக மக்கள் யாவராலும் தத்தமக்குரிய ஒழுக்கமும் ஒழுங்கும் பேணப்பட்டால் வெளியே பரந்திருக்கும் சக்தியின் அரசாட்சியும் உள்ளே மறைந்திருக்கும் இறைசக்தியின் அருளாட்சியும் ஒருங்கிணைந்து நம்மை அறிவாட்சி மிக்க பேராளர்களாகவும் அன்புணர்வு மிக்க அருளாளர்களாகவும் ஆக்கி இன்ப வாழ்வுக்குத் துணைபுரியுமல்லவா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து நாகரிகத்தில் சக்திவழிபாடும் சக்தி தத்துவமும்.

## *வரலாற்று நோக்கு*

அகில உலகத்தையும் ஈர்த்து அகில உலகெங்கும் பரந்துநிற்கின்ற இந்துநாகரிக மரபு நீண்டகால வரலாற்றை உடையது. சிந்துவெளிக் காலத்திலேயே இந்து நாகரிகத்தின் வேர்களை ஆய்வாளர்கள் கண்டுகொள்கின்றனர். வேத இலக்கியங்கள் இந்து நாகரிகத்தின் முறையான அடித் தளங்களாக விளங்குகின்றன.

இந்து என்ற பதம் பிற நாட்டவர்களால் பிற்காலத்தில் வழங்கப்பட்டதெனினும் வேத இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு வேற்றுமைகள் பலவற்றில் ஒற்றுமை காண்பவர்களாகவும் முரண்பாடுகளில் ஒருமைப்பாடு காண்பவர்களாகவும் பன்மையி லிருந்து ஒருமை நோக்கிச் செல்பவர்களாகவும் அறிவுக் காற்றை எல்லாத் திசைகளிலிருந்தும் உள்வாங்குவதற்காகப் பலகணிக் கதவுகளை அகலத் திறந்து வைத்திருப்பவர்களாகவும் காலந்தோறும் வளர்ந்துகொண்டிருக்கும் இந்துக்கள் **சநாதன தர்மம்** என்ற பெயராலும் **வைதீக தர்மம்** என்ற பெயராலும் குறிப்பிடப்படும் தர்ம நெறியில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இவர்களுடைய பன்மையிலிருந்து ஒருமையை நாடிச் செல்லும் பண்பின் அடிப்படையில் காணப்படும் பல்லிறைக் கோட்பாட்டில் சக்தி வழிபாடும் சக்தி தத்துவமும் முதன்மை பெறுவதை நோக்கலாம். உலகெங்கும் வாழ்ந்துவரும் பல்வேறு நாட்டைச் சேர்ந்த பல்வேறு மொழிபேசும் பல்வேறு இன மக்களும் சக்தி வழிபாட்டை மேற்கொள்பவர்களாக இருக்கின்றனர். தாய்த் தெய்வ வழிபாடு, தரைப்பெண் வழிபாடு, இயற்கை அன்னை வழிபாடு என்று பல்வகைப்பட்ட முறையில் இந்த சக்திவணக்கம் பரவி விரவிக் காணப்படுகிறது.

## *சிந்துவெளிக்காலத்தில்*

பெண்வழிச் சமுதாய அமைப்பே ஆதியானதென்றும் பின்னரே ஆண்வழிச் சமுதாய அமைப்புத் தோன்றியதென்றும் ஆய்வாளர் கூறுவர். தாய்வழிச் சமுதாய அமைப்பில் அன்னை வழிபாடு பிரபலமடைந்திருந்தது ஆச்சரியமன்று

தொல்பழங்கால நாகரிகங்களான சுமேரிய, எகிப்திய நாகரிகங்களை விளக்கும் தொல்பொருளாய்விலும் இத்தகைய சக்தி வழிபாட்டுச் சின்னங்களை அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஐரோப்பாவிலும் பழைய காலத்திலே இனவிருத்தியின் சின்னமாகக் கருதப்படும் பெண்பாவைகள் தாய்த்தெய்வ வழிபாட்டின் சான்றுகளாகக் காணப்படுகின்றன. **சிந்துவெளி**யிலும் அதற்கு முற்பட்ட **சோப், குல்லி** முதலிய நாகரிகங்களிலும் சுடுமண் பெண்பாவைகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரிக்வேத காலத்தில்

ஆரியர்கள் ஆண்வழிச் சமுதாய மரபினைக் கொண்டிருந்தமையாற்போலும் அவர்களிடையே தாய்த்தெய்வ வழிபாடு அதிக முக்கியத்துவம் பெறவில்லை. எனினும், ரிக் வேதத்திலேயே சக்தி வழிபாட்டுக்கான மூலங்கள் சிலவற்றைக் காணமுடிகிறது. இயற்கைச் சக்திகள் யாவுமே தெய்வங்களாகப் போற்றப்படுகின்ற நிலையை ரிக் வேதத்தில் காண்கிறோம்..

வேதங்களில் முப்பத்து மூன்றுக்கு மேற்பட்ட தெய்வங்கள் வணங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் பல தெய்வங்கள் பெண்தெய்வங்களாக இருக்கின்றன. உஷை, ராத்ரி, ராகா, சினிவாலி, குங்கு, அதிதி, பிருதுவி, திதி, சுவஸ்தி, பிருஷ்ணி, புரம்தி, அனுமி, ஆப்தேவிஸ், சரஸ்வதி, வாக், ஆன்யானி, இந்திராணி, வருணானி, சசி, ரோதசி, சீதா, ஊர்வரா, ஆரணி, சிராத்த, திஷனா, ஈள, நிருதி, குன்றிதா, சூர்யா ஆகிய பெண்தெய்வங்கள் வேதகால மக்களால் போற்றி வழிபடப்பட்டமைக்கு ரிக் வேதப்பாடல்கள் சான்று பகருகின்றன. தேவீ சூக்தம், துர்க்கா சூக்தம், ராத்ரீ சூக்தம் ஆகிய வேதப் பாடல்களும் இங்கு குறிப்பிடத்தக்கன.

வாஜசநேயி சம்ஹிதை அம்பிகா பற்றிக் குறிப்பிடுகிறது. தைத்திரிய உபநிடதம், முண்டக உபநிடதம் என்பவற்றில் துர்க்கா, காத்யாயனி, கன்யாகுமரி முதலிய தெய்வங்கள் பற்றிக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கேந உபநிடதம் முழுமையாக சக்தி வழிபாடு பற்றிக் குறிப்பிடுகிறது.

## பிற்பட்ட வேத காலம்

ஆரியர்கள் கங்கைச் சமவெளியில் பரந்து ஆரியாவர்த்தம் அமைத்துச் சுதேசிமக்களுடன் கலந்தபின்னர் ஏற்பட்ட பண்பாட்டு மலர்ச்சி இவர்களின் வழிபாட்டு முறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இக்காலத்தில் வெளிப்படுத்தப் பட்டவை எனக் கருதப்படும் வேதப்பாடல்களில் துர்க்கா, உமா, அம்பிகா, காளி முதலிய பெண்தெய்வங்கள் போற்றப்படுகின்றன.

## இதிஹாச புராண காலம்

இதிஹாச புராண காலங்களில் பார்வதி, இலக்குமி, சரஸ்வதி போன்றோர் முன்னணிக்கு வருவதைக் காணலாம். இப்பெண்தெய்வங்கள் பல சந்தர்ப்பங்களில் தனித்துவம் வாய்ந்த தனிவழிபாட்டைப் பெறுவனவாக உயர்நிலை பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கங்கை, யமுனை முதலிய நதிகளும் சில நாகங்களும் பெண்தெய்வங்களாகப் போற்றப்பட்டன.

இதிஹாச புராணங்கள் தோன்றி வளர்ந்த காலமாகக் கருதப்படும் மௌரியர் - குப்தர் காலங்களில் வடஇந்தியப் பிரதேசங்கள் பலவற்றில் இலக்குமிக்கான கோயில்கள் இருந்தமையும் நாணயங்களில் இத்தெய்வ உருவம் பொறிக்கப் பட்டிருந்தமையும் தொல்பொருளாய்வினால் நிரூபிக்கப் படுகின்றன.

குப்தர் காலத்தில் திரிமூர்த்திக் கோட்பாடு முதன்மை பெற்றதுபோலவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்த நாரீஸ்வர வழிபாடும் முக்கியத்துவம் பெற்றிருக்கலாம். சிவத்திலிருந்து பிரியாத சக்தியாக சிவத்துக்கு இணையாக அம்பிகையைக் கருதிப் பிரார்த்திக்கும் பாடலாகப பின்வரும் செய்யுள் காளிதாச மஹாகவியால் இயற்றப்பட்டிருக்கிறது.

*'வாகர்த்தாவிவ சம்ப்ருக்தௌ வாகர்த்தப் ப்ரதிபத்தயே*
*ஜெகத பிதரௌ வந்தே பார்வதீ பரமேஸ்வரௌ"*

(சொல்லும் அதன் பொருளும் எவ்வாறு ஒன்றிலிருந்து ஒன்று பிரியாமலும் ஒன்றுக்கொன்று துணையாகவும் திகழ்கின்றனவோ அவ்வாறிருக்கும் உலகப் பெற்றோர்களான பார்வதி பரமேஸ்வரர்களுக்கு வணக்கம்)

**'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'** என்ற சைவ சித்தாந்த நூற்கருத்தும்

**'சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்'** என்ற பிற்காலத் தோத்திர நூலாகிய அபிராமி அந்தாதிக் கருத்தும் இங்கு ஒப்பிட்டு நோக்கற்பாலன.

இராமாயண இதிஹாசத்தின் கதா நாயகியாகிய **சீதை**யும் மஹாபாரத இதிஹாசத்தின் கதாநாயகியாகிய **திரௌபதி**யும் பிற்காலத்தில் பெண் தெய்வங்களாகப் போற்றப்படுகின்ற இயல்பும் இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது.

சக்தியை முதன்மைப்படுத்தி அவளது அற்புதம் மிகுந்த வீர தீரச்செயல்கள் அருட்செயல்கள் என்பவற்றை விளக்கும் தனி நூலாக ***தேவீ பாகவதம்*** விளங்குகிறது. சக்தியின் பல்வேறு தோற்றங்கள் அவற்றுக்கான காரணங்கள் பௌராணிக மரபில் அவை தொடர்பான கதைகள் என்பவற்றை இந்நூலில் காணலாம்.

மார்க்கண்டேய புராணத்தில் இடம்பெறும் **தேவீ மஹாத்மியம்** என்ற பகுதியும் சக்தியின் பல்வேறு தோற்றப் பொலிவுகளையும் வீர தீரச் செயல்களையும் விளக்குகிறது. எழுநூறு சுலோகங்களைக் கொண்ட இந்நூல் **துர்க்கா சப்தசதீ** எனப் போற்றப்படுகிறது. சக்தி உபாசகர்களுக்கு இது ஒரு சிறந்த பாராயண நூலாக விளங்குகிறது.

## *தமிழ் இலக்கிய மரபிலே*

தமிழ் இலக்கியங்களிலும் தமிழ் மக்களின் வாழ்விலும் தொன்றுதொட்டே சக்தி வழிபாடு பின்னிப் பிணைந்திருக்கிறது. நிலப் பிரிவுகளுக்கேற்ப இயற்கையோடு இணைந்த வாழ்க்கையையும் வழிபாட்டையும் கொண்டிருந்த சங்கத் தமிழ்மக்கள் பாலை நிலத் தெய்வமாகக் கொற்றவையை வழிபட்டனர்.

போர்த்தெய்வமாக விளங்கிய கொற்றவையைப் பாலை நிலத்தவர் மட்டுமல்லாமல் வீரம் மிகுந்த தமிழ் மக்கள் அனைவருமே வழிபட்டனர். பழையோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சுட்டப்படும் அவளது பெயரே கொற்றவையின் தொன்மையை நிருபிக்கிறது. கோதை, மோடி என்ற பெயர்களாலும் இவள் வழிபடப்பட்டமை பல்லவர் காலத் தேவாரங்களின் மூலம் அறியமுடிகிறது.

குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன் கொற்றவையின் மைந்தனாகவே கொள்ளப்பட்டான். இதனை நக்கீரர்,

**'வெற்றி வேல் போர்க் கொற்றவை சிறுவ'** எனக் கூறுவதன்மூலம் உணரலாம். இந்தக் கொற்றவையே காளி ஆவாள்.

உமையொரு பாகங்கொண்ட சிவனையும் சங்க நூல்கள் குறிப்பிடுவதனால் உமா என்ற சக்தியையும் அவர்கள் அறிந்து போற்றினர் எனக்கொள்ளமுடியும். **நீலமேனி வாலிழை பாகத் தொருவன்** என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**சிலப்பதிகாரம், மணிமேகலை** ஆகிய நூல்களை நோக்கும்போது வேறுபல பெண் தெய்வங்கள் பற்றியும் அறியலாம். நகரங்களின் காவல் தெய்வங்களாக இருந்த பெண் தெயவங்கள் பற்றிய குறிப்புக்கள் அங்கு கிடைக்கின்றன. இலக்குமி, துர்க்கை என்போர் பற்றியும் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

மாமகளு நாமகளு மாமரிடர் சென்றுகந்த
கோமகளுந் தாம் படைத்த கொற்றத்தாள் - நாம
முதிரா முலை குறைத்தாள் முன்னரே வந்தாள்
மதுரா பதி என்னும் மாது

**சிலப்பதிகாரம்** மதுரைக் காண்டம் 22ஆவது வெண்பாவாகிய இப்பாடல் பெண் தெய்வங்கள் பற்றியும் தெளிவுபடுத்துகின்றது. மதுரையாகிய நகரம் ஒரு பெண் தெய்வமாகவே உருவாக்கம் பெறுவதைக் காணமுடிகின்றது.

மணிமேகலை **சம்பாபதி** என்ற காவல் தெய்வம் பற்றியும் கூறுகின்றது. காடமர் செல்வியாகிய காளி சுடுகாட்டில் உவந்திருத்தல் பற்றியும் தெரிவிக்கப்படுகின்றது. இங்கு கூறப்படும் **சக்கரவாளக் கோட்டம்** என்பது அம்பிகையின் சக்கர வழிபாட்டின் தொடர்புடைய ஒன்றாக இருக்கக்கூடும் என ஐயுறும் சில அறிஞர்களின் கருத்தையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது. பழைய சாக்த இலக்கியங்களில் **விந்தியா வாசினி** என்ற தெய்வம் பற்றியும் காணப்படுகின்றது.

பத்தினிப்பெண் வழிபாடும் இத் தொடர்பில் சிந்திக்கத்தக்கது. பத்தினிப் பெண்களைத் தெய்வீகம் நிறைந்தவர்களாக திருவள்ளுவர் காட்டுகின்றார்.

**'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.'** என்ற குறள் இங்கு நினைவு கூரத்தக்கது. இந்த அடிப்படையிலேயே இன்றளவும் தமிழர்களால் வழிபடப்படும் ஒரு முக்கிய தெய்வமாகக் கண்ணகி திகழுகின்றாள்.

பிற்காலப் புலவர்களில் பாரதியார் ஒரு சக்தி உபாசகராக இருந்தவர். சக்தி மகிமை பற்றிப் பல்வேறு பாடல்களில் அவர் கூறுவதைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சக்தி சக்தி சக்தி என்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு' என்று அவர் பாடுகின்றார்.

## *ஈழத்தின் தொன்மைக் காலம்.*

பழைய ஈழநாட்டில் பல்வேறு நிலைகளில் சக்திவழிபாடுகள் பேணப்பட்டமையை அறிஞர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். தொல்பொருளாய்வில் பல சுடுமண் பெண் பாவைகள் கிட்டியுள்ளன.

யட்சர்களால் தாய்த்தெய்வவழிபாடு பின்பற்றப்பட்டது. பழைய யக்ஷி வழிபாட்டின் எச்சசொச்சங்களைப் பிற்காலப் பௌத்தர்களின் வழிபாட்டில் காணலாம். **சேத்திய யக்ஷி** என்னும் தெய்வம் பௌத்த பீடங்களில் போற்றப்படுகின்றது.

பண்டுகாபய மன்னன் காலத்திலேயே யக்ஷிவழிபாடு இருந்திருக்கின்றது. அநுராதபுர நகரத்தின் தெற்கு வாசலில் **சித்த** என்ற யக்ஷியும், மேற்கில் **பச்சிமராஜினி** என்ற யக்ஷியும் அவனால் காவல் தெய்வங்களாக அமைவிடம் அமைத்துப் போற்றப்பட்டன.

மற்றொரு புறத்தில் ஈழத்தின் பழங்குடி மக்களான நாகர்கள் **நாகினி** வழிபாட்டைக் கொண்டிருந்தனர். இதன் எச்சமே இன்று சிறப்பொடு விளங்கும் நயினாதீவு **நாகபூஷணி** அம்மன் வழிபாடாகும். இவ்வாலயம் மணிமேகலை என்ற பழந்தமிழ் இலக்கியத்துடன் தொடர்படையதாக இருப்பதுடன் சக்திபீடங்கள் 64 இனுள் ஒன்று எனவும் கருதப்படுகின்றது. இதற்கு ஆதாரமான தகவல்கள் **யாமளா தண்டகம், பிரபஞ்சவுற்பத்தி** என்ற நூல்களுள் கிடைத்திருக்கின்றன.

ஈழத்தில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் துர்க்கை பற்றிய குறிப்புகள் உண்டு. லட்சுமி உருவம் பொறித்த நாணயங்கள் சிலவும் தொல்பழங் காலத்தனவாகக் கிடைத்துள்ளன.

சேரன் செங்குட்டுவன் காலத்து ஈழத்து மன்னனான ......................... அக்காலத்தில் கண்ணகி வழிபாட்டை ஈழத்தில் பரப்பினான்.

## *படிமுறை வளர்ச்சி*

இவ்வாறு பாரதத்தின் வடக்கிலும் தெற்கிலும் மிகப் பழங்காலத்திலிருந்தே ஆரியர்களாலும், திராவிடர்களாலும் போற்றிப் பேணப்பட்டு வந்த சக்தி வழிபாட்டு மரபு ஈழத்திலும் நீண்டகாலமாகப் போற்றிப் பேணப்பட்டு வருகின்றது.

இந்த மரபுமுறை காலத்திற்குக் காலம் ஏற்பட்டுவந்த சிந்தனையாளர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பப் பல்வேறு படித்தரங்களில் பல்வேறுவிதமாக உருமாற்றம் பெற்று வந்திருகின்றது. வடக்கும் தெற்கும் இணைந்த நிலையில் ஆரிய திராவிட நாகரிகங்கள் கலந்து பல்வேறு தெய்வ வழிபாட்டு முறைகள் ஒப்பீட்டடிப்படையில் ஒற்றுமை காணப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டதுபோலவே சக்தி வழிபாட்டின் பல்வேறு பரிணாமங்களும் ஞானிகளால் ஒப்பு நோக்கி இணைக்கப்பட்டன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தத்துவ சிந்தனைகள் புதிது புதிதாகக் கிளர்ந்தெழுந்து அவற்றின் அடிப்படையில் பல்வேறு சமய வழிபாட்டு மார்க்கங்கள் உருவாக்கம்பெற்று வழிபாட்டு நெறி, வாழ்க்கை நெறி, கலைமரபு, தத்துவசிந்தனை என்பன யாவும் ஒருங்கிணைக்கப்படும் நிலையில் பரம்பொருளாகிய பரமாத்மாவின் பேரருட்சக்தியான கருணைப்பிரவாகமே சக்தி என்னும் உயர் ஞான விளக்கம் சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்டது.

எல்லாச் சமயநெறியாளர்களும் தத்தமது இறைமை மிக்க பெருந்தெய்வத்தின் அருட்சக்திக்குத் தாய்மைப் பண்பைக் கொடுத்துப் பெண்வடிவமாக உருவம் கொடுத்து வழிபடுகின்ற நிலை இந்துநாகரிக மரபின் இணையற்ற சக்தி தத்துவமாக எழுச்சி கண்டது.

## *அறுவகைச் சமயநெறிகள்.*

வைஷ்ணவ மரபிலே மஹாவிஷ்ணு என்னும் ஸ்ரீமந் நாராயண பரப்பிரமத்தின் சக்தியாகிய மஹாலட்சுமித் தாயார் பெரிய பிராட்டியார் என அழைக்கப்பட்டு வழிபடப்படுகின்றாள். **சேஷித்வம்** (நாராயண பரம் பொருள் தவிர்ந்த அனைத்தையும் தனக்குடைமையாக ஆளுதல்) **புருஷகாரம்** (ஆன்மாக்களுக்குப் பரிந்துரை செய்தல்) ஆகிய வைஷ்ணவ மரபுகளே அங்கு காணப்படும் சக்திவழிபாடடின் பெருமைக்கு எடுத்துக்காட்டு.

காணாபத்திய நெறியில் கணபதி பிரமச்சாரி என்ற கருத்துநிலைக்கு அப்பால் **வல்லபாம்பா** சமேத விக்கினேஸ்வரர் என்றும் **சித்தி புத்தி** விநாயகர் என்றும் சக்திகளோடு போற்றப்படும் நிலை கவனிக்கத்தக்கது.

கௌமாரநெறியிலே **இச்சை, கிரியை** இரண்டும் பெண்வடிவமாக்கப்பட்டு குமரப் பெருமானுடன் கூடிய சக்திகளாக வள்ளி, தெய்வயானை என்று வணங்கப் பெறுகின்றனர்.

சௌர நெறியிலே சூரியனின் மனைவியராக **சாயா, சம்ஜ்ஞா** அல்லது **உஷா, பிரத்யுஷா** ஆகியோர் உருவகிக்கப்படுகின்றனர்.

சைவ சித்தாந்தத்திலே மற்றெல்லா மதநெறிகளையும் கடந்த நிலையில் சக்தியானவள் உயர்தனிச் சிறப்பைப் பெறுகிறாள்

**'அருளது சக்தியாகும் அரன்தனக் கருளையின்றி**
**தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சக்தியில்லை'**

**'சிவம் சக்தி தன்னையீன்றும் சக்திதான் சிவத்தை ஈன்றும்**
**உவந்திருவரும் புணர்ந்திங் குலகுயிரெல்லா மீன்றும்'**

என்று **அருணந்தி சிவாச்சாரியார்** சக்தியின் பெருமையைக் கூறுகின்றார்.

**'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'** என்று உமாபதி சிவாச்சரியார் கூறுவதற்கிணங்கப் பரசிவத்துடன் பிரிவின்றிக் காணப்படும் பராசக்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்'** என அருணந்தி சிவாச்சாரியார் கூறியதற்கு இணங்கப் பல்வேறு வடிவங்கள் தாங்கி நிற்கின்றாள்.

நவந்தரு பேதங்கள் என்ற நிலையில் பரசிவத்தின் அடுத்த நிலையில் நிற்கும் பராசக்தியானவள் படிப்படியாகக் கிழிறங்கி மனோன்மணி, மகேஸ்வரி, உருத்திராணி, நாராயணி, பிராமி, (பிரம்மாணி) என்ற வடிவங்களைப் பெற்றுப் பஞ்ச கிருத்தியங்களை ஆற்றத் துணை செய்கின்றாள்.

சிவாகம மரபில் கூறப்படும் இதே சக்தியை கௌரி, பாலா, திரிபுரசுந்தரி, உமா, மீனாட்சி, புவனேஸ்வரி, துர்க்கா, இலக்குமி, சரஸ்வதி, அபிராமி, மஹாமாரி, சாமுண்டி, காளி, சண்டி என்றிவ்வாறு பல்வேறு தோற்றங்களில் வழிபடுகின்றனர் சக்தி உபாசகர்கள்.

சிவாகமங்கள், இத்தகைய சக்தித்திருவுருவங்கள் பலவற்றை உருவாக்கும் முறைகள் பற்றியும் பிரதிஷ்டை மற்றும் வழிபாட்டுமுறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கின்றன. சிற்ப சாஸ்திர நூல்களும், கிரியா பத்ததி நூல்களும் முறையே அம்பிகையின் திருவுருவங்களை வடித்தெடுக்கும் முறைகள் பற்றியும் அவற்றைப் பிரதிஷ்டை செய்து ஆராதனை செய்வது பற்றியும் விளக்கி நிற்கின்றன.

## *சாக்த நெறிமுறையில்*

இவை ஒரு புறமிருக்க, சக்தியே பரம்பொருளென்று சாதித்து அதன் தனித்துவமான வழிபாட்டுநெறிகளை விரித்துக்கூற எழுந்தவை சாக்த தந்திரங்களாகும்.

**சுபாகம பஞ்சகம்** எனப்படும் சாக்த தந்திரங்களான **வசிஷ்ட சம்ஹிதை, சனக சம்ஹிதை, சனந்தன சம்ஹிதை, சனற்குமார சம்ஹிதை, சுக சம்ஹிதை** ஆகிய ஐந்தும் வித்யா உபாசனை என்னும் சமய மார்க்கமான சக்தி வழிபாட்டு முறைகளை வகுத்துக் கூறுகின்றன. **தட்சிணாசாரம்** என இம்மார்க்கம் அழைக்கப்படும்.

**வாமாசாரம்** எனப்படும் **கௌலமார்க்க** முறைகளை எடுத்துரைப்பனவாக வேறு அறுபத்துநான்கு தந்திரங்கள் உள்ளன. (**குலார்ணவ தந்திரம், மஹாநிர்வாண தந்திரம்** முதலியன.)

இவற்றைவிட, இவற்றின் இணைப்பினால் சம்மேளன மார்க்கமாகக் கூறப்படும் மிஸ்ரமார்க்க தந்திரங்களான எட்டுத் தந்திரங்களையும் சேர்த்து எழுபத்தேழு தந்திரங்கள் சக்திவழிபாட்டின் ஆதார நூல்களாக உள்ளன. சாக்த நெறியினர் வேதங்களைப் பொது நூலாகவும் இத் தந்திரங்களைச் சிறப்பு நூல்களாகவும் கொள்கின்றனர்.

**நவாட்சரீ, பஞ்சதசாட்சரீ, ஷோடசாட்சரீ** முதலிய உபதேச மந்திரங்கள் சக்தி உபாசனைக்குரிய மந்திரங்களாகும்.

## *ஸ்ரீ சக்கர வழிபாடு.*

ஸ்ரீ சக்கரம் என்பது சக்தியை வழிபடப் பயன்படும் சிறப்பான யந்திரமாகும். நவாவரணம் எனப்படும் ஒன்பது ஆவரணங்களை ஒன்பது பீடங்களாக கொண்ட நாற்பத்து முக்கோணங்களைக் கொண்ட இந்த **சக்ரராஜம்** எனப் போற்றப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சக்கரமானது ஒரே பரிமாணமாகத் தகட்டிலே அமைக்கப்படும் பூபிரஸ்தாரமாகவும் முப்பரிமாணமாக அமையும் அர்த்த மேருவாகிய கைலாசப் பிரஸ்தாரமாகவும், அதே முப்பரிமாண நிலையில் அமையும் மேருபிரஸ்தாரமாகவும் மூன்று நிலைகளில் உருவாக்கப்படும்.

மகாமேரு மலையின் மூன்று சிகரங்களின் மத்தியில் அமைந்த ஸ்ரீநகரமென்னும் தேவியின் வாசஸ்தலத்தில் இந்த ஸ்ரீ சக்கரம் அமைந்திருப்பதாகப் பாவித்து 64 குப்த யோகினிகள், பிரகட யோகினிகள், சக்கரேஸ்வரிகள் முதலிய பரிவார சக்திகள் சகிதமாக அந்த ஸ்ரீசக்கர மத்தியிலுள்ள பிந்துஸ்தானமென்னும் சர்வானந்தமயபீடத்தில் காமேஸ்வரனது மடியில் அமர்ந்து அருள்பவளாக சக்தியைப் பூஜிப்பதே ஸ்ரீவித்யா பூஜையின் தாத்பரியமாகும்.

## *சக்தி உபாசகர்களும் சக்தி வழிபாட்டு நூல்களும்.*

சக்தி உபாசனையில் திழைத்து மகிழ்ந்து பேரின்பநிலை எய்தியவர்களாக ஹயக்ரீவர், அகஸ்தியர், லோபாமுத்திரை, துர்வாசர், ஸுகர், காளிதாசர், கம்பர், அபிராமிப் பட்டர், குமரகுருபர சுவாமிகள் முதலியோரைக் குறிப்பிடுவர்.

தேவி மஹாத்மியம் என்னும் சப்தசதி, லலிதாத்விசதி என்னும் ஸ்தவரத்னம், லலிதா த்ரிசதி, லலிதா சகஸ்ரநாமம், தேவி உபநிஷத், பாவனோபநிஷத், தேவீ பாகவதம், சௌந்தர்யலஹரீ, அபிராமி அந்தாதி, மதுரை மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ் (குமரகுருபரசுவாமிகள்), சரஸ்வதி அந்தாதி (கம்பர்) முதலியனவும் ஸ்யாமா சாஸ்திரிகள், மற்றும் முத்துசுவாமி தீட்சிதர் முதலியோரின் கீர்த்தனைகளும் பாரதி பாடல்களும் சக்தி உபாசகர்களுக்கு உதவும் சமஸ்கிருத, தமிழ்ப் பிரார்த்தனை நூல்களாகும்.

தத்தாத்திரேய சம்ஹிதை, பரசுராமகல்பம், உமாநந்தரின் நித்யோத்ஸவம், பாஸ்கராயரின் வரிவஸ்யாரகஸ்யம் என்பன சாக்த வழிபாட்டை விளக்கும் பத்ததி நூல்களில் முக்கியமான சிலவாகும்.

## *கிராமியமரபில்:*

இத்தகைய ஆகம நெறிமுறைப்படுத்தப்பட்ட சாக்த வழிபாட்டு முறைகளைவிட பக்தி மார்க்கமான கிராமிய வழிபாட்டு முறைகளிலும் சக்தி வழிபாடு நிலை பெற்றிருக்கின்றது. சமூவியலாளர் கருத்தின்படி இந்த வழிபாடே தொன்மையானதாகும். உருவங்கள் வைத்தோ அன்றி வெறும் அடையாளச் சின்னமான சூலம் அல்லது கல் போன்றவற்றை வைத்தோ அல்லது எதுவும் இல்லாமல் வெறும் மரநிழலிலோ அம்பிகையை நினைத்துப் பொங்கல், படையல், குளிர்த்தி, பலி முதலியவற்றுடன் வழிபட்டுச் சாமி ஏறப் பெற்று உருஆடல் முதலியவற்றுடன் வழிபடும் இந்தக் கிராமிய முறை பாமர மக்களால் விரும்பி அனுசரிக்கப்படுகின்றது.

இம்முறையில் காளி, முத்துமாரி, எல்லையம்மன், நாச்சிமார்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுடலையம்மன், கண்ணகை, திரௌபதி முதலிய தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இவ்வழிபாட்டு முறையிலிருந்து பலியிடும் வழக்கம் அறிவுசார் நிலையில் படிபடியாக விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஏனைய முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுத் திருவுருவங்கள் வைத்துக் கட்டடங்கள் கட்டி ஆகம வழிபாட்டு முறையாகத் தரமுயர்த்தப்பட்ட ஆலயங்கள் அநேகம்.

இரண்டும் கலந்த முறையில் அதாவது ஆகமரீதியில் தரமுயர்த்திக் கோயில் கட்டித் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டபின் அவ்வப்போது ஆகமரீதியான நைமித்திக பூஜைகள் நடைபெற, நாளாந்தம் பொங்கல், படையல்களும், ஆடல் பாடல்களும் கூட்டுப்பிராத்தனையும், நடைபெறும் ஆலயங்களும் உண்டு.

கிராமிய மரபிலமைந்த அம்மன் கோயில்கள் பல இருப்பது மட்டுமல்லாமல் வைரவர், அண்ணமார், காத்தவராயன், சுடலைமாடன், கருப்பண்ணசாமி முதலிய கோயில்களிலும் அருகிலேயே இன்னொரு சூலம் அல்லது கல்வடிவில் சக்தியை வழிபாடு செய்வதை அவதானிக்கலாம்.

இவ்வாறு எவ்வகையில் நோக்கினாலும் நமது இந்து நாகரிக மரபில் சக்தி வழிபாடும் சக்தி தத்துவமும் இணைபிரியாது பொருந்தியிருப்பதோடு மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் இருப்பதை மறுக்க முடியாது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 251106

# அருட்சக்தி ஆலயத்தில் நிறைவது எவ்வாறு?

கும்பாபிஷேகம் என்பது கும்பத்தினால் அபிஷேகம் செய்தல் என்ற கருத்தை உடைய ஒரு வடமொழிச் சொல். கும்பம் என்பது இறைசொரூபமாக பாவனை செய்யப்படும் நிறைகுட வடிவம். சர்வ தேவதா ஸ்வரூபம் என ஆகமங்கள் கும்பத்தினை விவரிக்கும். அதாவது எந்த ஒரு தெய்வத்தையும் நாம் கும்பத்தில் ஆவாஹனம் செய்து வழிபடலாம். அவ்வாறு கும்பத்தில் எழுந்தருளச்செய்து வழிபட்ட இறைவனை, ஆலயத்தின் கருவறையில் அமைக்கப்பட்டிருக்கும் அவனது திருவுருவத்திற்கு அபிஷேகம் செய்வதன்மூலம் அங்கு அவனை நிலையாகக் குடியிருக்கச்செய்து தினமும் இறைவழிபாட்டை நாம் நடத்துகிறோம். இதுவே கும்பாபிஷேகம் என்பதன் விளக்கமாகும்.

ப்ரதிஷ்டை என்ற ஒரு சொல்லும் கும்பாபிஷேகத்தை உணர்த்துவதாகும். 'திஷ்ட்' என்ற வினையடி நிற்றல் என்ற பொருளையுடையது. 'ப்ர' என்ற உபசர்க்கத்தோடு இவ்வேர்ச்சொல் இணைந்து நன்கு நிலை நிறுத்துதல் என்ற பொருளையுடைய ப்ரதிஷ்டை என்ற சொல்லைத் தருகிறது.

ஒரு நாமம், ஓருருவம் இல்லாமல் எங்கும் பரவியிருக்கின்ற எல்லாம் வல்ல அந்தப் பரம்பொருட்சக்திக்கு ஏதோ ஒரு பெயரைக் கொடுத்து அதற்கேற்ற உருவ அமைப்பையும் கற்பித்து வழிபடுகிறோம். அந்த உருவத்தில் இறைசக்தி எழுந்தருளி இருப்பதாக பாவனை செய்து அந்த உருவத்துடன் நாம் அன்புடன் உறவாடி அதற்குரிய உபசாரங்களை வழங்கி மனநிறைவடைகிறோம். நமது துன்ப துயரங்களை அந்த உருவத்தோடு பகிர்ந்துகொண்டு மன அழுத்தங்களைக் குறைத்துக் கொள்கிறோம். இறைவன் அந்த உருவத்தினூடாக அருளாகிய தமது சக்தியை எமக்கு வழங்குகிறான் என்ற எதிர்பார்ப்போடு, அந்த அருட்சக்தி காரணமாக நமது துயரங்கள் அகன்று நாம் புதிய சக்தி பெற்று இவ்வுலக வாழ்க்கையில் சகல நலங்களும் அடைந்து இன்புறலாம் என்பது எமது நம்பிக்கை. இவ்வுடல் நீத்தபின் அந்தப் பரம்பொருட் சக்தியோடு ஒன்றிணைந்து பேரானந்த நிறைவை அடையலாம். இந்த நம்பிக்கைகள் என்றும் அடியவர்களுக்கு மனச்சாந்தியை வழங்க வல்லவை.

எனவே, எங்கும் பரவியிருக்கும் அந்தப் பரம்பொருட்சக்தியை கும்பத்திலே எழுந்தருளச்செய்து பின் அதனை அபிஷேகம் செய்வதன்மூலம் திருவுருவத்திலே எழுந்தருளியிருந்து நிரந்தரமாக எமக்கு அருள்தர வேண்டுவதே கும்பாபிஷேகத்தின் நோக்கம்.

பக்தி இலக்கியங்கள் வர்ணிப்பது போலவும், நாம் நமது மனக்கண்ணிலே கற்பித்து வைத்திருப்பதுபோலவும் திருவுருவத்தை அவன் கொண்டிருக்கிறானோ இல்லையோ, அளவற்ற கருணையையும் சக்தியையும் அவன் கொண்டிருக்கிறான் என்ற கருத்தை எந்த ஒரு விஞ்ஞானியோ, அறிவியலாளனோ மறுக்கமுடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இறைவன் பெரியவற்றிற்கெல்லாம் பெரியவன். நுண்மையானவற்றுள் மிக நுண்மையானவன். அவனது அருட்பேற்றிற்கு ஒப்புவமை கூறமுடியாது. அதாவது 'வரையறுத்துக் காட்டமுடியாதவன்' என்பதே அவனுக்கு வரைவிலக்கணம். அத்தகைய ஒரு சக்தியை அறிவியலாளர்கள் எவ்வாறு ஒப்புக்கொள்வர் என்பது சிலருக்கு ஐயமாக இருக்கலாம். மின், அல்லது இலத்திரனியல் சக்திகளை ஏற்று அவற்றின் வலிமையைப் புரிந்துகொண்டு அந்தச் சக்திகளைத் தமக்கு வேண்டிய வகையில் ஒலிச்சக்தியாகவோ, ஒளிச்சக்தியாகவோ, வெப்ப சக்தியாகவோ, காந்த சக்தியாகவோ நாளாந்தம் பயன்படுத்திக்கொண்டிருக்கும் எந்த ஒரு மனிதனும் இப்படி ஒரு 'மஹாசக்தி' நம்மை ஆண்டுகொண்டிருக்கும் ஆண்டவனாக இருப்பதை மறுக்கமுடியாது.

இயற்கையாக எங்கும் சக்தி நிறைந்திருப்பதை நாம் காணுகின்றோம். எல்லா இயற்கைச் சக்திகளுக்கும் மூலசக்தியாக, யாவற்றுக்கும் நடுநாயகமாக நின்று அனைத்தையும் இயக்குகின்ற மூலப்பொருள் சூரியன். அதன் ஒளிச்சக்தியையும் வெப்ப சக்தியையும் யார் மறுப்பார்? பூவுலகிற்கு உயிர்கொடுக்கும் சூரியனை யாவற்றுக்கும் முதற்பொருளாக ஏற்றுப் போற்றுகிறது காயத்ரி என்னும் வேதமந்திரம்.

"இப்பூவுலகம், மேலுலகம், கீழுலகம் என்ற மூவுலகங்களையும் இயக்கி, யார் நமது அறிவைத் தூண்டிநிற்கிறாரோ, அந்த ஒளிக்கடவுளுக்கு வந்தனம்"

வேதம் என்னும் மறைபொருட் பாடல்களைப்பயன்படுத்தி இயற்கை தந்த அக்னியிலே இயற்கை தந்த விளைபொருட்களை இட்டு யாகங்கள் செய்து மகிழ்ந்தனர். வேள்வித் தீயில் அவை எரிந்து மறைந்தபோது அங்கு மாற்றீடாக உண்டாகும் புகையும் வாசனையும் பெரும் சக்தியை வெளிப்படுத்தும் என்பதைக் கண்டறிந்தனர். வெளிப்படையாக மட்டுமன்றி கதிர்வீச்சுக்களாகவும், அலைவடிவங்களாகவும்கூட சக்தியை வெளிப்படுத்துகின்றன என உணர்ந்தனர்.

ஆகமங்கள் தோன்றின. இந்த அருட்சக்தியை நாம் அகப்படுத்தினால் என்ன என அவை ஆராய்ந்தன. "பக்தி வலையில் படுவோன் காண்" என்பதற்கிணங்க, மந்திரசக்தி, மனோசக்தி ஆகியவற்றால் அந்தப் பேரருட் சக்தியை ஒரு சிறிய திருவுருவத்தினுள் அடக்கி, ஆலயம் ஒன்றினுள் பாதுகாத்துவைத்துப் பேணவும் வேண்டியபோது நாம் அந்த அருட்சுரப்பை அனுபவிக்கவும் ஆகமங்கள் வழிசமைத்தன.

வானியலை ஆராய்ந்து சோதிடம் கண்டும் கணிதவியலை ஆராய்ந்து சிற்பம் அமைத்தும் ஒலியியலை ஆராய்ந்து மந்திரங்களைக் கண்டறிந்தும் ஆலயங்கள் அமைத்து அங்கு திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்து மந்திரங்கள் ஓதிக் கிரியைகள் செய்து வழிபாடு செய்யும் மரபு மலர்ச்சி பெறலாயிற்று. ஆலயம் அமைத்து வழிபடும் அந்த ஆகம மரபில், வேதம் ஓதி எரியோம்பும் வேதகால வைதிக மரபும் கைவிடாது பேணப்படலாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைச் சக்தியின் மூலங்கள் ஐந்து எனக்கண்டறிந்து பஞ்சபூதங்கள் என அவற்றை அழைத்தனர். (B)பூ - ஆகுதல், உருவாகுதல். பூதம் - உருவாக்கம். எப்பொருளை எடுத்தாலும் பிருதுவி, அப், தேயு, வாயு, ஆகாசம் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) என்ற அந்த ஐந்து மூலப் பொருட்களாலேயே ஆக்கப்பட்டிருக்கும். அதனாலேயே அவை பஞ்ச பூதங்கள் எனப்பட்டன. பஞ்சபூதங்களின் திரட்சி என்பதனால் பிரபஞ்சம் என இந்த சூரியக் குடும்பம் அழைக்கப்படலாயிற்று.

இயற்கைச் சக்தியை வசப்படுத்த இயற்கைப் பொருட்களே தேவை என உணர்ந்த முன்னோர், பஞ்சபூதங்களின் அடிப்படையிலேயே ஆலயக் கிரியைகளை அமைத்தனர். பூத நாயகன் என இறைவனைப் போற்றினர். கிராமிய மரபில்கூட, பூதராயர் வழிபாட்டை இன்றும் காணலாம். பஞ்சபூதத் தளத்தைக் கடந்து இன்னும் கொஞ்சம் விரிந்த நிலையில் சிந்திக்கும்போது அட்ட மூர்த்திகள் கும்பாபிஷேகக் கிரியைகளிலும் சைவ சித்தாந்த தத்துவத்திலும் முக்கிய இடம் பெறுவதைக் காணலாம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களுடன் சூரியன், சந்திரன், எஜமானன் (ஆன்மா) என்னும் மூன்றையும் சேர்க்கும்போது அட்ட மூர்த்திகள் உருவாகின்றனர். இறைவன் அட்டமூர்த்திகளின் வடிவமாக இருக்கிறான் என்பதைத் சைவத் திருமுறையாளர்கள் பல இடங்களில் தொட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

மின்னலைக்கண்டு பயந்தனர் நமது முன்னோர்கள். பின்னர் அதனைத் தெய்வ சக்தியாக்கி வியந்தனர். விஞ்ஞானி அந்த மின்னலிலிருந்து மின்சாரத்தைக் கண்டுபிடித்தான். மின்சார சக்தியை உண்டாக்குவது இலகுவானதா? அதற்காக எத்தனை விதமான பொருட்கள் அதற்குரிய அளவுப் பிரமாணங்கள் தப்பாமல் உரிய முறைப்படி நியமிக்கப்பட்டு அதற்கான செயற்பாடு சரியான முறையில் நிகழ்த்தப்படும்போது மின்சாரம் தோன்றுகிறது. அதுபோல பிரபஞ்சத்தின் அடிப்படை மூலகாரணமாக அண்டவெளியெங்கும் பரந்தும் நிறைந்தும் கரந்தும் இருக்கின்ற பேரருட் சக்தியைச் சுரக்கச்செய்து அதனை நமக்கு வேண்டிய வடிவத்தில் நமக்குரிய இடத்தில் பெறுவதற்கு ஏகப்பட்ட செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. அவைதான் கும்பாபிஷேகக் கிரியைகள்.

மின்சாரத்தைக் கையிலே கொண்டுவர முடியாது. கம்பிகள் வேண்டும். கம்பிக்குக் காவலிடப்பட்டிருக்கவேண்டும். மின்சாரத்தின் அளவு அதிகமாகும்போது அதனைக் கையாள்வதில் அதிக கவனம் தேவையாகிறது. கையாளும் கம்பி, சேமிப்புக்கலம் முதலியவையும் அதற்கேற்ப அவதானமாகத் தயாரிக்கப்படுகின்றன. கையாள்பவர் தம்மைக் காவலிட்டுப் பலப்படுத்திக் கொள்கிறார். அதன் செயற்பாடு புரியாதோர் எழுந்தமானமாகக் கையாளமுற்பட்டால் எதிர்விளைவுகள் ஏற்படும். சாதாரண மின்சக்திக்கே இவ்வளவு ஏற்பாடென்றால் பிரபஞ்சத்தையே இயக்கிக்கொண்டிருக்கும் திருவருட்சக்தியைக் கையாள்வதில் எவ்வளவு முன்னாயத்தங்களும் கவனமும் தேவை என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சக்தியை ஆவாஹனம் செய்துவைக்கப்படும் திருவுருவங்கள் நல்லமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கருங்கல்லாக இருக்கவேண்டும். (ஆண்கல், பெண்கல், அலிக்கல் என்ற பேதங்களும் அவை பெறப்படும் இடங்களும் முக்கியம்) அல்லது சரியான முறையில் கலக்கப்பட்ட உலோகக் கலவையாக (பஞ்சலோகம்) இருக்கவேண்டும். அவை ஆகமங்களில் சொல்லப்பட்ட அளவுப்பிரமாணங்களில், அதற்கேற்ற அங்கலட்சணங்களுடன் உரிய ஆடை அணிகலன்கள், ஆயுதங்களுடன் செதுக்கப்பட்டு அல்லது வார்க்கப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். இந்தச் சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பாசாரி எனப்படுகிறார். அவருக்கென்று சில நியமங்கள், ஒழுக்கங்கள், பாரம்பரியக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. சிலையின் விதிமுறைகள் மட்டுமல்லாமல் சிலை செய்யப்படுபவரின் விதிமுறைகளும் சிலையின் சக்தியை நிர்ணயிக்கும். செய்யப்படும் திருவுருவை மனத்தில் கற்பனை செய்து அதன் தியான சுலோகத்தை உச்சரித்தவராக, அத்திருவுருவில் லயித்த மனதுடையவராக அவர் அச்செயலில் ஈடுபடும்போது அவரது எண்ண அலைகள் இயல்பாக அந்தச் சிலையின் உருவாக்கத்திற்கு உதவுகின்றன. சிலை செய்யப்படும் சிற்பாலயத்திலும் அத்தகைய புனிதமான அலைகளும் கதிர்வீச்சுக்களும் இருக்கவேண்டும்.

திருவுருவை ஸ்தாபித்து வழிபாடியற்றும் ஆலயமும் சிற்பாசாரியினால் முன்சொன்ன வகையிலே உருவாக்கப்படுகின்றன. அதற்கென்று அளவுப் பிரமாணங்களும் அமைப்பு விதிகளும் ஆகமங்களிலே வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆகமங்களின் வழிநூல்களான சிற்ப சாஸ்திரங்கள் இவ்விதிமுறைகளை விரித்துக் கூறுகின்றன. மூன்றுபுறமும் மூடப்பட்டு முன்புறம் மட்டும் திறந்ததாகக் கருவறை அமைக்கப்படுகிறது. மேலே விமானம் அமைகிறது. ‘மான’ என்பது அளவைக் குறிக்கும். விமான என்பது மிகவும் துல்லியமான அளவு எனக் கருதலாம். எனவே விமானம் அமைக்கும்போது கவனிக்கவேண்டிய அளவுப்பிரமாணங்களின் முக்கியத்துவத்தை அச் சொல்லின் பொருளே குறித்து நிற்பதைக் காணலாம். வான் நோக்கி உயர்ந்து, குவிந்து கூம்பியிருக்கும் கோபுரங்களாக அவை அமைந்திருப்பதுடன் உச்சியில் உலோகக் கலசங்களையும் கொண்டிருக்கும். நாற்றிசையில் முப்புறமும், மேல், கீழ் ஆகிய பகுதிகளும் கருங்கல்லினால் (அல்லது வெள்ளைக்கல், அதமபட்சமாகச் செங்கல்) அமைக்கப்படுவது அதிர்வுகளையும் கதிர்வீச்சுக்களையும் நெறிப்படுத்தி ஒலி, ஒளி, முதலிய புறச்சக்திகளையும் திருவருட்சக்தியாகிய அகச்சக்தியையும் உள்வாங்கிச் சேமித்து வைத்திருந்து முன்புற வாயிலினூடாக அளவறிந்து வெளிவிடுவதற்காகவே. ஆகாய வெளியில் பரந்து நிறைந்து மறைந்திருக்கும் பிரபஞ்ச சக்தியாகிய இறையருட்சக்தியை மேல்நோக்கிக் குவிந்து கூர்மையாக நிற்கும் உலோகப் பொருளாகிய கலசங்கள் தாங்கிய விமானம் என்னும் ஸ்தூபி ஈர்த்துக் கீழேயுள்ள திருவுருவத்தில் சேமிக்கின்றது.

தாம்ர விக்கிரகம் எனப்படும் பஞ்சலோகத் திருவுருவங்கள் ‘சபை’ என்ற பெயரில் தனியான சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும். இவை எழுந்தருளிகள் அல்லது உற்சவ மூர்த்திகள் எனப்படும். இவை விழாக்களின்போது வீதி உலாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளுகின்றன. சக்தியைத் தற்காலிகமாகச் சேகரித்து உடனுக்குடன் வெளிவிடுவதன் மூலம் எல்லா வெளியிடங்களிலும் சக்திக் கதிர்வீச்சினை இவை ஏற்படுத்துகின்றன.

ஆண்டவனை நமக்கு அருகிலிருத்துவதற்கான ஆயத்தங்கள் இவ்வாறு விக்கிரக உருவாக்கத்துடனும் ஆலய நிர்மாணத்துடனும் நிறைவடைந்தபின் அத்திருவுருவில் அருட்சக்தியை உட்புகச்செய்வதற்காக (ஆவாஹனம்) கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறுகின்றன.

பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் சக்தியை ஒருங்கு குவிப்பதற்கு ஐம்பூதங்களினூடான படிமுறைக் கிரியைகள் உதவுகின்றன. சூரிய சக்தியைப் பூதக் கண்ணாடியூடாகக் குவித்து அதன்சக்தியை ஒருங்கு சேர்ப்பதன்மூலம் பஞ்சினை எரிப்பது போன்றதே இது என விளங்கிக்கொள்ளலாம்.

"பிரம்மண ஆகாசாத் சம்பூதஹ
ஆகாசாத் வாயுஹு
வாயோர் அக்னிஹி
அக்னேர் ஆபஹ
அத்ப்யஹ் ப்ருதுவீ" என்பது உபநிடத வாக்கியம்.

"பிரம்மமானது ஆகாயத்திலிருந்து தோன்றி, வாயுவுக்கும் வாயுவிலிருந்து அக்னிக்கும், அக்னியிலிருந்து தண்ணீருக்கும், தண்ணீரிலிருந்து நிலத்திற்கும் படிப்படியாக இறங்கி வருகிறது" என்பதே இதன் விளக்கமாகும்.

ஆகாயம் என்பது காட்சிக்கும் தொடுகைக்கும் அப்பாற்பட்ட பரவெளி மட்டுமே. அதன் அடுத்த நிலையாகிய காற்று தொடுகைக்கு உட்படுமெனினும் கட்சிக்கு அடங்காதது. அடுத்த நிலையாகிய தீ தொடுகைக்கும் காட்சிக்கும் உட்பட்டதே எனினும் தொட்டுணர்வதற்கு அப்பாற்பட்ட சக்தியை உடையது. நான்காம் நிலையிலுள்ள நீர் தொடுகைக்கும் காட்சிக்கும் உடன்படுவதாகவும் நமது இலகுவான பயன்பாட்டுக்குரியதாகவும் இருப்பினும் நிலையான வடிவத்தை அது பெறுவதில்லை. இறுதிநிலையாகிய பூமி (நிலம் என்னும் தரையில் பெறப்படும் மண், கல், உலோகம் என்பன) எல்லா வகையிலும் எமக்கு உகந்ததாக, வேண்டிய உருவைப் பெறவல்லதாக உள்ளது.

இதேபோல மந்திரங்களின் அதிர்வுகள் பிரபஞ்ச சக்தியை ஈர்க்கும் தன்மையுடைய ஒத்த அதிர்வுகளைக் கொண்டிருக்கின்றன. அவை கதிர்வீச்சுப்போல பேரருட்சக்தியைக் கும்பத்திலும் அக்கினியிலும் விக்கிரகத்திலும் கொண்டுவந்து சேர்க்கத்தக்கன.

பிரதிஷ்டையில் அக்கினி, கும்பம், விக்கிரகம் ஆகிய மூன்று இடங்களிலும் திருவருட்சக்தி பொலிவுற்று விளங்குகிறது. இறுதியில் அக்கினியிலுள்ள சக்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்ப நீரில் சேர்க்கப்பட்டு அது அபிஷேகத்தின்மூலம் விக்கிரகத்திலே சேர்க்கப்படுகிறது.

அக்கினி அளவற்ற சக்தி வாய்ந்தது. ஆக்கவும் அழிக்கவும் வல்லது அது. நமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை உருவாக்கித் தருவதும் அது. நம்மையே அழித்துவிடுவதும் அக்கினியே. எந்த அசுத்தத்தையும் தூய்மைசெய்யும் சக்தியும் அதற்குண்டு. பிரபஞ்சத்தையே இயங்கச்செய்யும் மூலப்பொருளாக நடுவில் நின்று சுழன்றுகொண்டிருக்கும் கூரியன் ஓர் அக்கினிக் கோளமன்றோ? அதனால்தான் ஆதியிலிருந்து இன்றளவும் அக்கினி ஓர் தெய்வ சக்தியாக யாவராலும் வணங்கப்படுகிறது. அத்தகைய அக்கினி மூலமாகவே நாம் அருட்சக்தியைச் சேகரிக்க முற்படுவது பொருத்தமானதல்லவா?

எனவே, ஒன்றிலிருந்து முப்பத்துமூன்று குண்டம் வரை ஓமகுண்டங்களை யாகசாலையில் அமைத்து அங்கு எரியோம்பி அவற்றில் ஒவ்வொரு சக்திகளைத் தனித்தனியே வருவித்துப் பின்னர் அவை யாவற்றையும் பிரதான குண்டமாகிய ஒரு குண்டத்திலே சேர்த்து அதைப் பிரதான கும்பத்து நீரிலே சேர்த்து அதையும் அபிஷேகம் மூலம் விக்கிரகத்திலே சேர்க்கின்றோம்.

எல்லாமே 'டிஜிற்றல்' மயமாக இருக்கும் இன்றைய உலகில் அதன்மூலம் நாம் இதனை விளங்கிக்கொள்ள முயற்சிக்கலாம். மின் அஞ்சல் மூலம் நாம் ஒரு விடயத்தை அனுப்பும்போது ஒரே தடவையில் அனுப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அதனைப் பல பகுதிகளாகப் பிரித்து அனுப்புகின்றோம். பெறுபவர் பின்பு அவற்றை ஒன்று சேர்க்கிறார்.

மேலும், கணினியில் படங்களை உருவாக்கும்போது புள்ளிகளின் செறிவு அதிகரிக்கும்போது அவை துல்லியமானவையாக அமைவதைக் காணலாம். குறைந்த புள்ளிகள் உடைய படங்கள் கையாள இலகுவாக இருப்பினும் அவை செறிவு குறைந்தவையாக இருப்பதால் அதிக அழகுடன் காணப்படுவதில்லை.

இதே தத்துவம்தான் யாக குண்டங்களிலும் காணப்படுகிறது. அருட்செறிவு அதிகமாக இருக்கவேண்டுமானால் அதிக குண்டங்களை உருவாக்கிப் பகுதி பகுதியாகச் சக்தியைச் சேகரிக்கும்போது துல்லியமான சக்திச் சேமிப்பு கிடைக்கும். அதற்கான இடம், பொருள், ஏவல் கிடைக்காதவிடத்துக் குறைந்த எண்ணிக்கையில் குண்டங்களை அமைத்து ஓரளவு சக்தியைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுவாக, நவகுண்டம் எனப்படும் ஒன்பது குண்டம் சாதாரண நிலையில் போதுமானது. அதற்கு அடுத்தபடியாக பஞ்சகுண்டம் எனப்படும் ஐந்து குண்ட முறை பயன்படுகின்றது. பஞ்ச பூதங்களின் வழியாகச் சேர்க்கப்படும் சக்தி பஞ்சகுண்டங்கள் மூலமாகச் சேர்க்கப்படும்போது அதில் ஒரு பொருத்தப்பாடும் உள்ளது. அதன் விரிந்த நிலையாகிய அட்டமூர்த்திகளின் வழியாக சக்தியைச் சேகரிக்கும் முறை நவகுண்டத்தில் பயன்படுகிறது. இங்கு எட்டுக் குண்டங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ட மூர்த்திகளும் பிரதான குண்டமாகிய ஒன்பதாவது குண்டத்திலே ஆலய மூல மூர்த்தியும் எழுந்தருளுவர்.

யாகசாலையின் நடுவிலே வேதிகை என்னும் மேடையில் பிரதான கும்பம் அமைந்திருக்கும். அதில் பிரதான மூர்த்தி ஆவாஹனம் செய்யப்பட்டுத் தினமும் மந்திர உச்சாடனம் மூலம் உருவேற்றப்பட்டு அருட்பொலிவோடு விளங்குவார். பிரதான குண்டத்தில் சிவாக்கினி முறைப்படி வளர்க்கப்பட்டு அங்கிருந்து ஏனைய குண்டங்களிலும் சேர்க்கப்படும். பிரதான குண்டத்திலிருப்பது சிவாக்கினி. இந்த அக்கினியில்தான் மூலமூர்த்தியின் பிரதான அம்சம் ஆவாஹனம் செய்யப்படும்.

பிரதானமான இந்த யாகசாலைக் கிரியைகளுக்கு அங்கமாக, முன்னேற்பாடாக பூர்வாங்கக் கிரியைகள் பல செய்யப்படுகின்றன. அவை பயிர்ச்செய்கைக்கு முன் வயலைத் தயார் செய்வதைப் போன்றவை. வயலை உழுது பண்படுத்தி அங்கிருந்து கற்கள், வேர்கள், களைகள் முதலிய வேண்டாதவற்றை அகற்றி நீர்பாய்ச்சி சொகுசுபடுத்தி அதன்பின்னரே விதைக்கப்படுகிறது. இறைதிருவுருவத்தையும் ஆலயத்தையும் அதன் சூழலையும் தூய்மை செய்து புனிதப்படுத்தி, இடையூறுகள் நேராமல் காவலிட்டு, தீய சக்திளை அகற்றிப் பாதுகாப்பு வேலிகளை இட்டு அதன்பின் அங்கு படிப்படியாக சக்தியை உருவாக்கும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

மந்திரம், பாவனை, கிரியை என முத்திறத்ததாக இவை அமைகின்றன. மந்திரங்களின் ஒலி அதிர்வுகள் சக்திச் செறிவை ஏற்படுத்துகின்றன. பாவனை என்பது மனோதத்துவம் - மனோசக்தி (Will Power) சார்ந்தது. மனோசக்தியின் பயன்பாடுகள் பற்றியும், சாதனைகள் பற்றியும், மனோதத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ செய்திகளை ஆதார பூர்வமாகக் கூறுகிறது. வைத்திய போதனைகளில் மனோவசிய முறை நன்கு பயன்படுத்தப்டுகிறது. ஒரு வைத்தியரின் போதனைகளால், அவரிடம் நோயாளி வைக்கின்ற நம்பிக்கையால் அரைப்பங்கு நோய் குணமாகிவிடுகிறது. மேலும், சுயவசிய முறைப்படி தனது உடலுறுப்புக்களைத் தானே வசப்படுத்திச் சில நோய்களை மாற்றிவிடக்கூடிய சக்தி மனவலிமைக்கு உண்டு. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தால் நமது கிரியைகளில் மனோசக்தி எவ்வளவு தூரம் சிறப்பிடம் வகிக்கின்றது என்பது விளங்கும். ஆக, இறைசக்தி இங்கு நிலைபேறாகிறது என்ற நம்பிக்கை சிவாசாரியாரிடத்தும் அடியார்களிடத்தும் இருப்பதே பாவனை என்பதாகும். கிரியை என்பது செயற்பாடுகளைக் குறிக்கும்.

ஆலயங்களில் நிகழும் கிரியைகளுக்கும் யாக மண்டபங்கள், வேதிகைகள், கும்பங்கள் முதலியன விதிப்படி அமைய வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஆலயமே ஆகம விதிப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தால்தான் அங்கு நிகழும் கிரியைகள் நாம் எதிர்பார்க்கும் பலனைப் பூரணமாகத் தரும்.

விஞ்ஞானப் பரிசோதனைகளை நாம் நிகழ்த்தும்போது அதற்கென ஆய்வுகூடங்கள் தேவைப்படுகின்றன. நினைத்த இடங்களிலெல்லாம் அவற்றைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவிடமுடியாது. சூழல் அதற்கான ஒழுங்கமைப்பில் இருக்கவேண்டும். அளவுப் பிரமாணங்கள், வெப்பநிலைகள், ஓசைகளின் அளவு, சேர்க்கப்படும் பொருட்களின் அளவு மற்றும் செறிவு முதலியன, அவற்றுக்கான கருவிகள் என இத்தனை விடயங்கள் ஒருங்குசேரும்போதுதான் பரிசோதனைகளைச் சரியான முறையில் நிகழ்த்தி விளைவுகளைக் கண்டறிகிறோம். மருத்துவ சிகிச்சை நடக்கும்போதும் இதே நிலைமைகளை நாம் காணலாம். இதேபோன்றதொரு செயல்தான் பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் பேரருட் சக்தியை நாம் நமக்குள் பெற்று நம்மை உயர்த்தி அந்த அருட்சக்தியோடு ஒன்ற முயற்சிக்கின்ற வழிபாட்டு முறைகளும்.

ஆலயமும் அங்கு ஸ்தாபிக்கப்படும் திருவுருவங்களும் சரியாக அமைந்து மந்திரம், பாவனை, கிரியைகளும் ஒழுங்குற நடைபெற்று உயர்வான கும்பாபிஷேகம் மூலம் திருவருட்பொலிவு அங்கு ஏற்பட்டிருக்கும் நிலையில் நாம் அதனைப் பெற்று இன்புறத் தயாராக இருக்கவேண்டும் என்பதும் முக்கியமானதல்லவா?

ஆண்டவன் அருட்கதிர் தகுதியான இடங்களில் மட்டுமே பாயும். ஆசாரம், ஒழுக்கம், தூய்மை, நற்குண நற்செயல்கள் என்பன சற்பாத்திரனுக்கு இலக்கணம். நல்ல பாத்திரத்தில்தான் நல்ல பொருட்களை ஏந்தலாம். ஆசாரம் என்பதும் நன்னடத்தை ஆகிய ஒழுக்கத்தையே குறிக்கும். எனினும், ஆன்மீக நடைமுறையில் ஆசாரம் என்ற சொல் புற ஒழுக்கம் சார்ந்த சில நடைமுறைச் செயற்பாடுகளையும் சுட்டிநிற்கிறது.

ஆலய வழிபாடு என்றதும் முதலில் சொல்லப்படும் செயற்பாடு, 'நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை உடுத்தி' என ஆரம்பமாகிறது. உடல் அல்லது உடைகள் சார்ந்த புறவயமான தூய்மை நிலைமை ஆசாரம் ஆகும்.

ஆசௌசமுடைய ஒருவரில் தீண்டுதல் (முட்டுதல்), அவர்களது இல்லதிதற்குள் செல்லுதல், அவர்களிடம் உணவோ நீரோ அருந்துதல் இவையெல்லாம் ஆசாரமற்ற செயற்பாடுகளாகும். இவற்றை நன்கு சிந்தித்துப் பார்த்தால் இவை யாவுமே சுகாதாரப் பழக்கவழக்கங்கள் என்பதையும் தூய்மையைப் பேணும் நடைமுறைகள் என்பதையும் புரிந்துகொள்ளலாம். அறிவியல் - மனோதத்துவ - ரீதியில் பார்க்கும்போது ஆசாரமான பழக்கவழக்கங்கள் சில உயர்நிலை அதிர்வுகளை அல்லது தூண்டல்களை உள்ளத்தில் ஏற்படுத்தக் கூடியவை என்பதையும் எதிர்மறையாக அவை உதாசீனப்படுத்தப்படும்போது மந்தமான அதிர்வுகள் தூண்டப்படலாம் என்பதையும் உணரமுடியும்.


எனவே, உடல்நிலைசார்ந்த புறவயத் தூய்மையும் உளம் சார்ந்த தியாக உணர்வும் சிரத்தையும் பற்றுறுதியும் நம்பிக்கையும் மனிதாபிமானம், ஜீவகாருண்ணியம் முதலிய பண்பு நலன்களும் இருந்தால் சற்பாத்திரராகி அருட்சக்தியை ஏற்றுக்கொள்ளும் பக்குவநிலையைப் பெற்றுவிடலாம்.

இவை யாவும் சரியாக அமையும்போது நமது உடலும் உள்ளமும் சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திப் பேற்றுக்கேற்ற அதிர்வுகளை உடையவர்களாகின்றோம். அதனால் படிப்படியாக அருட்சக்தியால் உயர்நிலையடைந்துவிடுகிறோம். பக்குவமடைந்த இந்த உடலிலிருந்து எளிதாக ஜீவான்மா விடுபட்டுப் பரமான்மாவுடன் ஐக்கியமடைந்துவிடுகிறது. இதுவே இந்துசமயத்தில் எதிர்பார்க்கப்படும் உயிரின் உன்னதமான உயர்நிலையாகும்.



**உச்சியில் ஒளிரும் சஹஸ்ராரம்**
**(ஆயிரம் இதழ்த் தாமரை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நமது வழிபாட்டின் நயமான பெருமைகள்

வழிப்படுத்துதல் என்ற சொல்லுடன் தொடர்புடையது வழிபாடு என்னும் சொல். வணங்குதல் என்ற சொல்லுடன் ஓரளவு ஒத்த பொருளை உடையதெனினும் வழிபாடு என்பது அதையும் விட விரிந்த பொருளைக் கொண்டதாகும். நமது உள்ளத்தையும் உடலையும் நெறிப்படுத்தி நல்வழிப்படுத்துவதன் முதற்படியாக இறைவனை வழிபடுதல் அமைகிறது. இல்லத்தில் அமைந்த சுவாமி அறையிலுள்ள படங்களையோ அல்லது ஆலயத்திலுள்ள திருவுருவங்களையோ நாம் வழிபடுகின்றோம்.

ஆலயத்திலுள்ள உருவங்களுக்கு அபிஷேகம் செய்து தூய்மையாக்கி ஆடை அணிகள் அணிவித்து அலங்கரிக்கின்றோம். விசேட நாட்களில் இறைவனின் திருவுருவங்களுக்கு பால், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் முதலியவற்றால் அபிஷேகம் செய்கின்றோம். இப்படி அபிஷேகங்கள் செய்வதால் இறைவன் மகிழ்ச்சி அடைந்து நமக்குப் பல்வேறு பலன்களை அருளுகிறார். இன்னொரு வகையில் பார்க்கின்றபோது, இப் பொருட்கள் அங்கு அபிஷேகமாகும்போது சூழல் குளிர்ச்சியடைந்து அங்கு ஒருவித சக்தி உண்டாகிறது. தீபங்கள் ஏற்றி வைத்து வாசனைத் தூபங்கள் இட்டு பலகாரங்கள், பழங்கள், வெற்றிலை, பாக்கு முதலியவற்றை அவருக்கு நிவேதனம் செய்து வணங்குகிறோம்.

ஆலயத்தில் நாம் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் வழிபாடுகளைச் செய்ய வேண்டும். மனத்தால் இறைவனை நினைத்தலும் வார்த்தைகளால் இறைவன் புகழ் பாடுதலும் உடலால் ஆலயத் தொண்டுகள் செய்வதுமே திரிகரண வழிபாடு ஆகும்.

ஆலயத்தில் நாம் நம்மை உயர்ந்தவர்களாகக் கருதாமல் இயன்ற அளவு தொண்டுகள் செய்ய வேண்டும். கூட்டுதல், கழுவுதல், மாலை கட்டுதல், பூந்தோட்டம் அமைத்தல் முதலிய இவற்றைச் சரியைத் தொண்டுகள் என்பர். இவை மனத்திற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் நல்ல உடற் பயிற்சியாகவும் அமைகின்றன. வீதி வலம் வருதல் வீழ்ந்து வணங்குதல் முதலியனவும் சிறந்த உடற் பயிற்சிகளாக இருக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வணக்கத்தில் அடங்கியுள்ள அரிய தத்துவம்

உலகம் இயங்குவதற்கே காரணமாக உள்ளது சக்தி. சகல ஜீவராசிகளும் சக்தியின் பேரருளினாலேயே இயங்குகின்றன. சிவம் என்னும் பரம்பொருள், சக்தியின்றி ஒன்றும் செய்யமாட்டாது. இதை நாம் சாதாரணமாக எம் அன்றாட வாழ்க்கையிலேயே கண்கூடாகப் பார்க்கலாம். "சக்தி உண்டானால் ஒரு காரியத்தைச் செய். இல்லையானால் சிவனே என்று கிட" என்ற பேச்சை நாம் சாதாரணமாகக் கேட்கலாம். இந்த இலகுவான வாக்கியத்திலே மறைந்து கிடக்கிறது சக்தியின் பெருமை. ஆகவே வாழ்க்கையில் நாம் எதைச் செய்வதற்கும் சக்தி வேண்டுமென்றால் சக்தியின் அருள் வேண்டுமென்று பொருள்.

சக்தி என்பவள் உலகம் யாவற்றுக்கும் அன்னை. அன்னையின் பரிவும் அன்பும் குழந்தைகட்கு வெகு சுலபமாகக் கிட்டும். இந்தச் சக்தி வணக்கத்திற்குரிய தினங்களே நவராத்திரி தினங்களாகிய ஒன்பது தினங்களாகும்.

ஒரு காலத்திலே உலகிலே அதர்மம் ஓங்கித் தர்மம் குன்றத் தலைப்பட்டது. அரக்கர் கூட்டங்கள் வளர்ந்து தேவர்களைக் கொடுமைப்படுத்தத் தலைப்பட்டன. இராக்கதர்களின் அடிமைகளாக தர்மத்திற்கு நேர்விரோதமான செய்கைகளில் தேவர்கள் பலாத்காரமாக ஈடுபடுத்தப்பட்டனர்.

11825

மது - கைடபர், மஹிஷாசுரன், சும்ப - நிசும்பர் முதலிய அரக்கர் தலைவர்கள் கோரச் செயல்களே உருவெடுத்தாற் போன்று விளங்கினர். துன்பம் பொறுக்கமுடியாத தேவர்கள் திரிமூர்த்திகளிடம் முறையிட்டார்கள். அவர்கள் "எங்களால் அரக்கர்களை அடக்க முடியவில்லை. அவர்களின் சக்தி அதிகரித்துவிட்டது. ஆகவே எங்கள் எல்லோரது சக்தியும் ஒன்று சேர்ந்த அந்தப் பராசக்தி ஒருத்தியே அவர்களை அழிக்க வல்லவள்" என்று கூறினர். அவ்வண்ணமே திரிமூர்த்திகளது சக்திகளும் ஏனைய தேவர்களின் சக்திகளும் ஒன்றுசேர்ந்து அன்னை பராசக்தி தோன்றினாள். அவ்வன்னையே தன்னைத் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி என்ற மூன்று வடிவினராகச் செய்துகொண்டு மது - கைடபர், மஹிஷாசுரன், சும்ப - நிசும்பர் என்ற இராக்கதத் தலைவர்களுடன் மூன்று மூன்று நாட்களாக ஒன்பது நாட்கள் கடும் சமர் புரிந்து அவர்களையெல்லாம் அழித்து ஒழித்தனள். தேவர்களின் துயர்களெல்லாம் தொலைந்தன.

இந்த ஒன்பது நாட்களும் போர் புரிந்து அடைந்த வெற்றியை அடுத்த நாளாகிய பத்தாவது நாள் தேவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து அன்னை பராசக்தியைப் பூஜித்து மிக மகிழ்வுடன் கொண்டாடினர். அந்தத் தினம்தான் விஜயதசமி. தேவர்கள் தமது சத்துருக்கள் எல்லாம் ஒழிந்து தாங்கள் விடுதலை பெற்ற தினத்தை மிக மகிழ்வுடன் கொண்டாடித் தங்களுக்கு அவ்விடுதலை அளித்த அன்னையைப் பூஜித்து வணங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் எமக்குப் பல சத்துராதிகள் இருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கு உள்ளேயே இருந்துகொண்டு எங்களுக்குத் தீராத கொடுமைகளை விளைவிக்கிறார்கள். கோபம், வஞ்சினம், பகை, முதலியவை மது - கைடபர்களுக்குச் சமமானவை. எனவே இவற்றை அழித்து இவைகளின் பேய்ப்பிடியினின்றும் விடுபட அம்மை துர்க்காதேவியின் நல்லருள் நமக்குள்ளிருந்து துணை செய்ய அன்னையை முதல் மூன்று நாட்களும் பூஜிக்கின்றோம். அவள் எமக்கு வீரத்தையும் பலத்தையும் அளிக்கிறாள். அவளால் தரப்பட்ட வீரத்தையும் பலத்தையும் சத்காரியங்கள் செய்வதில் செலவிடவேண்டும். இன்னொரு உயிரைத் துன்புறுத்துவதற்கு அவை உபயோகப்படுமேயனால் அவ்வருள் குன்றுகின்றது. தேவியின் கருணை கிடையாமல் போகிறது.

கோபம், பேராசை, அவா முதயவை எல்லாம் மஹிஷாசுரனுக்குச் சமானமானவை. இவற்றை அழித்து தேஜஸ், செல்வம், தர்ம உணர்வு, பரோபகார சிந்தை முதலிய நற்குணங்கள் பெறுவதற்காக லக்ஷ்மிதேவியாக அன்னையை அடுத்த மூன்று நாட்களும் பூஜிக்கின்றோம். தேவியின் அருளால் அழகு, தேஜஸ் எல்லாம் கிடைக்கிறது. இவை எல்லாம் எமக்கு தனலக்ஷ்மி, தான்யலக்ஷமி, வீர்யலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, சௌபாக்ய லக்ஷ்மி என்ற லக்ஷ்மி அம்சங்களாகக் கிடைக்கின்றன.

அகந்தை, ஆணவ இருள் இவற்றுக்கே இருப்பிடமானவர்கள் சும்ப நிசும்பர்கள். ஆகவே இக்குணங்கள் நீங்கி நல்லறிவு சமரசம், ஞானம், அடக்கம், பண்பு முதலாம் சகல நற்குணங்களும் அடைவதற்காக அன்னையை சரஸ்வதி தேவியாக இறுதி மூன்று நாட்களும் உபாசிக்கின்றோம்.

ஆகவே எங்களுக்குள்ளேயே உள்ள காமம், கோபம், ஆங்காரம், ஆணவம் போன்ற கெட்ட குணங்கள் ஆகிய அரக்கர்களை அறவே அழித்து நாம் சற்குணவந்தர்களாய் வாழ்வதற்கு அன்னையைப் பூசிக்கின்றோம்.

வேதவெற்பிலே புனத்தில் மேவிநிற்கும் அபிராமா
வேடுவச்சி பாதபத்ம மீது செச்சை முடிதோய
ஆதரித்து வேளைபுக்க ஆறிரட்டி புயநேய
ஆதரத்தோ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே
காதுமுக்ர வீரபத்ர காளி வெட்க மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலர்பத்தி இமையோரை
ஓதுவித்த நாதர் கற்க ஓதுவித்த முனிநாண
ஓரெழுத்தி லாறெழுத்தை ஓதுவித்த பெருமாளே

- அருணகிரிநாதர் திருப்புகழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பத்ரகாளி மான்மியம்

## தோற்றம் – புராண வரலாறுகள்.

நான்முகப் பெருமானாகிய பிரமதேவருக்குப் புத்திரராகத் தோன்றிய தக்கன் என்பான் சிவ பெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்றான். அவனுக்கு நிறைந்த செல்வமும் அதிகார பலமும் கீர்த்தியும் உண்டாயின.

அவன் பெற்ற ஒரு வரத்தின் பயனாக உமாதேவியார் அவனுக்கு மகளாக அவதரித்தார். தக்கன் மகள் ஆகையால் தாட்சாயணி என்னும் நாமத்துடன் வளர்ந்து சிவனை நினைந்து தவம் செய்து அவரால் ஆட்கொள்ளப்பட்டு மீண்டும் சிவபிரான் இடப்பாகம் அடைந்தாள்.

சிவபிரான் தனது மருகன்தானே என அகந்தை கொண்டான் தக்கன். தனது மகள் தாட்சாயணியையும் சிவபிரானையும் நிந்தித்து அவமதித்து அவர்களை விலக்கி ஒரு யாகம் செய்தான். அவிர்பாகத்தைச் சிவனுக்கு வழங்காமல் தவிர்த்தான்.

பெருங் கருணையாளர்களான சிவனும் உமையும் அவனைத் தண்டித்துத் திருத்தி நல்வழிப்படுத்த எண்ணினர்.

சிவபிரான் தமது கூறாக வீரபத்திரக் கடவுளையும் உமாதேவியார் தமது கூறாக **பத்திரகாளி அம்மையையும்** தோற்றுவித்துத் தக்கனுடைய வேள்வியையும் அழித்து அவனது அகங்காரத்தையும் போக்கும்படி கட்டளையிட்டு அனுப்பினர்.

வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளியம்மையும் சென்று தக்கன் வேள்வியை அழித்துத் தக்கனையும் அவனோடு சேர்ந்தவர்களையும் மறக் கருணையினால் திருத்தி நல்வழிப்படுத்தினார்கள். சிவனை மறந்து அவரை மதியாமல் அவிர்ப்பாகம் பெறச்சென்ற அத்தனை தேவர்களையும் அவரவர் தகுதிக்கேற்பத் தண்டனைகள் வழங்கி நல்லறிவூட்டினர்.

இதுவே வீரபத்திரர், பத்திர காளியின் தோற்றமாகும். ஆகவே இவர்கள் சிவபிரானும் உமையம்மையாரும் கொண்ட அருள் மூர்த்தங்களே என்று உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிவபிரானின் புதல்வர் வீரபத்திரர் எனவும் உமாதேவியின் புதல்வி பத்திரகாளி எனவும் கொண்டு இவர்கள் எவ்வாறு தமக்குள் துணைவர்கள் ஆகமுடியும் எனவும் இவர்களுக்குத் திருக்கல்யாணம் செய்யலாமா? என்றும் ஒருசிலருக்கு ஐயங்களுண்டு.

இவ்விடயம்பற்றி நன்கு ஆராய்ந்து தத்துவார்த்த உண்மைகளை விளங்கிக்கொள்ள வேண்டும்.

விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், வீரபத்திரர் நால்வரும் சிவகுமாரர்கள் எனக் கூறப்படுவது உபசார வழக்கே என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சிவனது நெற்றிக் கண்ணில் தோன்றிக் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு உமையம்மையால் அன்போடு அள்ளி அணைத்து உருவாக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப் பெருமானைப்பற்றிக் கந்தபுராணத்தில் சிவபிரான் வாக்காக வரும் வார்த்தைகளை அவதானித்தால் இது தெளிவாகும்.

"ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யானும்
பேதகம் அன்றாம்"

அதாவது ஆறுமுகப் பெருமானும் தாமும் வேறல்லர், தாமே தமது குமரன் எனத் தெளிவுபடுத்துகின்றார்.

"ஆத்மா வை புத்ர நாமாசி" என்கிறது வேத வாக்கு. தாமே தமது புதல்வன் ஆகும் இந்த விந்தையைப் புராணங்கள் விளக்கிநின்றன.

எனவே சிவபிரானே வீரபத்திரர். உமையம்மையாரே பத்ரகாளி. அவர்கள் ஒருவருக் கொருவர் துணைவர்களே. திருக்கல்யாணமும் ஏற்கத் தக்கதே. சூடாமணி நிகண்டு வீரபத்திரரை "பத்திரை கேள்வன்" (பத்ரகாளியின் கணவன்) என்றே குறிப்பிடுகிறது.

சென்னையில் மயிலாப்பூரில் மாதவப் பெருமாள் கோவிலின் அருகில் வீரபத்திரருக்குத் தனி ஆலயம் உள்ளது. அபயாம்பிகை என்னும் காளிதேவியுடன் வீரபத்திரர் இங்கு திருமணக் கோலத்தில் காட்சியளிக்கிறார்.

பைரவப் பெருமான் விநாயகரைப் போலத் தனித்த ஒரு மூர்த்தம். ஆனால் விநாயகரை எவ்வாறு வல்லபாம்பிகா சமேத விக்னேஸ்வரர் என்று கூறுகின்றோமோ, அவ்விதமே பைரவரையும் சாமுண்டாம்பா சமேத க்ஷேத்ரபாலர் எனக் கூறும் மரபுமுறை ஒன்று ஈழத் திருநாட்டில் பத்ததி மரபிலுண்டு.

கிராமிய வழிபாட்டு மரபில் பைரவர் ஆலயங்களில் காளிக்கும் ஒரு சந்நிதி ஏற்படுத்தும் வழக்கம் சில இடங்களில் காணப்படுகின்றதெனினும் இது ஆய்வுக்குரியது.

பிரமன் கர்வ பங்கத்திற்காகவும் ஆலயங்களின் காவற் கடமைக்காகவும் தோன்றிய பைரவர் தனித்த உருவமாகவே தமிழ்நாட்டு ஆலயங்களில் காணப்படுகிறார். காளி என்பது பத்திரகாளியின் சுருங்கிய பெயரே என்பதும் வீரபத்திரரின் துணைவியே பத்திரகாளி என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

சிவபிரானின் மஹேஸ்வர வடிவங்கள் எனப் போற்றப்படும் இருபத்தைந்து திருமூர்த்தங்களில் பைரவர், வீரபத்திரர் இரண்டும் இடம்பெறுவதும் சிவபிரானின் அட்ட வீரட்டங்களில் தக்கன் யாகம் சிதைத்தமையும் பிரமன் தலை கொய்தமையும் காட்டப்படுவதும் சிவபெருமானில் பிரிவிலாத மூர்த்தங்களே வீரபத்திரர், பைரவர் என்பன என்பதைத் தெளிவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணம் காட்டும்
## வீரபத்திரர் ~ பத்திர காளி உற்பத்தி

அந்திவான் பெரு மேனியன் கறைமிடறணிந்த
எந்தை தன்வடிவாய் அவனுதல் விழியிடையே
வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ
முந்து வீரபத்திரன் எனும் திறலுடை முதல்வன்

அங்கவேலையிலுமையவள் வெகுளியாலடல்செய்
நங்கையாகிய பத்திர காளியை நல்கச்
செங்கையோரிரண் டாயிரம் பாதி செம் முகமாய்த்
துங்க வீரபத்திரன் தனையடைந்தனள் துணையாய்

எல்லை தீர்தரு படைக்கலத் திறையுமவ் விறைவற்
புல்லுகின்றதோர் திறலுடைத் துணைவியும் போல
தொல்லை வீரனும் தேவியுமேவரு தொடர்பை
ஒல்லை காணுறா மகிழ்ந்தனர் விமலனு முமையும்

## தோற்றப் பொலிவு

காளியின் திருவுருவமும் இரு கரம் முதல் பதினெட்டுக் கைகள் வரை கொண்டவளாகப் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்படுகிறது.

செந்நிறமானவளாக இரு கண்களுடன் கபாலம் சூலம் கொண்டவளாக இருகரங்களுடனும்,

வாகைப்பூ நிறத்தினளாக ஜடாமகுடத்துடன் கலப்பை, உலக்கை ஏந்திய இருகரத்தினளாகவும்,

தெத்திப்பல், உயர்த்திய புருவம், நீண்ட கண்கள், நீண்ட மூக்கு, கருமேக நிறம், கம்பீரமான ஒளி, சிவந்த கூந்தல், சிவந்த ஆடை இவற்றோடு இரு கைகளிலும் சூலம் ஏந்தியவளாகவும்,

சப்த மாதர்களால் சூழப்பட்டவளாகவும் பத்ரகாளி பெரும்பாலும் வர்ணிக்கப்படுகிறாள். இடது கால் மடித்து வலதுகால் தொங்கவிட்டவளாக அமர்ந்த கோலத்திலும் இவளைக் காணலாம்.

இருகைகளுக்கு மேற்பட்ட தோற்றங்கள் அமையும்போது அவள் ஏந்தும் ஆயுதங்கள் வருமாறு:

வாள், கதை, சங்கு, சக்கரம், சூலம், கேடயம், அம்பு, வில், இரும்புத் தடி, பாசம், உடுக்கு, ஈட்டி, உலக்கை, அபயம், வரதம் முதலியனவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்ரகாளி வழிபாட்டின் தொன்மை

காளி என்ற பெயர் காலத்தை வென்றவள் என்ற கருத்தில் அமைகிறது. கோபம் மிகுந்த சக்தி அம்சங்களுள் மிகப்பழைமையானது காளி வடிவமாகும். கருமை நிறத்தவள் என்ற கருத்தும் இப்பதத்திற்கு உண்டெனப்பர். சர்வ வியாபியாகப் பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் அருட்சக்தியாகிய இவளை இக்காரணத்தால், ஆகாயத்தின் வண்ணமாக நீல நிறத்தவள் என்றும் (நீலி) கூறுவதுண்டு. பழைய நூல்களில் நீலம், கருமை இரண்டையும் ஒன்றகவே கொள்ளும் மரபு இருந்திருக்கிறது.

பழையோள் என்ற பெயரால் பழந்தமிழ் இலக்கியங்கள் இவளைப் புகழ்ந்துரைக்கும். காலகண்டன் எனப்போற்றப்படும் சிவபிரானின் சக்தி என்பதால் காலகண்டி என்ற பெயரும் இவளுக்குண்டு.

தேவீ மஹாத்மியம் எனப் போற்றப்படும் சப்தசதியிலும், தேவீ பராக்கிரமத்திலும் காளியின் பல்வேறு தோற்றங்களும் அருட்செயல்களும் கூறப்படுகின்றன.

தேவி பராசக்தியின் லீலைகள் ஒவ்வொன்றிலும் அவளது படைத்தலைவி போன்று காளி ஒவ்வொரு அருட்செயல்களை நிகழ்த்துகின்றாள்.

சாக்த தர்சனத்தின் முக்கிய உபாசனையில் தசமஹா வித்தில் கூறப்படும் பிரதான சக்திகள் பத்தினுள் காளியும் அடங்குகின்றாள்.

உஜ்ஜயினி என்ற தலத்திலுள்ள சிவன் மஹாகாலர் எனப் போற்றப்படுகிறார். அவரது சக்தி மஹாகாளியாவாள்.

பாகவதத்திலே கிருஷ்ணாவதாரத்திற்குமுன் அதனை அறிவூட்டிக் கம்சனை எச்சரிக்க வந்தவள் காளியே. அதே வரலாற்றை தேவீ மஹாத்மியத்திலும் காணலாம்.

சும்ப நிசும்பர்கள் என்ற கொடிய அசுரர்களால் ஒடுக்கப்பட்ட தேவர்கள் செய்வதறியாது திகைத்துக் கங்கைக் கரையில் அம்பிகையைத் துதிசெய்தபோது இங்கே தோன்றிய பராசக்தியிடமிருந்து முதலில் ........... என்ற சக்தி தோன்றியபின் கரியநிறத்துடன் பேரொளி படைத்தவளான காளிகாதேவி தோற்றம்பெறுகிறாள்.

தாருகன் என்ற அசுரனை வதம் செய்ய ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டவளே காளி என்ற கருத்தும் சில புராணங்களிலுண்டு.

தில்லையின் எல்லைக் காவலுக்குரிய தெய்வமாக தில்லைக்காளி எனப் போற்றப்படுகிறாள்.

காளிதாசர் மாபெரும் கவிஞனாகத் திகழ்ந்ததும் சுவாமி இராமகிருஷ்ணர் தமது ஆத்மீக பலத்தினால் இந்த உலகையே நல்வழிப் படுத்தி வருவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்ரபதி வீர சிவாஜி மன்னன் வெற்றி வீரனாகத் திகழ்ந்ததும் இந்த மஹாகாளியின் உபாசனையினாலேயே.

இத்தகைய பிரபாவம் மிக்க மஹாகாளியே தக்கனின் யாகத்தை அழிப்பதற்காக வீரபத்திரருடன் பத்திரகாளியாக சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து ஆவிர்பவித்தாள்.

இவள் காளி, காத்யாயனீ, சாந்தா, சாமுண்டா, முண்டமர்த்தினி, த்வரிதா, வைஷ்ணவீ, பத்ரா என்ற எட்டுக் காளிகளுடன் சேர்ந்து நவகாளிகளாக வீரபத்திரருடன் சென்று லீலைகள் புரிந்தாள்.

சப்தமாதர்கள் எப்போதும் வீரபத்திரருடன் இணைந்தே காணப்படுவர். அவரே இவர்களுக்கு அதிபதி. சப்த மாதர்களுள் இளையவள் காளியே.

பிரம்மாணி, சரித்பிரியா, வைசாகினீ, விஸ்வகர்ப்பா, வாராஹி, இந்திராணி, காளி என்போரே சப்த மாதர்கள் ஆவர்.

**நாராயணீ பத்ரகாளீ ருத்ராணீ கிருஷ்ண பிங்களா**
**அக்னிஜ்வாலா ரௌத்ரமுகீ காளராத்ரீ தபஸ்வினீ**

- இந்த்ராட்சீ ஸ்தோத்ரம்.



வீரபத்ரகாளிகா சிருஷ்டி

## பத்திரகாளி காயத்திரி மந்திரம்

"ஓம் பத்ரகாளீ ச வித்மஹே
சூலஹஸ்தாய தீமஹி
தந்நோ காளீ ப்ரசோதயாத்"

"ஓம் ஹேம வர்ணாய வித்மஹே
சூல பாசாயை ச தீமஹி
தந்நோ காளீ ப்ரசோதயாத்"



தக்ஷ யாக துவம்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்த மாதர்

சக்தி வழிபாட்டில் சப்த மாதர் வழிபாடு மிகத் தொன்மையானதும், முக்கியமானதுமாகும். சப்த கன்னியர் எனவும் இவர்கள் அழைக்கப்படுவர். இவர்கள் முக்கியமான இந்துசமயத் தெய்வங்களின் சக்திகளாவர். பிரம்மா, மகேஸ்வரன் (சிவன்), குமரன் (முருகன்), விஷ்ணு, வராஹர், இந்திரன், யமன் ஆகியோரின் சக்திகளான பிராஹ்மி, மாஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, மாஹேந்த்ரீ (இந்திராணி), சாமுண்டா (சாமுண்டி) என்போரே சப்த மாதர்கள் ஆவார்.

சப்தமாதர்களின் தோற்றம் பற்றிப் பல்வேறு புராணக்கதைகள் கூறப்பட்டபோதும் அசுரர்களின் அழிவுக்காக மேற்குறித்த தேவர்கள் தமது சக்திகளை உருவாக்கிப் போரிட அனுப்பினர் என்பது எல்லாக் கதைகளிலும் பொதுமையான ஒரு செய்தி.

சப்தமாதர்கள் பற்றிய குறிப்பு ரிக் வேதத்திலேயே உண்டு என்பர் சிலர். 13ஆம் நூற்றாண்டவரான பனாரஸ் விஸ்வநாதரால் இயற்றப்பட்ட சித்தாந்த சேகரம் என்ற ஆகமம் சார்ந்த நூலில் சப்தமாதர்களை முதன்மைப்படுத்தியே மிஸ்ரமார்க்கம் அமைகிறது எனக் குறிப்பிடுகிறார். பரதசாஸ்திரத்தில் இவர்கள் நாட்டியமாதர்களாகக் காட்டப்படுகின்றனர்.

சாமுண்டி யமனின் சக்தி என்பதைச் சிலர் ஏற்பதில்லை. சாமுண்டிக்குப்பதில் நரசிம்மரின் சக்தியாகிய நாரசிம்ஹி சில நூல்களில் குறிப்பிடப்படுகிறது. சில இடங்களில் பைரவியும் குறிப்பிடப்படுகிறாள்.

சப்தமாதர்களின் தோற்றப் பொலிவுகள் மானசாரம், சிற்பரத்தினம், காசிப சிற்பம், ஸ்ரீ தத்வநிதி முதலிய சிற்ப நூல்களில் விளக்கப்படுகிறது.

இவர்களுக்குத் தனிக் கோவில்கள் இல்லை. அழகிய திருவுருவங்கள் அமைக்கப்படுவதும் குறைவு. (ஈழத்தில் இரு இடங்களில் வராஹிக்குத் தனிக் கோவில்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது) பல ஆலயங்களில் தெற்குப் புறத்தே தேவார முதலிகளின் சந்நிதிக்கருகில் கல்வடிவமாக இவர்கள் வழிபடப்படுவதுண்டு. இவர்களோடு கணபதி, வீரபத்திரர், வைரவர் ஆகியோர் சேர்த்து வைக்கப்படுவதுண்டு.

அஷ்ட பைரவர்களின் சக்திகளாகவும் சப்தமாதர்கள் சொல்வதுண்டு. அவ்வாறு சொல்லும்போது பிராமி, மாஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, சாமுண்டி ஆகிய எழுவரும் முறையே அசிதாங்க பைரவர், ருரு பைரவர், சண்ட பைரவர், க்ரோதன பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், பீஷண பைரவர் ஆகிய எழுவருடன் சேர்க்கப்பட, எட்டாவது சம்ஹார பைரவருடன் சண்டிகாதேவி சேர்க்கப்படுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராம்ஹி

## (ஸப்தமாத்ரு தேவதா தியானங்கள் -- நிருஸிம்ஹ ப்ரஸாதம்)

தத்ர ப்ராம்ஹீ சதுர்வக்த்ரா ஷட்புஜா ஹம்ஸ ஸம்ஸ்திதா।
பிங்காபா பூஷணோ பேதா ம்ருக சர்மோத்தரீயகா॥
வரம் ஸூத்ரம் ஸ்ருவம் தத்தே தட்ச பாஹூத்ரயே க்ரமாத்।
வாமேது புஸ்தகம் குண்டீம் பிப்ரதிம் ச அபயம் கரம்॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஹேஸ்வரீ

மாஹேஸ்வரீ வ்ருஷாரூடா பஞ்சவக்த்ரா த்ரிலோசநா।
ஸ்வேத வர்ணா தசபுஜா சந்த்ர ரேகா விபூஷிதா॥
கட்கம் வஜ்ரம் த்ரிசூலம் ச பரசும் ச அபயம் வரம்।
பாசம் கண்டாம் ததா நாகம் அங்குசம் பிப்ரதீம் கரை:॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌமாரீ

ஷடாநநாது கௌமாரீ பாடலாபா சுசீலகா।
ரவிபாஹுர் மயூரஸ்தா வரதா சக்தி தாரிணீ॥
பதாகாம் பிப்ரதீ தண்டம் பாத்ரம் பாணம் ச தக்ஷிணே।
வாமே சாபம் அதோகண்டாம் கமலம் குக்குடம் ததா॥
பரசும் பிப்ரதீ சைவ தததஸ் த்வபயாந்விதா।






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவீ

வைஷ்ணவீ தார்க்ஷ்யகா ஸ்யாமா ஷட்புஜா வநமாலிநீ।
வரதா கதிநீ தக்ஷே பிப்ரதீச கரேஅம்புஜம்॥
சங்க சக்ர அபயாந் வாமே ஸாச இயம் விலஸத்புஜா।





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராஹீ

க்ருஷ்ணவர்ணா து வாராஹீ மஹிஷஸ்தா மகோதரீ।
வரதம் தண்டிநீ கட்கம் பிப்ரதீ தட்சிணேகரே॥
கேடபாத்ரா பயாங் வாமே ஸூகராஸ்யா ச ஷட்புஜா [லஸ்திபுஜா]॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்திரீ (இந்திராணீ)

ஐந்த்ரீ ஸஹஸ்ர த்ருக் ஸௌம்யா ஹேமாபா கஜஸம்ஸ்திதா।
வரதா ஸூத்ரிணீ வஜ்ரம் பிப்ரந்த் யூர்த்வே து தக்ஷிணே॥
வாமேது கமலம் பாத்ரம் ஹி அபயம் த்வத: கரே।







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமுண்டா தேவீ

சாமுண்டா ப்ரேதகா க்ருஷ்ணா விக்ருதா ச அஹிபூஷணா।
தம்ஷ்ட்ரா லாக்ஷீண தேஹாச கர்த்தாட்சீ காமரூபிணீ॥
திக்பாஹு: க்ஷாமகுட்சிஸ்ச முஸலம் சக்ர சாமரே।
அங்குசம் பிப்ரதீ கட்கம் தக்ஷிணே ச அதவாமதே॥
கேடம் பாசம் தநுர்தண்டம் குடாரம் சாபி பிப்ரதீ॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்த மாதர்களுடன் சேர்த்துக்கொள்ளப்படும் எட்டாவது சக்தி

# சண்டிகா தேவீ

சண்டிகா ஸ்வேத வர்ணாபா ஸிவரூபாச ஸிம்ஹகா।
ஜடிலாவர்த்துலா ஷட்புஜா த்ரியட்சா சூலதாரிணீ॥
வரதா கர்த்தரீம் பரதீ தட்சே பாசபாத்ர அபயாங்விதா॥

(சம்ஹார பைரவரின் சக்தியாகக் கருதப்படுபவள்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சப்த மாதர்கள் (இன்னொரு வகை)

## பிராமி தியானம்

சதுர்புஜாம் சதுர்வக்த்ராம் பீதமால்யாம்பரோ ஜ்வலாம்।
வரதா பயஹஸ்தாம் ச ஸாக்ஷமாலாம் ஸ்கண்டிதாம்॥
ஜடா மகுட ஸம்யுக்தாம் ஸிம்ஹவாஹன ஸுஸ்திதாம்।
ஸர்வா பரண ஸம்யுக்தாம் ப்ராஹ்மீம் த்யாத்வா ப்ரபூஜயேத்॥

## பிராமி காயத்ரீ

ஓம் ஹம்ஸத்வஜாய வித்மஹே கூர்ச்ச ஹஸ்தாய தீமஹி।
தந்நோ ப்ராம்மீ ப்ரசோதயாத்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகேசுவரி தியானம்

ஏகவக்த்ராம் த்ரிநேத்ராம் ச மஹாதேவீம் சதுர்புஜாம்।
ஜடாமகுட ஸம்யுக்தாம் ஸுக்ல வர்ணாம் ஸுசோபிதாம்॥
வரதா பய ஹஸ்தாம் தாம்ம்ருகம் டங்கஞ்ச தாரிணீம்।
வ்ருஷவாஹ ஸமாரூடாம் வந்தே மஹேஸ்வரீம் சுபாம்॥

## மாகேசுவரி காயத்ரீ

ஓம் வ்ருஷத்வஜாய வித்மஹே ம்ருகஹஸ்தாய தீமஹி।
தந்நோ ரௌத்ரீ ப்ரசோதயாத்॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌமாரி தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமந்விதாம்।
ஜடா மகுட ஸம்யுக்தாம் நீலவர்ணாம் சுயௌவனாம்॥
வரதாபய ஹஸ்தாம் தாம் வஜ்ரம் சக்திம் ச தாரிணீம்।
சர்வலக்ஷண ஸம்பந்தாம் கௌமாரீம் தாம் விபாவயேத்॥

## கௌமாரி காயத்ரீ

ஓம் சிகித்வஜாய வித்மஹே வஜ்ர ஹஸ்தாய தீமஹி।
தந்நஸ் கௌமாரி ப்ரசோதயாத்॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைஷ்ணவி தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமன்விதம்।
வரா பயகராம் ச்யாமாம் சங்கம் சக்ரஞ்ச தாரிணிம்॥
நவயௌவன ஸம்பன்னாம் ஸ்ரீமத்கருட வாஹனாம்।
ஸர்வ லக்ஷண ஸம்பன்னாம் வைஷ்ணவிம் தேவிகாம் பஜே॥

## வைஷ்ணவி காயத்ரீ

ஓம் தார்க்ஷ்யத்வஜாய வித்மஹே தண்டஹஸ்தாய தீமஹி।
தந்நோ வைஷ்ணவீ ப்ரசோதயாத்॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராஹீ தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ சமன் விதாம்।
க்ருஷ்ணாம்பர தராம் தேவீம் வராஹ சக்ரஸம்யுதாம்॥
ஹல்முஸல ஹஸ்தாம் தாம் வரா பயகராம் புஜாம்।
ஸிம்ஹவாஹ ஸமாரூடராம் கிரீட மகுடோஜ்வலாம்॥
ஸர்வாலங்கார ஸம்பன்னாம் வாராஹிம் பூஜயேத்புத:॥

## வாராஹீ காயத்ரீ

ஓம் மஹிஷத்வஜாய வித்மஹே தண்ட ஹஸ்தாய தீமஹி।
தந்நோ வாராஹி ப்ரசோதயாத்॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாஹேந்த்ரீ (இந்திராணி) தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமன்விதாம்।
ஸ ரத்ன மகுடோபேதாம் ஹேமவர்ண ஸ்வருபிணிம்॥
வராபயகராம் போஜாம் வஜ்ரம் சக்திம் ச தாரிணீம்।
மாஹேந்த்ரீம் மாதரம் வந்தே கஜவாஹன ஸம்ஸ்த்திதாம்॥

## மாஹேந்த்ரீ (இந்திராணி) காயத்ரீ

ஓம் கஜத்வஜாயை வித்மஹே வஜ்ரஹஸ்தாயை தீமஹி।
தந்நோ மாஹேந்த்ரீ ப்ரசோதயாத்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாமுண்டா தியானம்

சதுர்புஜாம் த்ரிணேத்ராம் ச காலமேக ஸமப்ரபாம்।
த்ம்ஷ்ட்ரா கராளவதனாம் வ்யாக்ரசர்மாம் பரோஜ்வலாம்॥
ஸகட்காம் சூலஹஸ்தாம் ச கபாலா பயதாரிணீம்।
கிங்கிணி மாலயாயுக்தாம் கரண்ட மகுடான் விதான்॥
சிரோமாலா ஸமாயுக்தாம் ப்ரதே வாஹந ஸம்ஸ்திதாம்।
பிநஸ்தனீம் யௌவனாம் ச சாமுண்டாம் பாவயேத்ஸதா॥

## சாமுண்டா காயத்ரீ

ஓம் பாசத்வஜாய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி।
தந்நோ சாமுண்டி ப்ரசோதயாத்॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சைலபுத்ரீ - ஆனந்த தாண்டவம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கூஸ்மாண்டா - சந்த்யா தாண்டவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப்ரம்மசாரிணீ - திரிபுர தாண்டவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்திரகாந்தா - ஊர்த்வ தாண்டவம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்கந்தமாதா - புஜங்க தாண்டவம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காளராத்ரீ - பூத தாண்டவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மஹாகௌரீ - சுதா தாண்டவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சித்திதாத்ரீ - சிருங்கார தாண்டவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனின் நவதாண்டவங்களுக்குரிய கோலங்களும் தேவி வடிவங்களும்

## நவதுர்க்கா

**ந**வராத்திரியில் சிவவழிபாடும் அம்பிகை ஆராதனையும் சிறந்தவை. சிவன் ஆடிய தாண்டவக் கோலங்கள் நாம் அறிந்தவை. அவற்றுள் சிலவற்றை எம்பெருமான் ஆடிக்களித்த போது, தாண்டவத்துக்கேற்ற கோலங்களும், எம்பெருமாட்டியின் திரு அவதாரங்களும் நிகழ்ந்தன. ஆண்கள் ஆடுவது தாண்டவம்; பெண்கள் ஆடுவது லாஸ்யம். தில்லையம்பலக் கூத்தபிரானே அணுவுள் அணுவாகவும், அண்டத்துக்குள் அண்டமாகவும் நின்று ஆடி உலகத்தை இயக்கி வருகிறான். இறைவன் முப்பதாயிரம் கோடி நாட்டியங்களுக்கு மேலாக ஆடினான் என்பர். ஒவ்வொரு நாட்டியத்துக்கும் அங்க அசைவும், பாவமும் முத்திரைகளும் தனித்தனியானவை.

அத்தகைய நடனத் திருக்கோலங்களில் ஒன்பது தாண்டவங்களையும், அப்போது இறைவன் வரைந்த கோலங்களையும், ஆவிர்பவித்த அம்பிகை உருவங்களையும இங்கே தருகிறோம்.

### *1. ஆனந்தத் தாண்டவம் :*

இடது காலைத் தூக்கி வலக்காலை ஊன்றி ஆடும்நிலை. இந்தத் தாண்டவம ஆடும் போதே, இடதுகால் சுண்டுவிரலால் தரையில் கோலத்தை வரைந்தார். கோலத்தின் பெயர் ரிஷி மண்டலக் கோலம். இந்தக் கோலத்திலிருந்து ஆவிர்பவித்த அம்பிகையின் திருநாமம் சைலபுத்ரி.

நவராத்திரியின் முதல் நாள், மஞ்சள் கலந்த அரிசிமாவினால் இந்தக் கோலமிட்டு வணங்க வேண்டும். இரண்டு வயதுப் பெண் குழந்தையை. இந்த அம்பிகையாக எண்ணிப் பூசித்தால் ஆஸ்துமா, நீரிழிவு போன்ற நோய்கள் குணமாகும. (பூசித்தல் என்றால், காலில் நலங்கிட்டு புத்தாடை அணிவித்து, வளையல், சீப்பு, கண்ணாடி ஆகியவை அளித்து, சாட்சாத் எம்பெருமாட்டியாகப் பூஜிப்பது; பால் பாயசம் நைவேத்தியம் செய்து அளிப்பது முதலியவை)

### *2. சந்தியா தாண்டவம் :*

சந்தியா வேளையில் இறைவன் ஆடிய திருநடனம். இந்தத் தாண்டவத்தின் மூலம தாள வாத்தியங்களுக்கு ஒலி கொடுத்தார். தாண்டவ நிலையில் இடககால, இாண்டாம விரலால் வரைந்த கோலம் இது. சப்த ஒலிக்கோலம். இதிலிருந்து கூஷ்மாண்டா என்ற தேவி ஆவிர்ப்பவித்தாள். மூன்று வயதுப் பெண் குழந்தையைப் பூஜிக்க வேண்டும்

கடன்படாத வாழ்வு கிட்டும்; மனம் அமைதியுற்று விளங்கும். அஸ்திரப் பயிற்சிகளுக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3.. திரிபுர தாண்டவம் :*

திரிபுர சங்கார காலத்தில் ஆடிய திருக்கோலம். வலக்கால் கட்டை விரலால் அஷ்ட வசுக்கோலம் வரைந்தார். குங்கும வண்ணத்தில் பிரம்மசாரிணி என்ற தேவி தோன்றினாள். குங்குமம் கலந்த அரிசிமாவுக் கோலமிட்டு, நான்கு வயதுக் குழந்தையைப் பூஜிக்க வேண்டும். வாயுத் தொல்லைகள், சந்திராஷ்டமக் காலத் தொல்லைகள் நீங்கும். தில்லையெம்பெருமானைச் சோமசுந்தரப் பெருமானாக எண்ணி வணங்க வேண்டும்.

*4. ஊர்த்துவ தாண்டவம் :*

இடக்காலும் வலக்காலும் நேர்க்கோட்டில் அமைந்த தாண்டவ நிலை. அம்பிகை அப்படி ஆட முடியாமல் வெட்கித் தலை குனிந்த நிலை. திருவாலங்காட்டு நடனத்தில் காளி தோற்றத்தாண்டவம்.

வலக்கால் ஐந்து விரல்களால் வரைந்த திருக்கோலத்தின் பெயர் பிரணவ ஒலிக் கோலம். இந்தக் கோலத்திலிருந்து தோன்றிய தேவி சந்திர காந்தா. வெள்ளை நிறத்திருமேனி. ஐந்து வயதுப் பெண் குழந்தையைப் பூஜிக்க வேண்டும். நவராத்திரி சமயத்தில் இப்படிப் பூஜை செய்தால், தடைப்பட்ட திருமணங்கள் விரைவில் நடைபெறும்.

*5. புஜங்க தாண்டவம் :*

பாற்கடல் கடந்த சமயம், நஞ்சை உண்டபோது தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் எதிரில் ஆடிய தாண்டவம் இது. சீறிப் படம் எடுத்து ஆடும் அரவத்தைப் போன்ற நடனநிலை. அப்போது கைகளாலும் சடையாலும் வரைந்த கோலம் புஜங்க தாண்டவக் கோலம். அந்தக் கோலத்தில் ஆவிர்பவித்த தேவி ஸ்கந்த மாதா. இந்தத் தேவியின் தரிசனம் பெற்ற, தேவர்கள் சாப விமோசனம் பெற்றனராம். எம்பெருமாட்டி நீல நிறத் திருமேனியில் ஒளிர்பவள். வலக்கையில் சஞ்சீவி இலைக் கொத்தைத் தாங்கிய கோலம்.

அரிசிமாவுக் கோலம் வரைந்து, ஆறுவயதுக் குமரியை அலங்கரித்துப் பூஜித்தால், உணவுக் கலப்படத்தால் உண்டாகும் நோய்கள் விலகும்; நஞ்சும் நமனாக அமையாது.

*6 முனி தாண்டவம் :*

பதஞ்சலி முனிவர், தம் கால்களால் மத்தளம் வாசிக்க - அவருக்காக இறைவன் ஆடிய திருநடனம் இது. அப்போதுஇறைவன் திருநயன ஒளி வரைந்த கோலம் முனிதாண்டவக் கோலம். அந்தக் கோலத்திலிருந்து பால் வெள்ளை நிறத் திருமேனியாய் அம்பிகை கார்த்தியாயினி தோன்றினாள். குமரியம்மன் போன்ற நின்ற திருக்கோலம். சதங்கை கொஞ்சும் எழில் உருவம். ஏழு வயதுக் குமரிப்பெண்ணை, கார்த்தியாயினியாக அலங்கரித்துப் பூஜித்தால் நேத்திர ரோகங்கள் குணமாகும். கண்ணொளி சிறக்கும்.

*7. பூதத் தாண்டவம் :*

கஜாசுரனைச் சம்ஹரித்த நிலையில் ஆடிய தாண்டவம் இது. பிரம்மா நட்டுவாங்கம் செய்ய, வாலை உத்தமி தேவி மத்தளம் வாசிக்க, நந்தி தேவர் கோலவாத்தியம் முழங்க, கணபதி ஜால்ராபோட, முருகன் பூச்சொரிய இறைவன் ஆடிய தாண்டவம் இது. இறைவன் அதிர்ந்து ஆடிய நடனத்தினால் விளைந்தது பூதத் தாண்டவக் கோலம். இதிலிருந்து ஆவிர்பவித்த அம்பிகை காலராத்ரீ. கருநிறத் திருமேனி.

அரிசிமாவில் கோலமிட்டு, எட்டு வயதுப் பெண்ணை அலங்கரித்துப் பூசித்தால் இளமை மாறாத இன்ப வாழ்வு அமையும்.

*8. சுதா தாண்டவம் :*

தண்ட காரண்ய முனிவர்களின் வேண்டுகோளுக்காக இறைவன் ஆடிய தாண்டவம் இது. வரைந்த கோலம் சுதா தாண்டவக் கோலம். இந்தத் தாண்டவக் கோலத்திலிருந்து தோன்றிய பிராட்டி மகா கௌரி. பச்சை நிறத் திருமேனியள். அரிசிமாவில் இந்தக் கோலத்தை வரைந்து, எட்டு வயதுப் பெண்ணை அம்பிகையாக, எழிலுருவினளாக அலங்கரித்து வணங்கினால் வியாபார விருத்தி ஏற்படும்; விபத்துக்கள் உண்டாகா; எண்ணங்கள் செயல் உருவம் பெறும்.

*9 சிருங்காரத் தாண்டவம் :*

நவரசங்களையும் எடுத்துக் காட்டும் எழில் தாண்டவத் திருக்கோலம் இது. இந்தத் தாண்டவத்தில் வரைந்த கோலம் சிருங்காரத் தாண்டவக் கோலம். ஆவிர்பவித்த அம்பிகை ஸித்திதாத்ரீ; சிவந்த திருமேனிப்பாங்கு, கரும்பும் அபயஹஸ்தமும் அண்டியவர்களுக்கு வாழ்வில் இனிமையையும் தைரியத்தையும் அளிக்க வல்லவை. அரிசிமாவில் கோலமிட்டு, பத்து வயதுக் குமரிப் பெண்ணை, அம்பிகையாக உருவகித்து வழிபட்டால் எண்ணங்கள் ஈடேறும். கலைகளில் மேதையாகலாம்; வாக்குகள் பலிதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவதுர்க்கைகள் - ஒருவகை

*சைலபுத்ரீ, கூஸ்மாண்டா, ப்ரம்மசாரிணீ, சந்திரகாந்தா, ஸ்கந்தமாதா, காளராத்ரீ, மஹாகௌரீ, சித்திதாத்ரீ.*

*இத்தகவலும் இங்கு முதற்பக்கங்களில் தரப்பட்டிருக்கும் படங்களும் 1989ஆம் ஆண்டு கலைமகள் தீபாவளி மலரிலிருந்து எடுக்கப்பட்டவை)*

## நவதுர்க்கைகள் - வேறொரு வகை

### (நவராத்ரி பூஜா பத்ததியில்)

*ஆக்னேயீ, சூலினீ, சண்டிகா, சாமுண்டீ, வீரதுர்க்கா, பைரவீ, பிராம்மீ, பைரவீ, மாஹேஸ்வரீ.* (இங்கு இருமுறை பைரவீ வருவதன் காரணம் தெரியவில்லை.)

## நவதுர்க்கைகள் - இன்னொரு வகை

### (பவிஷ்ய புராணத்தின்படி)

ஸர்வசித்திப்ரதாயினி - மத்தியில் பதினெட்டுக் கரங்களுடன் இருக்க சுற்றிலும் பதினாறு கரங்களுடன் நவதுர்க்கா

ருத்ரசண்டா, சண்டோக்ரா, ப்ரசண்டா, சண்டா, சண்டநாயிகா, சண்டவதீ, சண்டரூபா, அதிசண்டிகா, உக்ரசண்டா.

## நவதுர்க்கைகள் - த்யானம்

### (சைவாகமத்தின்படி)

*சைலபுத்ரீ*

வந்தே வாஞ்சித லாபாய சந்த்ரார்த்த த்ருத சேகராம்
வ்ருஷாரூடாம் சூலதராம் சைலபுத்ரீம் யசஸ்வினீம்.

*ப்ரம்மசாரிணீ*

ததானா கர பத்மாப்யாம் அக்ஷமாலா கமண்டலூ
தேவீ ப்ரஸீததுமயி ப்ரஹ்ம சாரிணீ ச அனுத்தமா.

*சண்டகண்டா*

அண்டஜ ப்ரவராரூடா சண்டகோபாZர்ப்படீ யுதா
ப்ரஸாதம் தநுதாம் மஹ்யம் சண்ட கண்டேதி விஸ்ருதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்கந்த துர்க்கா

ஸிம்ஹாஸந கதா நித்யம் பத்மாஞ்சித கர த்வயா
சுபதாZஸ்து சதா தேவீ ஸ்கந்தமாதா யஸஸ்விநீ.

### கூஸ்மாண்டா

ஸுரா சம்பூர்ண கலசம் ருதிராப்லுத மேவ ச
ததானா ஹஸ்த பத்மாப்யாம் கூஸ்மாண்டா சுபதாஸ்து மே.

### காத்யாயனீ

சந்த்ர ஹாஸோஜ்வலாகாரா ஸார்த்தூல வர வாஹனா
காத்யாயனீ சுபம் தத்யாத் தேவீ தானவ காதினீ.

### காளராத்ரீ

கராளரூபா காலாப்ஜ ஸமானாக்ருதி விக்ரஹா
காலராத்ரீ ஸுபம் தத்யாத் தேவீ சண்டாட்ட ஹாஸினீ.

### மஹாகௌரீ

ஸ்வேத ஹஸ்தி ஸமாரூடா ஸ்வேதாம்பர தரா ஸுசி:
மஹாகௌரீ சுபம் தத்யாத் மஹாதேவ ப்ரமோததா.

### சித்திதாயினீ

ஸித்த கந்தர்வ யக்ஷாத்யை: அஸுரை: அமரைரபி
ஸேவ்யமாநா ஸதா பூயாத் சித்திதா ஸித்திதாயினீ.

## விஷ்ணு துர்க்கா த்யானம்

*சங்க சக்ர ஸஹிதாம் த்வய ஹஸ்தே*
*ஊருபாஹும் அபயாம் ஸிதவர்ணாம்*
*அக்னி நேத்ர மஹிஷஸ்ய சிரஸ்திதாம்*
*நௌமி ஸௌம்ய வதனாம் ஹரிதுர்க்காம்*

## அஷ்டாதசபுஜ துர்க்கை

*தத்ர பத்மாந்விதே ஸ்தாநே பூஜ்யா: துர்க்காஸ் து மூர்த்தித:*
*அஷ்டாதச புஜாத்வேகா பீந வக்ஷோ புஜோருஹா*
*ஸர்வாலங்கார ஸம்யுக்தா ஸர்வ ஸித்தி ப்ரதாயினீ*
*மூர்த்தஜம் கேடகம் கண்டாம் ஆதர்சம் தர்ஜநீம் தநு:*
*த்வஜம் டமருகம் பாசம் பிப்ரதீ வாம பாணிபி:*
*சக்தி முத்கர சூலாநி வஜ்ரம் சங்கம் அதாம்புஜம்*
*ஸலாகாம் மார்க்கணம் சக்ரம் ததாநா தக்ஷிணை: கரை:*


படம் - அடுத்த பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ட புஜ துர்க்கை


ஏகவக்த்ராம் சிரோஜ்வாலாம் ரக்த நேத்ராம் புஜாஷ்டக
நீலாங்கீம் கோரதம்ஷ்ட்ராம்ச நாநாலங்கார பூஷிதாம்॥
சாப பாண கபாலாஸி லே சக்ர கதாயுதாம்।
வந்தே துர்காம் பதாக்ராந்த மஹிஷாஸுரமஸ்தகாம்॥



## ஷோடச புஜ துர்க்கா (16 கரங்கள்)

(துர்கா கல்பம்)

த்ரிநயந பந்தக யுக்தாம் சூலாஸ்யாக்ராம் புஜைஸ்ச ஷோடஸபி:।
பந்நகவலய வி பூஷாம் நீலக்ரீவாம் திகம்பராம் பஜே॥




## ருத்ராம்ச துர்க்கா

(காரணாகமம்)

ரக்தாம் பராம் ஸ்யாமலிநீம் த்விநேத்ராம் க்ரீட ரத்நாங்கித் ஹேம பூஷாம்।
ஸஸூல கட்காம் த்ருத சங்க சக்ராம் ம்ருகேந்த்ர யாநாம் ரவி சந்த்ர பூஷாம்॥
இஷ்டார்த்த தாத்ரீம் சுரவந்த்ய பாதாம் ருத்ராம்ச துர்க்காம் மநஸாஸ்மராமி॥



## அஷ்டாதசபுஜ துர்க்கை



தியானம் - முன்பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவசக்திகள் ~ ஒரு வகை (நவராத்ரி பத்ததி)

*ப்ரபா, மாயா, ஜயா, சூக்ஷ்மா, விசுத்தா, நந்தினீ, சுப்ரபா, விஜயா, சர்வசக்திப்ரதா*

## நவசக்திகள் ~ த்யானம் (பவிஷ்ய புராணம்)

### *வாமா*

வ்ருத்தஸ்தா ஜடிலா த்ரயக்ஷா வஹ்நி ஜ்வாலா ஸமப்ரபா
கபாலாபய ஹஸ்தோக்ரா வாமா வாம பலப்ரதா
த்விபாஹுரேக வக்த்ரைஷா விதாதவ்யா விபஸ்சிதா.

### *ஜ்யேஷ்டா*

பாடலாபா பவேத் அஷ்டா கபால சர தாரிணீ
உக்ரா மஹாபலா பூத்யை ஸத்ருக்னீ ஸேஷ பூர்வஜா.

### *ரௌத்ரீ*

ரக்த வஸ்த்ரா ததா ரௌத்ரீ கபாலா சமரீகரா
ஸேஷ பூர்வாது விக்ஞேயா க்ருஷ்ண வஸ்த்ரா ஸுபீஷணா

### *காளீ*

கந ஸ்யாமா தத: காளீ தாம்ர ரக்த நிபாநநா
கபால கர்ணிகா ஹஸ்தா விக்ஞேயா பயநாசினீ.

### *கலவிகரணீ*

நீல சுப்ரா மஹாதேவீ விகர்ணீ கலபூர்விகா
கபாலசக்தி ஹஸ்தேயம் பயஹ்ருத் ச சுபப்ரதா.

### *பலவிகரணீ*

பப்ரு வர்ணா விசாலாக்ஷீ கபாலம் ஜபமாலிகாம்
பிப்ராணா சாந்திதா பூத்யை பலபூர்வா விகர்ணிகா.

### *பலப்ரமதனீ*

தாம்ராபா ஸ்வேத வர்ணா ஸ்யாத் பலப்ரமதனா சுபா
கபால பாஸினீ சேயம் ஸர்வ ஸத்ரு க்ஷயங்கரீ.

### *சர்வபூததமனீ*

ஜபா குசும வர்ணாபா தம்ஷ்ட்ரிணீ ச மனோஹரீ
கபால வஜ்ரிணீ புத தமனீ ஸர்வ பூர்விகா.

### *மனோன்மனீ*

நீலதாம்ராருணா பாஸா ப்ருது வக்தா மனோன்மனீ
கபால கட்கினாம் பூத்யை சத்ருணாம் பயவர்த்தினீ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நவக்கிரக சக்தியர்:




சூரியன்
உஷா, ப்ரத்யுஷா



சந்திரன்
ரோஹிணி



செவ்வாய்
சக்திதேவி



புதன்
ஞானசக்திதேவி



வியாழன்
தாராதேவி



வெள்ளி
சுகீர்த்தி



சனி
நீலா



ராகு
ஸிம்ஹி



கேது
சித்ரலேகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசமஹா வித்யா
## (பத்து மஹாவித்யா ரூபிணிகள்)

தசமஹாவித்தை என்பது சக்தி உபாசனையில் மிக முக்கியமான பத்து மார்க்கங்கள் ஆகும். காளி, தாரா, ஸ்ரீவித்யா, புவனேஸ்வரி, பைரவீ, ஸ்ரீசின்னமஸ்தா, ஸ்ரீதூமாவதீ வித்யா, ஸ்ரீ பகளாமுகீ, ஸ்ரீராஜமாதங்கீ, ஸ்ரீகமலாத்மிகா என்னும் சக்தி மூர்த்தங்கள், அவற்றுக்கான யந்திரங்கள், அவற்றுக்குரிய மந்திரங்கள் என்பன உபாசிக்கிப்படுகின்றன.

இவ்வடிவங்கள் சாந்தம், கோரம், வியப்பு, அருவருப்பு முதலிய பல்வேறு கண இயல்புடையனவாகக் காணப்படும்.

"தித்திப்பையே தின்றால் திகட்டும். கொஞ்சம் காரம், கொஞ்சம் புளிப்பு, கொஞ்சம் கசப்பு, கொஞ்சம் உவர்ப்பு...... இப்படி இருந்தால் திகட்டாது. அப்படித்தான் ஸௌம்ய ரூபம், கோர ரூபம், விசித்ர ரூபம், அதிசய ரூபம், ஆனந்த ரூபம் இப்படிப் பத்துவிதங்களில் தசமஹா வித்யைகளை உபாசிப்பார்கள்."

- பரத்வாஜ் சுவாமிகள்.

"இனிமையிலும் மகிழ்ச்சியிலும் அன்னையைக் கண்டு மகிழ்வதுபோலவே தீமை, பயங்கரம், துக்கம், அழிவு ஆகியவற்றிலும்கூட அன்னையைக் கண்டு வழிபடத் தெரிந்துகொள்! பயங்கரமாக இருப்பதைத் தொழுது வழிபடுவதன் வாயிலாகத்தான் அதன் பயங்கரத்தை முற்றிலும் அகற்றி அமர நிலையை எய்தமுடியும்"

- சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசமஹாவித்யா தியானங்களும்
## யந்திரங்களும் வடிவங்களும்

# 1. காளி


வாமோர்த்வே சின்னமுண்டம் வரமபி ததநோ தக்ஷிணோர்த்வே தீக்ஷ்ணம்
கட்கம் சாதேஹ்ய பீதிம் கரகமல தலே பிப்ரதீம் மேக காந்திம்
திக்வஸ்த்ராம் ஊர்த்வகேசீம் சவகரக்ருத் காஞ்சி கலாபாம் சவாஸ்ருக்
விஸ்பூர்யத் வ்யாத்த வக்த்ராம் சரிதஜன பலதாம் காளிகாம் தாம் பஜேஹம்

(இடது மேல்கரத்தில் வெட்டப்பட்ட தலை, இடது கீழ் கரத்தில் வரம், வலது மேல்கரத்தில் கூரிய கத்தி, வலது கீழ்க்கரத்தில் அபயம் கொண்டவள். கருமையான நிறத்தவள். ஆடையற்றவள். மேல்நோக்கிய கேசமுடையவள், சவங்களின் கரத்தாலான ஒட்டியாணம் அணிந்தவள். சவத்தின் ரத்தத்தால் நிறைந்த திறந்த வாயுடையவள். பக்தர்களுக்குப் பலனளிப்பவள் ஆகிய காளிதேவியைப் பூஜிக்கிறேன்.

காளி மூர்த்தத்தில் ஆதிகாளி, தக்ஷிணகாளி, க்ரீம் காளி, ஸ்திதிகாளி, பத்ரகாளி, மதுகைடப சம்ஹார காளி, குஹ்ய காளி எனப்பல ரூப பேதங்கள் உண்டு. வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் துன்பப்படாமல், பிறருக்கும் துன்பம் தராமல் நமது வாழ்க்கையை முடித்துக்கொள்ளக் காளி வழிபாடு அருள் செய்யும் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தாரா

விஸ்வவ்யாபக வாரிமத்ய விலஸத் ஸ்வேதாம்பு ஜன்மஸ்திதாம்
கர்த்ரீம் கட்க கபால நீல நளினை: ராஜத்கரா மிந்துபாம்
காஞ்சீ குண்டல ஹார கங்கணலசத் கேயூர மஞ்ஜீரதாம்
ப்ராப்தைர் நாகவரைர் விபூஷித தனும் ஆரக்த நேத்ர த்ரயாம்
பிங்காக்ரைகஜடாம் லஸத்ஸ்வ ரஸனாம் தம்ஸ்ட்ரா கராளானனாம்
சர்மத்வைபிவரம் கடௌ விதததீம் ஸ்வேதாஸ்தி பட்டாளிகாம்
அக்ஷோப்யேண விராஜமான சிரஸாம் ஸ்மேரானனாம் போருஹாம்
தாராம் ஸாவஹ்ருதாஸனாம் த்ருடகுசாம் அம்பாம் த்ரிலோக்யா: ஸ்மரேத்.


(உலகம் எங்கும் நிறைந்த ஜலத்தின் நடுவில் விளங்கும் வெண்தாமரையில் வீற்றிருப்பவள். கத்தரிக்கோல், கத்தி, கபாலம், கருங்குவளைப்பூ, இவற்றினை நான்கு கரங்களில் கொண்டவள். சந்திரன் போன்ற நிறத்தவள். சிறந்த சர்ப்பங்களை ஒட்டியாணம், குண்டலம், ஹாரம், கங்கணம், தோள்வளை, பாதச்சலங்கை முதலிய ஆபரணங்களாகக் கொண்டவள். சிவந்த முக்கண்களுடையவள். மஞ்சளும் சிவப்பும் கலந்த முனையுடைய ஒற்றைச் சடையை உடையவள். மின்னும் நாக்கும், தித்திப் பற்களும் கொண்ட அகன்ற முகத்தவள். இடையில் யானைத் தோலாடை அணிந்தவள். வெண்ணிறமான எலும்புகளை அணிந்த நெற்றியை உடையவள். சர்ப்ப ரூபமாக இருக்கும் 'அக்ஷோப்ய' என்ற ரிஷியினால் பிரகாசிக்கும் சிரத்தை உடையவள். புன்சிரிப்புத் தவழும் தாமரை முகத்தினள். சவத்தின் மார்பில் அமர்ந்திருப்பவள். கடினமான மார்பகமுள்ளவள். மூவுலகிற்கும் தாயாய் இருப்பவள். இத்தகைய வடிவில் தாராதேவியைத் தியானிக்குக.)

தாராதேவியை ஆராதிப்பதால் வாழ்க்கைப் பயணம் தடையின்றி நகரும் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 3. ஸ்ரீவித்யா

பாலார்க்காயுத தேஜஸம் த்ரிணயனாம் ரக்தாம் பரோல்லாஸினீம்
நானாலங்க்ருதி ராஜமான வபுஷம் பாலோடு ராட் சேகராம்
ஹஸ்தைரிக்ஷு தனு: ஸ்ருணிம் ஸுமசரம் பாசம் முதாபிப்ரதிம்
ஸ்ரீசக்ரஸ்தித ஸுந்தரீம் த்ரிஜகதாம் ஆதாரபூதாம் ஸ்மரேத்

(பத்தாயிரம் இளம் சூரியர்களின் ஒளியை உடையவள். முக்கண்ணி. சிவப்பு ஆடை தரித்தவள். பலவித ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய தேஹம் உடையவள். பிறைச் சந்திரனைச் சிரத்தில் அணிந்தவள். வலது கைகளில் அங்குசம், புஷ்ப பாணம், இடது கைகளில் கரும்புவில், பாசம் இவற்றைத் தரித்தவள். ஸ்ரீசக்ரத்தில் வீற்றிருப்பவள். இத்தகைய பேரழகியாக ஸ்ரீவித்யாவை நினைக்க வேண்டும்.

ஸ்ரீவித்யா எனும் மஹா திரிபுரசுந்தரியை உபாசிப்பதால் இப்பிறவி பயனுள்ளதாக அமையும் என்பர்.





ஸ்ரீவித்யா - திரிபுரசுந்தரி யந்திரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 4. புவனேஸ்வரி

பாஸ்வத் ரத்னௌக மௌளி ஸ்புரதம்ருத ருசோ ரஞ்ஜயத் சாரு ரேகாம் ஸத்யஸ் ஸம்தப்த கார்த்த ஸ்வரகமலஜபா பாசுராபி: ப்ரபாபி: விஸ்வாகாசாவகாசம் ஜ்வலயத் அசிசிரம் தர்த்ரு பாசாங்குசேஷ்டா பீதீனாம் பங்கி துங்க ஸ்தனமவது ஜகன் மாதுரார்க்கம் வபுர்ண:

(பிரகாசிக்கும் ரத்னங்களாலான கிரீடத்தில் மின்னும் அழகிய சந்திரகலையை உடையவள். உடனே உருக்கிய பொன், செந்தாமரை, செவ்வரத்தம்பூ என்பவற்றைப்போல் பிரகாசிக்கும் தேக காந்தியால் ஆகாயத்தின் எல்லாப் பகுதிகளையும் ஜ்வலிக்கச் செய்கின்றவள். பாசம், அங்குசம், வரதம், அபயம் ஆகியவற்றைத் தாங்கி நிற்பவள். நிமிர்ந்த ஸ்தனமுள்ளவள். மஞ்சள்நிற மேனி, சிவந்த முகம், சிவந்த உதடுகளுடன் சூரியமண்டலத்தில் இருக்கும் புவனேஸ்வரி உங்களைக் காப்பாற்றட்டும்.

புவனேஸ்வரியை வழிபடுவதால் அம்பிகை மீது என்றும் மாறாத பக்தி நலம் கிட்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 5. பைரவீ

ஆதாம்ரார்க்காயுதாபாம் கலித சசிகலா ரஸ்மி தீப்தாம் த்ரிணேத்ராம் தேவீம் பூர்னேந்து வக்த்ராம் வித்ருத ஜபவடீ புஸ்தகா பீத்யபீஷ்டாம் பீனோத்துங்கஸ் தனார்த்தாம் வலிகலிதவிலக்னா மஸ்ருக் பங்கராஜத் முண்டஸ்ருக் மண்டிதாங்கீம் அருணதரதுகூ லானுலேபாம் நமாமி.

(பத்தாயிரம் உதயசூரியன் சேர்ந்த ஒளியினள். பிறையின் கிரணங்களால் பிரகாசிப்பவள். முக்கண்ணி. பூர்ணசந்திரன் போலும் முகத்தினள். ஜபமாலை, புஸ்தகம், அபயம், வரதம் தரித்தவள். பருத்த நிமிர்ந்த மார்பகத்தினள். மூன்று மடிப்பையுடைய இடையினள். இரத்தம் தோய்ந்த முண்டமாலை அணிந்தவள். சிவந்தபட்டாடையும் செம்மையான பூச்சும் உடையவள். இத்தகைய பைரவியை வணங்குகிறேன்.

பைரவியின் உபாசனை ஆத்ம ஞானத்தை அருளும் என்பர்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 6. ஸ்ரீ சின்னமஸ்தா

ப்ரத்யாலிடபதாம் ஸதைவ தததீம் சின்னம் சிர: கர்த்ரிகாம்
திக்வஸ்த்ராம் ஸ்வகன்பந்த சோணித தாராம் பிபந்தீம் முதா
நாகபத்த சிரோமணிம் த்ரிணயனாம் ஹ்ருத்யுத் பலாங்க்ருதாம்
ரத்யாஸக்த மனோபவோபரி த்ருடாம் த்யாயேத் ஜபா ஸந்நிபாம்.

(இடதுகால் முன்னும் வலதுகால் பின்னுமாக நிற்பவள். வெட்டப்பட்ட தலை, கத்திரிக்கோல் என்பவற்றைக் கொண்டவள். ஆடையற்றவள். தலையற்ற தனது தேகத்திலிருந்து எழும் ரத்தமாகிய அமிர்தத்தை மகிழ்வுடன் அருந்துபவள். பாம்பினால் தனது சிரத்தில் மணியைக் கட்டியிருப்பவள். முக்கண்ணி. மார்பில் நீலோத்பல மாலை அணிந்தவள். செவ்வரத்தம்பூ நிறத்தினள். ரதியோடு சேர்ந்த மன்மதன்மேல் நிற்பவள். திகம்பரிகளாகக் கபால மாலைகளுடன் இவளுக்கு இடதுபுறம் டாகினியும் வலதுபுறம் வர்ணினியும் நின்று இரத்த தாரையை அருந்துவார்கள். இத்தகைய ஸ்ரீ சின்னமஸ்தா தேவியைத் தியானிக்கவேண்டும்.

சின்மஸ்தாதேவியின் திருவருள் ஐம்புல அடக்கத்திற்கு வகைசெய்யும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 7. ஸ்ரீ தூமாவதீ

அத்யுச்சா மலினாம்பராZகில ஜனோத்வேகாவஹா துர்மனா:
ரூக்ஷாக்ஷித்ரிதயா விசால தசனா சூர்ப்போதரீ சஞ்சலா
ப்ரஸ்வேதாம் புசிதா க்ஷுதாகுலதனு: க்ருஷ்ணாதிக்ஷேப்ரபா
த்யேயா முக்தகசா ஸதா ப்ரிய கலிர் தூமாவதீ மந்த்ரிணா.

(மிக நீண்டவள், அழுக்காடை அணிந்தவள், அனைவருக்கும் துன்பம் தருபவள், நன்மனமில்லாதவள், கொடுமை விளைவிக்கும் முக்கண்ணினள். இடைவெளியுடைய பல்லினள். முறம் போன்ன வயிற்றினள். நிலையற்றவள். வியர்வையுடையவள். பசியுடையவள். கருத்தவள். விரித்த சடையினள். கலகத்தில் ஈடுபட்டவள்)

தூமாவதி அன்னை நமக்கு மறுபிறப்பு இல்லாமல் செய்யவும், அவ்வாறிருப்பினும் அதற்கிடைப்பட்ட காலத்தில் ஏற்படும் துன்பங்களைப் போக்கவும் அருளுவாள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. ஸ்ரீபகளாமுகீ


கம்பீராம் ச மதோன்மத்தாம் தப்த காஞ்சன சந்நிபாம்
சதுர்புஜாம் த்ரிணயனாம் கமலாசன ஸம்ஸ்திதாம்
பீதாம்பர தராம் ஸாந்த்ர த்ருட பீன பயோதராம்
ஹேம குண்டல ஸம்பூஷாம் பீத சந்த்ரார்த்த சேகராம்
பீத பூஷண ஸம்பூஷாம் ஸ்வர்ண ஸிம்ஹாசன ஸ்திதாம்
ஊர்த்வ கேச ஜடாஜூடாம் கராள வதனாம்புஜாம்
ப்ருகுடீ பீஷணானனாம் சம்பகாரண்ய ரூபிணீம்
வாமே பாசாங்குசௌ சக்திம் தஸ்யாதஸ்தாத் வரம் சுபம்
தக்ஷிணே க்ரமதோ வஜ்ரம் கதா ஜிஹ்வாZபயானி ச.

(அமிர்தக் கடலின் மத்தியில் மணிமண்டபத்தில் ரத்ன மேடையில் தங்க சிம்மாசனத்தில் அல்லது தாமரை மலரில் வீற்றிருப்பாள். கம்பீரமான தோற்றமுடையவள். உருக்கிய பொன்னிற மேனியள். முக்கண்ணி. பொற்குண்டலங்களை அணிந்தவள். பிறைச்சந்திரன் அலங்கரிக்கும் மேல் நோக்கிய ஜடாபாரம் உடையவள். பயமளிக்கும் முகத்தினளாயும் சௌம்ய முகத்தினளாயும் காட்சியளிப்பாள். நெரிக்கும் புருவத்தினள். கதை, எதிரியின் நாக்கு என்பவை தாங்கிய இருகரங்களும் - முத்கரம், பாசம், வஜ்ரம், நாக்கு இவற்றைத் தாங்கும் நான்கு கரங்களும் உடையவளாக (இடது கரங்களில் பாசம், அங்குசம், கத்தி, வரதம் இவற்றையும் வலது கரங்களில் வஜ்ரம், கதை, நாக்கு, அபயம் இவற்றையும் உடையவளாக சம்பகவனம் போன்றவளாகத் திகழ்வாள்.

பகளாமுகி உபாசனை எதிரிகளை வெல்ல உதவும் என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 9. ஸ்ரீ ராஜமாதங்கீ

த்யாயேயம் ரத்னபீடே சுககல படிதம் ஸ்ருண்வதீம் ஸ்யாமளாங்கீம்
ந்யஸ்தை காங்க்ரீம் ஸரோஜே சசி சகல தராம் வல்லகீம் வாதயந்தீம்
கல்ஹாரா பத்தமாலாம் நியமித விகசத் சூளிகாம் ரக்த வஸ்த்ராம்
மாதங்கீம் சங்கபத்ராம் மதுமத விவசாம் சித்ரகோத் பாஸி பாலாம்

(ரத்னபீடத்தில் அமர்ந்து ஒரு பாதத்தை தாமரை மலரில் வைத்திருப்பவள். கிளியின் இனிய சொல்லைக் கேட்பவள். நீல நிறத்தவள். சந்திர கலையைத் தரித்தவள். வீணை வாசிப்பவள். செங்கழுநீர்ப் பூமாலை அணிந்தவள். கட்டிய அழகிய கேசத்தை உடையவள். சிவந்த வஸ்திரம் தரித்தவள். சங்குத் தோடு அணிந்தவள். மது அருந்தி மதத்தினால் தன்னை மறந்திருப்பவள். திலகம் விளங்கும் நெற்றியை உடையவள். இத்தகைய ராஜ மாதங்கியைத் தியானிக்கிறேன்.

அறிவும் புகழும் கலைகளில் மேன்மையும் ஸ்ரீ ராஜ மாதங்கியின் வழிபாட்டால் கிட்டுகின்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 10. ஸ்ரீ கமலாத்மிகா

காந்த்யா காஞ்சன ஸன்னிபாம் ஹிமகிரி ப்ரக்யைச் சதுர்பிர் கஜை:
ஹஸ்தோத்க்ஷிப்த ஹிரண்மயாம்ருத கடை: ஆஸிச்யமானாம் ஸ்ரீயம்
பிப்ராணாம் வரதாப்ஜ யுக்ம மபயம் ஹஸ்தை: கிரீடோஜ்வலாம்
க்ஷௌமாபத்த நிதம்ப பிம்ப லலிதாம் வந்தேZர விந்த ஸ்திதாம்.

(தங்க நிறத்தினள். ஹிமாலயம் போன்ற நான்கு யானைகளின் துதிக்கைகளில் உள்ள பொன்மயமான அமிர்த கலசங்களால் அபிஷேகம் செய்விக்கப்படுபவள். நான்கு கரங்களில்வரம், இரண்டு தாமரைகள், அபயம் இவற்றைத் தாங்கியவள். கிரீடத்தால் பிரகாசிப்பவள். இடையில் பட்டாடை தரித்தவள். இத்தகைய மஹாலக்ஷ்மியை வணங்குகிறேன்.

ஸ்ரீ கமலாத்மிகா எனும் மஹாலக்ஷ்மி வழிபாட்டினால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசமஹா வித்யை அவதரித்த திசைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே"**

அம்பிகையும் நாராயணனும் வேறல்ல என்பது சாஸ்திர முடிபு. சிவசக்தி வடிவமும் (அர்த்தநாரீஸ்வரர்) சிவ விஷ்ணு வடிவமும் (அரியர்த்தர், சங்கர நாராயணர்) இதையே உணர்த்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவீ சூக்தத்தில் அஷ்டலக்ஷ்மீ ஸ்துதி

1. *தனலக்ஷ்மி*

யா தேவீ ஸர்வ பூதேஷு புஷ்டி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி புஷ்டி வடிவில் (நிறைவு) உறைகின்றாளோ அந்த தனலக்ஷ்மிக்கு நமஸ்காரம். நமஸ்காரம். நமஸ்காரம்.

2. *வித்யாலக்ஷ்மி*

யா தேவீ ஸர்வ பூதேஷு புத்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி புத்தி வடிவில் உறைகின்றாளோ அந்த வித்யாலக்ஷ்மிக்கு நமஸ்காரம். நமஸ்காரம். நமஸ்காரம்.

3. *தான்யலக்ஷ்மி*

யா தேவீ ஸர்வ பூதேஷு க்ஷுதா ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி பசி வடிவில் (பசியைத் தீர்க்கும் தான்ய வடிவில்) உறைகின்றாளோ அந்த தான்யலக்ஷ்மிக்கு நமஸ்காரம். நமஸ்காரம். நமஸ்காரம்.

4. *வீரலக்ஷ்மி*

யா தேவீ ஸர்வ பூதேஷு த்ருதி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி தைரிய வடிவில் உறைகின்றாளோ அந்த வீரலக்ஷ்மிக்கு நமஸ்காரம். நமஸ்காரம். நமஸ்காரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஸௌபாக்ய லக்ஷ்மி

யா தேவீ ஸர்வ பூதேஷு துஷ்டி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி மகிழ்ச்சி வடிவில் உறைகின்றாளோ அந்த ஸௌபாக்ய லக்ஷ்மிக்கு நமஸ்காரம். நமஸ்காரம். நமஸ்காரம்.

6. ஸந்தான லக்ஷ்மி

யா தேவீ ஸர்வ பூதேஷு மாத்ரு ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி தாய் வடிவில் உறைகின்றாளோ அந்த சந்தான லக்ஷ்மிக்கு நமஸ்காரம். நமஸ்காரம். நமஸ்காரம்.

7. காருண்ய லக்ஷ்மி

யா தேவீ ஸர்வ பூதேஷு தயா ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி கருணை வடிவில் உறைகின்றாளோ அந்த காருண்ய லக்ஷ்மிக்கு நமஸ்காரம். நமஸ்காரம். நமஸ்காரம்.

4. மஹாலக்ஷ்மி

யா தேவீ ஸர்வ பூதேஷு லக்ஷ்மீ ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ.

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி லக்ஷ்மீ வடிவில் உறைகின்றாளோ அந்த மஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம். நமஸ்காரம். நமஸ்காரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகாளிதேவீ

## (சண்டிகல்பம்)

கட்கம் சக்ர கதா இஷுசாப பரிகான் சூலம் புசுண்டிம் சிர:।
சங்கம் ஸந்ததீம் கரை: த்ரிநய நாம் ஸர்வாங்க பூஷாவ்ருதாம்॥

நீலாஸ்ம த்யுதிம் ஆஸ்ய பாததசகாம் ஸேவே மஹா காலிகாம்।
யாமஸ்தெளவத் ஸ்வபிதே ஹரௌ கமலஜ: ஹந்தும் மதும் கைடபம்॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாலெட்சுமி தேவீ

## (சண்டிகல்பம்)

அட்சஸ்ருக் பரசும் கதேஷு குலிசம் பத்மம் தநு: குண்டிகாம்।
தண்டம் சக்திம் அஸிம் ச சர்மம் ஜலஜாம் கண்டாம் சுராபாஜநம்॥

சூலம் பாச ஸுதர்ச நே ச தததீம் ஹஸ்தை: ப்ரவாளப்ரபாம்।
ஸேவே ஸைரிப மர்த்திநீம் இஹ மஹாலக்ஷ்மீம் ஸரோஜஸ்திதாம்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசரசுவதி
## (சண்டிகல்பம்)

**கண்டா சூல ஸலாநி சங்க முஸலௌ சக்ரம் தநு: ஸாயகம்।**
**ஹஸ்தாப் ஜைர் ததீம் கநாந்த விலஸத் சீதாம்சு துல்ய ப்ரபாம்॥**

**கௌரீ தேஹஸமுத்பவாம் த்ரிஜகதாம் ஆதாரபூதாம் மஹா பூர்வாம்।**
**அத்ர ஸரஸ்வதீம் அநுபஜே சும்பாதி தைத்யார்த்திநீம்॥**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரத்தியங்கிரா தேவீ

## (பிரத்யங்கிரா கல்பம்)

ஸ்யாமா பாஞ்ச த்ரிநேத்ராம் தாம் ஸிம்ஹவக்த்ராம் சதுர்ப்புஜாம்।
ஊர்த்வ கேசீம் ச ஸிம்ஹஸ்தாம் சந்த்ராங்கி த சிரோருஹாம்॥
கபால சூல டமரு நாக பாச தராம் சுபாம்।
ப்ரத்யங்கிராம் பஜே நித்யம் ஸர்வ சத்ரு விநாசிநீம்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகம்பரீதேவீ

## (பத்ம புராணம்)

சூலம் பாச கபால சாபகுலிசம் பாணான் ஸ்ருணீம் கேடகம்।
சங்கம் சக்ர கதாஹி கட்கம் அபயம் கட்வாங்க தண்டம் தராம்॥
வர்ஷா பாவ வசாத்ததான் முனிகணான் சாகேந யாரட்சத।
த்ரைலோக்ய ஜநநீம் மஹேஸதயிதாம் தாம் ஸ்தௌமி சாகம்பரீம்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரகாளி அம்மன்

## தியானம்

ஏகவக்த்ராம் த்ரிணயனாம் ஊர்த்வகேச ஸமன்விதாம்।
ச்யாம வர்ண சமாயுக்தாம் சதுர்தோர் தண்ட மண்டிதாம்॥
ஶூலம் டமருகஞ்சைவ கபாலம் பாசமேவச।
பிப்ரதீம் புல்லநயனாம் நாநாபரண பூஷிதாம்॥
ப்ரஸந்நவதநாம் தேவீம் துகூல வஸநோஜ்வலாம்।
ஸிம்ஹாதிரூடாம் பத்ராப்த்யை பத்ர்காளீ மஹம்பஜே॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்ரகாளீதேவீ (18 கரங்கள்)
## (நிருஸிம்ஹ ப்ரஸாதம்)

அஷ்டாதசபுஜா கார்யா பத்ர காளீ மநோ ஹரா।
ஆலீடஸ்தாந ஸம்ஸ்தாநா சதுஸ்ஸிம்ஹரதே ஸ்திதா॥
அட்சமாலாம் த்ரிசூலம் ச கட்கம் சர்மச ஸர்வதா।
பாண சாபௌச கர்த்தவ்யே சங்க பத்மே ததைவ ச॥
ஸ்ருக்ஸ்ரவௌது ததா கார்யௌ ததா திவ்யம் கமண்டலும்।
தண்ட சக்திச கர்த்தவ்யே க்ருஷ்ணாஜிந ஸுதாசநௌ॥
ஹஸ்தாநாம் பத்ரகாள்யாஸ்து பவேத் 1சாந்தி கரோவர:॥
[1. சாந்திகரவர முத்ரை – அபயமுத்திரை]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரி அம்மன்
## தியானம்

அக்னிஜ்வாலா சிகாமக்நி நேத்ராமக்நி ஸ்வருபிணீம்।
கரண்ட மகுடோ பேதாம் கதாடக்கா கராம்புஜாம்॥
வீராஸநாம் கபாலாஸி பாஸஹஸ்தாம் ரவிப்ரபாம்।
வந்தே தேவீம் மஹாமாரீம் நாகாபரண பூஷிதாம்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளசி தேவீ
### (துளசி மகாத்மியம்)

த்யாயேத்ச துளஸீ கேவீம் ஸ்யாமாம் கமலலோசநாம்।
ப்ரஸந்நாம் பத்ம கல்ஹார வராபய சதுர்ப்புஜாம்॥
கிரீட ஹார கேயூர குண்டலாதி விபூஷிதாம்।
தவளாம் சுக ஸம்யுக்தாம் பத்மாஸந நிஷேதுஷீம்॥



## பிராணசக்தி தேவீ
### (சாரதா திலகம்)

ரக்தாம்போதி வ்யபோ தோல ஸதருண ஸரோஜாதிருடா கராப்ஜை:।
பாசம் கோதண்டம் இக்ஷு உத்த்வ மபி குணமப்யங்குசஞ்ச பஞ்சபாணான்॥
பிப்ராணாஸ்த்ர கபாலம் த்ரிணயந லஸிதா பீதவக்ஷோருஹாப்யாம்।
தேவீ பாலார்க்க வர்ணா பவது சுககரீ ப்ராணசக்தி: பாதுந:॥



## அங்காளம்மன்
### தியானம்

ஏகவகத்ராம் த்ரிணேத்ராம் ச ஜடாமகுட மண்டிதாம்।
ஜ்வாலாகேசாம் கராளாஞ்ச தக்ஷிணே நக்ர குண்டலாம்॥
வாமகர்ணே பத்ர பூஷாம் ஸர்வாபரண பூஷிதாம்।
பாச சூல கபாலோக்ர டங்க ஹேதி விராஜிதாம்॥
பீதாம்பரதராம் வ்ருஷாரூடாம் கங்காள பரமேஸ்வரீம்।
வந்தே சதுர்புஜாமுக்ராம் குங்குமாபாம் சுபப்ரதாம்॥

### காயத்ரீ

ஓம் காம் கங்காள்யை ச வித்மஹே ஜ்வாலா கேசாய ச தீமஹி।
தந்நோ தாத்ரீ ப்ரசோதயாத்॥



## திரெளபதி அம்மன்
### தியானம்

த்விநேத்ராம் ஏகவக்த்ராம்ச பத்மா பயகராம் புஜாம்।
ஹரித்ரா வஸ்த்ர ஸம்யுக்தாம் கிரீடமகுடோஜ் வலாம்॥
மல்லிகா மால்ய ஸம்யுக்தாம் ஸர்வாபரண பூஷிதாம்।
ஞான வைராக்ய தாத்ரீஞ்ச மோக்ஷ ஸாம்ராஜ்ய காரிணீம்॥


### காயத்ரீ

ஓம் த்ராம் த்ரெளபத்யை ச வித்மஹே மல்லிகா மால்யை ச தீமஹி।
தந்நோ தாத்ரீ ப்ரசோதயாத்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா சதாசிவமூர்த்தி

அருவுருவத் திருவடிவாம் சிவலிங்கத் திருமேனியே சதாசிவ ஸ்வரூபம். அந்த அருவுருவ நிலைக்கு உருவம் கொடுக்கும் முயற்சியே இந்த சதாசிவரும் மனோன்மனியும் சேர்ந்த நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தொழில் சக்தியர்

பரம்பொருட் சக்தியின் மிக உயர்ந்த நிலைகளான **சிவம், சக்தி, நாதம், பிந்து** எனும் நான்கு படித்தரங்களிலும் அதற்கு உருவம் என்பதே இல்லை.

அதற்கு அடுத்த நிலையில் ஐந்தொழில் புரியும் அதிஷ்டான மூர்த்திகளில் **அருளல்** தொழிலுக்குரிய **சதாசிவ மூர்த்தம்** சிவ சக்தி ஐக்கியமாகிய - அருவுருவாகிய **சிவலிங்க** வடிவமாகும். உருவமாயும் அருவமாயும் இருக்கும் அவ்வடிவத்திற்கும்கூட சிற்ப சாஸ்திரங்கள் ஆகம அடிப்படையில் சில உருவ அமைதிகளைக் கற்பிக்கின்றன. அவரது சக்தியையும் மனோன்மணி என விபரிக்கின்றன.

அடுத்த படியாகிய **மறைத்தற்** தெழிலுக்குரிய **மகேஸ்வர** நிலையிலேயே இறைசக்தி பலவித நாமரூப பேதங்களை எடுக்கின்றது. **லிங்கோத்பவர், தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர்** முதலிய மகேஸ்வர வடிவங்களில் மிக உன்னதமானவை இருபத்தைந்து என அறியப்பட்டபோதிலும் மஹேஸ்வர வடிவங்கள் இன்னும் பலவாக விரியும்.

"எத்திறம் ஈசன் நின்றான், அத்திறம் அவளும் நிற்பள்" எனும் சைவ சித்தாந்த நூற்கருத்திற்கிணங்க சக்தியின் வடிவங்களும் அதற்கேற்ப 'ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து' காணப்படுகின்றன. 'கேவலரூபம்' எனும் தனித்த சக்தி வடிவங்கள் பலவற்றையும்கூட நாம் சாஸ்திர நூல்களில் காணலாம்.

அடுத்த நிலையில் நிற்கும் இறைசக்தி **அழித்தல்** தொழிலுக்குரிய **உருத்திரன்.** இந்நிலையில் இறைரூபங்கள் எழுதப்படவில்லை. **காத்தல்** தொழிலுக்குரியது **விஷ்ணு.** இவரது சக்தி இரண்டாகப் பிரிந்து அருட்காட்சி தருகின்ற - பூமிதேவி, ஸ்ரீதேவி என்னும் ஒரே தேவியாகிய **ஸ்ரீ மஹாலக்ஷ்மித்** தாயாராவார். இவளே வடநாட்டு மீராபாயாகவும் தென்னாட்டு ஆண்டாளாகவும் தோற்றம் தருவதோடு மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் தோறும் அருட்சக்தியாக வெளிப்படுகிறாள்.

இறுதி நிலையில் பிரம்மா படைத்தல் தொழிலுக்குரியவர். இவருக்குரிய சக்தி சரஸ்வதி எனப் பொதுவாக வழங்கப்படுகிறது. இது காயத்ரி, சாவித்ரீ, சரஸ்வதி என மூன்றாக விரிகிறது. மேலும், வாக்தேவி, மாதங்கி, ஸ்ரீவித்யா என இன்னும் பல ரூபங்களில் இந்த பிரம்ம சக்தியின் விரிவை நாம் சாஸ்திரங்களில் கண்டுகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்ரம்மாவின் சக்திகள் மூவர்.

இம் முப்பெரும் தேவியரும் கால சந்தி தேவிராவர். காயத்ரீ, சாவித்ரீ, சரஸ்வதீ என்னும் இவர்கள் மூவரும் முறையே காலை, நடுப்பகல், மாலை என்னும் காலப் பொழுதுகளுக்குரிய சக்தியராகவும் பிரம்மாவின் சக்தியராகவும் சொல்லப்படுகின்றனர்.

இம் லுவரில் காயத்ரீதேவி சூர்ய காயத்ரீ மந்திர வடிவினளாகவும், அந்தணர்களின் அரும்பெரும் மந்திர சக்தியாகவும், இருக்கு வேதம் போற்றும் வேத மாதாவாகவும், இன்று அகில உலகிலுள்ள ஆன்மீக வாதிகளின் சமயம் கடந்த சக்தியாகவும் விளங்குகிறாள்.

சாவித்ரீ என்பது சவித்ரு ஆகிய ஒளிக்கடவுள் பற்றிய மந்திரம் என்ற காயத்ரி மந்திரத்தின் இன்னொரு பெயராகவும் மதிய வேளையில் செய்யும் சந்த்யாவந்தனத்தின் (மாத்யாஹ்னிகம்) தேவியாகவும் அமைகின்றாள்.

சரஸ்வதீ பிரம்மாவின் நாவில் உறைவதனால் நாமகளாகவும், சொல்வன்மைக்கு அதிபதி என்பதால் வாக்தேவியாகவும், கலைகள் யாவற்றுக்கும் காரணசக்தி என்பதால் கலைவாணி ஆகவும் போற்றப்படுகிறாள். கல்வித் தெய்வம் இவளே. வித்தையின் உறைவிடம் இவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீதேவீ

## (மார்க்கண்டேய புராணம்)

தேவீம் [த்யாயேத்] பூர்வாஂஹ ஸந்த்யாயாம் காயத்ரீம் வஂஹி ரூபிணீம்।
குமாரீம் ரக்த வஸ்த்ராங்கீம் ரக்தஸ்ரக் அநுலேபநாம்॥
சதுர்புஜாம் சதுர்வக்த்ராம் வரதாம் ச அஷ்டலோசநாம்।
பத்மாட்ச மாலா வலயம் பிப்ரதீம் தக்ஷிணேகரே॥
வாமே கமண்டலும் பாணௌ ஸ்ருவம் ஸவ்யேதரே கரே।
அபயம் வாமஹஸ்தே ச பத்மபீடே ப்ரதிஷ்டிதாம்॥
ருக்வேத ரூபிணீம் ப்ராதஸ்ஸவநாம் ஹம்ஸ வாஹநாம்।
ஸா ஸாயதாம் ச ப்ருஹதீம் கார்ஹபத்யே ப்ரதிஷ்டிதாம்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவித்ரீதேவீ
## (மார்க்கண்டேய புராணம்)

தேவீம் மத்யாந்ஹ சந்த்யாயாம் ஸாவித்ரீம் ருத்ர ரூபிணீம்।
யுவதீம் ஸ்வேத வஸ்த்ராட்யாம் சுக்லஸ்ரக் அநுலேபநாம்॥
சதுர்ப்புஜாம் சதுர்வக்த்ராம் வரதாம் த்வாத சேக்ஷணாம்।
ருத்ராக்ஷமாலா வலயம் பிப்ரதிம் தட்சிணேகரே॥
வாமே கரேச கட்வாங்கம் த்ரிசூலம் தட்சிணே க்ரே।
வாமே கரே அபயம் தேவீம் அர்த்தேந்து தாரிணீம்॥
ஸ்வர்ணபீடே ஸ்திதாம் ஸௌம்யே யஜுர் வேதஸ்வரூபிணீம்।
மாத்யந்தி நாக்ய ஸவநே ஸதீம் கோவருஷ வாஹநாம்ா।
தக்ஷிணாக்நி ஸ்வரூபாம் தாம் த்யாயேத் நித்யம் விசுத்ததீ:।





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரசுவதி தேவீ

## (மார்க்கண்டேய புராணம்)

ஸரஸ்வதீம் து ஸாயாங்ஹே ஸந்த்யாயாம் விஷ்ணு ரூபிணீம்।
ஸ்தவீரேந்தீவர ச்யாமாம் நீல குஞ்சித மூர்த்தஜாம்॥
சதுர்ப்புஜாம் சைக வக்த்ராம் பத்ம பத்ராய தே க்ஷணாம்।
சங்கம் சக்ரம் கதாம் சைவ ததை வாபய தம்புந:॥
பீதாம்பரம் த தாநாஞ்ச திவ்ய ஸ்ரக் அநுலேபநாம்।
த்ருதீய ஸவநாக்யாம் ச த்யாயே யைவம் விஷ்ணு ரூபிணீம்॥
நீலபீடேஸ்திதாம் ஸௌம்யே த்யாயேத் [ஸாம] வேதஸ்வரூபிணீம்।
வரதாம் கருடாரூடாம் ஆஹவநீயே வ்யவஸ்திதாம்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணியின் கருணை நல்கும் அறுபத்து நான்கு கலைகளும், அவளது பல்வேறு ரூப பேதங்களும்.

1. அக்கர இலக்கணம்
2. இலிகிதம்
3. கணிதம்
4. வேதம்
5. புராணம்
6. வியாகரணம்
7. நீதி சாஸ்திரம்
8. சோதிட சாஸ்திரம்
9. தரும சாஸ்திரம்
10. யோக சாஸ்திரம்
11. மந்திர சாஸ்திரம்
12. சகுன சாஸ்திரம்
13. சிற்ப சாஸ்திரம்
14. வைத்திய சாஸ்திரம்
15. உருவ சாஸ்திரம்
16. இதிகாசம்
17. காவியம்
18. அலங்காரம்
19. மதுரபாடனம்
20. நாடகம்
21. நிருத்தம்
22. சத்தபிரமம்
23. வீணை
24. வேணு
25. மிருதங்கம்
26. தாளம்
27. அத்திர பரீஷை
28. கனக பரீஷை
29. இரத பரீஷை
30. கஜ பரீஷை
31. அசுவ பரீஷை
32. இரத்தின பரீஷை
33. பூபரீஷை
34. சங்கிராம இலக்கணம்
35. மல்யத்தம்
36. ஆகருஷணம்
37. உச்சாடனம்
38. வித்துவேஷணம்
39. மதன சாஸ்திரம்
40. மோகனம்
41. வசீகரணம்
42. இரசவாதம்
43. காந்தர்வவாதம்
44. பைபீலவாகம்
45. கௌத்துகவாதம்
46. தாது வாதம்
47. காருடம்
48. நாட்டம்
49. முட்டி
50. ஆகாயப்பிரவேசம்
51. ஆகாயமனம்
52. பாகாயப் பிரவேசம்
53. அதிரிச்சயம்
54. இந்திர ஜாலம்
55. மகேந்திர ஜாலம்
56. அக்கினித்தம்பம்
57. ஜலஸ்தம்பம்
58. வாயுத் தம்பம்
59. திட்டித் தம்பம்
60. வாக்குத் தம்பம்
61. சுக்கிலத் தம்பம்
62. கன்னத்தம்பம்
63. கட்கத்தம்பம்
64. அவத்தைப் பிரயோகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ வித்யா தேவி



ஸ்ரீ இராஜ மாதங்கீ தேவி



ஸ்ரீ வாகீஸ்வரி தேவி



ஸ்ரீ ஸுத்த வித்யா தேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்ருகா அக்ஷரங்கள் எனப்படும் அக்ஷர தேவிகள்

## (எழுத்தாய் இசைந்த இன்னருள் தேவியர்)

ஸ்ரீ வித்யை எனப்படும் சக்தி உபாசனா மார்க்கத்தில் ஐம்பத்தொரு அக்ஷரங்களான 'அ' முதல் 'க்ஷ' வரையிலான எழுத்துக்கள் வடிவில் அம்பிகையே இருக்கிறாள். இவற்றிற்கு மாத்ருகா அக்ஷரங்கள் என்று பெயர். அக்ஷரங்களின் வரிவடிவிலும் அவற்றின் சப்தமாகவும்கூட அவளே இருக்கிறாள். அம்பிகை மாத்ருகா அக்ஷரங்களையே மாலையாக அணிந்திருக்கிறாள்.

அதனால்தான் அம்பிகையை ஆராதிக்கத் தொடங்கும்போது உபாசகர் தமது உடம்பின் ஒவ்வோர் உறுப்பில் ஒவ்வொரு அக்ஷரமாக ஐம்பத்தோர் அக்ஷரங்களையும் சொல்லிக்கொண்டு தொடுவதன்மூலம் (நியாசம்) அந்தந்த இடத்தில் அந்தந்த சக்திகளைப் பதித்துக்கொள்கிறார். இதுபோன்ற நியாசங்களால் தம்மை தேவீ ரூபமாக மாற்றிக்கொண்ட பின்னரே தேவியைப் பூஜைசெய்ய ஆரம்பிப்பது மரபு.

'அ'காரதேவி, 'ஆ'கார தேவி என மாத்ருகா தேவிகள் அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்குத் தனித்தனியே தியானங்கள், தோற்றப்பொலிவுகள் உண்டு. அவற்றை இங்கே காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ''அ'' கார தேவீ

(எழுத்துக்களின் தியானங்கள் – சித்தசாபர தந்திரம்)

அஜாமுகீ ரக்தவர்ணா ஹம்ஸகா தவளாம்சுகா।
ஸராஸநம் வரம் தக்ஷேதத்தேவாமா சராபயா॥



## ''ஆ'' கார தேவி (அதர்வணீதேவீ)

ஆகார க்யாதவர்ணீ தூஸ்யாம சுக்லாம் பரா சுபா।
யத்தே கட்வாங்கம் ச கேடம்ச க்ரமேணைவ வராபயௌ॥



## ''இ'' கார தேவீ (இளாதேவீ)

இகாராக்யாது இலாதேவீ ஸ்வேதா மத்க இபகா சுபா।
சந்த்ர ஹாஸ வரௌ தக்ஷே வாமே தத்தே கதா பயௌ॥



## ''ஈ'' கார தேவீ (ஈசுவரி)

ஈஸ்வரீ ஸ்வர்ண வர்ணாபா வ்ருஷா ரூடா ஸிதாம் சுகா।
ஸாரி காஞ்சுவரம் வரம் தக்ஷே வாமே தத்தே அங்குசா பயௌ॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உ" கார தேவீ (உக்கிராதேவீ)

உக்ராதேவீ ஹி உகாராக்யா ஷட்புஜா ஸிம்ஹகா ஸிதா।
தட்சே சூலாங்குச வராந் வாமே பாச கதாபயான்॥



## "ஊ" கார தேவி (ஊர்ஜஸ்வலா தேவீ)

ஊகாரா ஊர்ஜஸ்வலா தேவீ சார்த்தூல வர வாஹநா।
ரக்தா சதுர்ப்புஜா தத்தே கட்க கேடவராபயாந்॥



## "ரு" கார தேவீ (ருதுதாமா தேவீ)

ருதுதாமா ருகாராக்யா ரக்தவர்ணா விருஷஸ்திதா।
தக்ஷே பாசவரௌ தத்தே ததா வாமே அங்குசா பயௌ॥



## "ரூ" கார தேவீ (ரேணுகை)

ரூகாராக்யா ரேணுகாஇயம் ஷடாஸ்யா ஷட்புஜாஸ்திதா।
சூலம் பாசம் வரம் தக்ஷே வாமே கட்கதா பயான்॥
ததாநா ரக்த ஸிம்ஹஸ்தா க்ரூரா லோக பயங்கரீ॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘‘லு’’ கார தேவீ (லுதம்பரை)

ளுதம்பரா ளுகாராக்யா ஸ்யாமா வ்யாக்ர வரஸ்திதா।
சதுர்முகா அஷ்டஹஸ்தா இயம் தத்தே அஸ்த்ராணி கரை: பரை:॥
த்ரிசூல பாச டமருவரான் வாமகரைஸ்ததா।
கட்கம் பாசம் சூல அபயான் தட்சே பீதாம்பரா சுபா॥

## ‘‘லூ’’ கார தேவீ (லூஞ்சிகை தேவீ)

ளூகாரா ளூஞ்ஜிகாக்யா ஏஷா புஷ்பதந்த கஜஸ்திதா।
ரக்தா தசபுஜார்த்தோ தக்ஷாதி க்ரமச: கரை:॥
த்ரிசூல பாச முஸல சந்த்ரஹாஸ வராங் சுபான்।
வாமை: கரை: கட்க கேட கதாசக்தி அபயாங் ததா॥





## ‘‘ஏ’’ கார தேவீ (ரேவதீ)

ஏகாராக்யா ரேவதீ ஸ்யாத் தசாஸ்யா ருண்ட மாலிநீ।
ரக்தா விம்சத் புஜா ஸிம்ஹ வாஹநா பாலலோசநா॥
கரைர் தத்தே சக்ர சூல பாசகட்க கமண்டலூன்।
அட்ச சூத்ரம் ச சிந்முத்ராம் புசுண்டிம் முத்கரம் வரம்॥
வாமே தத்தே கரை: ஸங்கம் பிண்டி இந்து ம்ருக கேடகான்।
கபாலம் தஹநம் சோஷம் தண்டம் சைவ கதாபயௌ॥

## ‘‘ஐ’’ கார தேவீ (சுஷ்கரேவதீ)

ஐகாராக்யா சுஷ்கபூர்வா ரேவதீ த்ரிசிரா ஹிதா।
மயூரகா ஷட்புஜா இயம் ரக்தகேஸைஸ்ச ஸிம்வ்ருதா॥
அதை: தத்தே கரை: சக்ரம் த்ரிசூலம் சவரம் த தா।
வாமை: சங்கம் கதாம் குர்ச்சீம் கரைர்தத்தே அபயம் ததா॥







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ''ஓ'' கார தேவீ (அசுவினீ தேவீ)

ஒகாராத அச்வினீ தேவீ ரக்தவர்ணா ஷடாநநா।
மயூரகா அர்க்க பாஹு: ஸ்யாத் தத்தே தட்சே அங்குசம் சரம்॥
கட்கம் பாசம் ச சின்முத்ராம் தரம் ச ஏகேகரே ஈக்ஷணா।
வாமே சூலம் கார்முகம்ச கேடம் முசலமேவச॥
புஸ்தகம் ச அபயம் சைவ சர்வ சத்ரு பயங்கரீ॥



## ''ஔ'' கார தேவீ (அகோரை தேவீ)

ஔகாராக்யா ஹி அகோரா இயம் கராளீ தீர்க்க ஜிஹ்விகா।
ஏகவக்த்ரா வக்ரநேத்ரா ப்ருகுடீ குடிலேக்ஷணா॥
நீலமேக நிபா ரௌத்ரீ பேருண்ட வரவாஹநா।
ஷட்புஜார்த்த கரை: தத்தேசூலம் கடீகம் வரம் ததா॥
கதா கேட பயாந் வாமே ததா நாச மஹோதரீ॥




## ''அம்'' கார தேவீ (அஞ்சனா தேவீ)

அஞ்சநாபா அஞ்ஜநா தேவீ பஞ்சாஸ்யா ஜடிலா க்ருஸா।
மஹோதரீ மஹாவ்யாக்ர வர வாஹந மாஸ்திதா।
சதுர்ப்புஜா சூலபாச வராபய கரா மதா॥



## ''அ: (அஹ)'' கார தேவீ (அஜாதேவீ)

அ: இத்யாக்யாது அஜா தேவீ த்ரிசிராஸ்து த்ரிலோசநா।
ரக்தா பீதாம்பரா க்ரூர தார்க்ஷு வரவாஹநா॥
ஷட்புஜா சூல பட்ட அஸி வர தாநகரா ஞ்சிதா।
வாமே அங்குச பாச மஹா கேட அபயாந் தத்தேகரை:॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "க்ஷ" கார தேவீ (பூதவிந்யாசினி தேவீ)

பூத விந்யாஸிநீ சுப்ரா கஜாரூடா சதுர்ப்புஜா।
த்ரி சூலம் ச வரம் தக்ஷே வாமே அங்குசம் அதாபயம்॥



## "க்ஷ2" (க்க) கார தேவீ (கத்கியோதிநி தேவீ)

வஜ்ரபீட ஸ்திதா பீதாத்ரிசிராஸ்ச த்ரிசூலிநீ।
'க்க'ாக்யா 'க்க'த்யோதிநீ கட்க வராபயகரா மதா॥



## "க்ஷ3" கார தேவீ (தூம்ரை தேவீ)

காக்யா தூம்ரா சதுர்வக்த்ரா ஸிம்ஹஸ்தா அஷ்டபுஜா சுபா।
தூம்ராபா தக்ஷிணே தத்தே சூலம்ச அக்ஷம் ஸ்ருவம் வரம்।
வாமே து புஸ்தகம் குண்டிம் கபால மபயம் க்ரமாத்॥

1825



## "க்ஷ4" கார தேவீ

க்ருஷ்ணவர்ணா "க்ஃக" ரூபா ச ஸூகராஸ்யா க்ருசோதரீ।
ஷட்புஜா சூல கட்வாங்க வரான் தட்ச புஜை: க்ரமாத்।
வாமே கட்கம் ததா கேடம் அபயம் சத்ரு பஞ்ஜிநீ॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ''ஙு'' கார தேவீ (அநந்த சக்தி)

அநந்த சக்திர் தேவேஸீ ரக்தா பர்ஹிண வாஹநா।
ஷட்பாஹுஷு சாபா அஸிகேட தாந அபயவராந்விதா॥



## ''ச'' கார தேவீ (ஸுஷுமை)

சுஷுமா ச ஏகவக்த்ரா ஏஷா ஹயாருடா சதுர்ப்புஜா।
கட்க கேடதரா க்யா ச வராபய கராந்விதம் சுபா॥



## ''சே'' (ச்சோ) கார தேவீ (நிர்ஜராருந்ததி)

'ச்சே' தி நிர்ஜ்ஜரா அருந்ததீ இயம் பீதா மரக்கட வாஹநா।
த்ரிசூலம் க்ஷுரிகாம் பாசம் கேடம் ச தததீ சுபா॥



## ''ஜ'' கார தேவீ (போகதா)

ஜே போகதா ஹி ரக்தா ஸ்யாத் த்ரிநேத்ரா ஸிம்ஹவாஹநா।
சதுர்ப்புஜா கட்க கேட வராபய கராந்விதா॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ச$^{4}$" கார தேவீ (நிர்ஜரநதி தேவீ)

"ஜ்.·.ஜோ" நிர்ஜ்.·.ஜா நதீ தேவி ஸரத் மேகநிபா அம்புஜா।
பாசம் வராபயௌ தத்தே நக்ரஸ்தா சுபதா ந்ருணாம்॥



## "ஞ" கார தேவீ (பிரபோதிநி தேவீ)

'ஞா க்யா ப்ரபோதிநீ சுப்ரா ஸிம்ஹஸ்தா சித்ஸ்வரூபிணீ।
த்ரிசூலாம் புஜசிந்முத்ரா அபயாந்வித கரா சுபா॥



## "ட" கார தேவீ (தாரிணீ)

'ட'க்யா தாரிணீ தேவீ சூல டங்க வராபயாந்।
தத்தே மத்த மதங்கஸ்தா பாடலாபா ஸிதாம் சுகா॥



## "ட$^{2}$" (ட்ட) கார தேவீ (கிரியா சரஸ்வதி)

க்ரியா ஸரஸ்வதீ "ட்டா" க்யா டங்காங்குச வராபயாந்।
தத்தே ஸிம்ஹவராரூடா ச ஏகவக்த்ரா அருணா மதா॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ட$^{3}$" கார தேவீ (டகாரிணீதேவீ)

"ட$^{3}$" காரிணீ பஞ்ச வக்த்ரா ஸிதா டங்க கதா தரா।
சதுர்ப்பாஹு: குக்குடஸ்தா வராபய கராச ஸா॥



## "ட$^{4}$" கார தேவீ (ஸ்ரீகந்தா தேவீ)

ட' ரூபிணீ ஸ்ரீகநாக்யா பஞ்சவக்த்ரா மயூரகா।
தடித் கௌரீ கரைர் தத்தே சூல டங்கவராபயான்॥




## "ண" கார தேவீ (அநந்த சக்தி)

'ண'ா அநந்த ஸக்தி: தேவேஸீ ரக்தா பர்ஹிண வாஹநா।
ஏகவக்த்ரா சூல சக்தி வராபய கராந்விதா॥



## "த" கார தேவீ (சரஸ்வதி)

'த' ஆக்யா ஸரஸ்வதீ சுப்ரா ஸிதபக்மாஸநாம் சுகா।
ஏகவக்த்ரா கரைர் தத்தே வீணா தந்த்ரீ வராபயான்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

362

## ''த$^{2}$'' (த்த) கார தேவீ (நீலகண்ட சரஸ்வதி)

பஞ்சவக்த்ரா ஸிதா 'த்த'ாக்யா நீலகண்டா சரஸ்வதீ।
ஸாரிகாம் டமரும் தத்தே வ்ருஷாரூடா வராபயௌ॥



## ''த$^{3}$'' கார தேவீ (போகதாயிநீ)

ஏகவக்த்ரா அருணா த்'ாக்யா அஷ்ட புஜா போகதாயிநீ।
தத்தே அப்ஜம் ஸாரிகாம் வீணாம் டமரு அர்ண வரா பயான்॥



## ''த$^{4}$'' (த்ஹ) கார தேவீ (அமலா தேவீ)

ஸ்யாமலா ச அமலா ''த்ஹ'' ஆக்யா ஹி ஏகவக்த்ரா சதுர்ப்புஜா।
வ்ருஷஸ்தா சாரிகாம் அப்ஜம் கரைர் தத்தே வரபயௌ॥



## ''ந'' கார தேவீ (அநந்த சக்தி)

'ந' அநந்த சக்தி: தேவேஸீ மத்த மாதங்க ஸம்ஸ்திதா।
ஏகவக்த்ரா தடித் கௌரீ தத்தே பத்மவரா பயாந்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### “ப” கார தேவீ (இச்சாசக்தி ரூபிணி)

'ப' ஆக்யா இச்சா சக்திரூபா இயம் சூலசக்தி வராபயான்।
தத்தே கரை: பஞ்சவக்த்ரா புல்ல பத்மாஸநா அருணா॥



### “ப$^{2}$” (ப்ப) கார தேவீ (ஆதப கோமலை)

பஞ்சவக்த்ரா உக்ரஸிம்ஹஸ்தா பாடலாதப கோமலா।
'ப்ப' ஆக்யா ஆசுக ஏண அஸிகேட வராபய தராசரான்।
பாசம் ச டமருகம் தத்தே த்ரமேண தசபி: கரை:॥



### “ப$^{3}$” கார தேவீ (சித்சியாமளை)

சித்ஸ்யாமலா பப்ருவர்ணா ஸிம்ஹாரூடா 'ப$^{3}$'ரூபிணி।
தத்தே க்ரமேண தசபிர்கரை: பூர்வவத் ஆயுதான்॥



### “ப$^{4}$” (ப்ஹ) கார தேவீ (சியாமளை)

'ப்ஹ' ஆக்யாத ஸ்யாமலா ச ஏகவக்த்ரா பத்ராஸநே ஸ்திதா।
உத்யத் ரவி நிபா தத்தே சரசாப வராபயான்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ம" கார தேவீ (வித்தியா சியாமளை)

'ம' ஓ வித்யா ச்யாமலா தேவீ ஹயாஸ்யா ஸ்படிக ப்ரபா।
வீணா வாத ந தத்வக் ஞா வராபயகரா சுபா॥



## "ய" கார தேவீ (தீபிநீ)

யாக்யா இயம் தீபிநீ தேவீ ஸிம்ஹஸ்தா அஷ்ட புஜாஸிதா।
சூல சாப இஷு பாஸாஸி கேடதாநா பயாந்விதா॥



## "ர" கார தேவீ (ரேசிகா)

ரேபாக்யா ரேசிகா ச்யாமா ஸிம்ஹஸ்தா லோஹிதாம் சுகா।
பஞ்சாஸ்யா அஷ்டகரை: தத்தே தக்ஷவாமக்ரமேணஸா॥
கட்க கேடக அங்குச கதா பாச சூலவரா பயான்॥



## "ல" கார தேவீ (மோஹினீ)

லாத்மிகா மோஹிநீ தேவீ ஸ்வர்ணா பா கஜஸம்ஸ்திதா।
ஷட்புஜாங்குச சூலாஸி கேடதாநா பயாந்விதா॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "வ" கார தேவீ (பா(நா)ராயணீ)

வாக்யா பாராயணீ தேவீ ஸ்படிகாபா அருணாம் சுகா।
ஸ்புட பத்மாஸநா தத்தே பத்ம த்வய வராபயான்॥



### "ம" கார தேவீ (மங்களகௌரி)

மாக்யா மங்கள கௌரீது தப்தஜாம் பூ நதப்ரபா।
ஸஹஸ்ர பத்ம பீடஸ்தா திவ்யாபரண பூஷிதா॥
சதுர்ப்புஜா கரைத் தத்தே பத்மத்வாய வராபயான்॥




### "ஷ" கார தேவீ (அநுக்ரியா)

ரக்தா 'ஷ' அநுக்ரியா தேவீ ராஜஹம்ஸ வரஸ்திதா।
பீதாம்பரா கரைர் தத்தே பத்மத்வய வராபயான்॥



### "ஸ" கார தேவீ (ஸித்தக்கிரியை)

ஸித்த க்ரியா ஸகாராக்யா ஸிதாப்ஜ நிவாஸிநீ।
பாடலாபா கரைர் தத்தே சிதம்புஜ வராபயாந்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ''ஹ'' கார தேவீ (ஆத்தியாயிநீ)

ஆத்யாயிநீ 'ஹ' காராக்யா மத்த மாதங்க வாஹநா।
பாடலாபா கரைர் தத்தே சிதம் புஜவரா பயான்॥



### ''ள'' கார தேவீ (பந்தமோசிநீ)

ளோ பந்தமோசிநீ தேவீஸ்வர்ண வர்ணா கஜஸம்ஸ்திதா।
ஷட்புஜாங்குச சூலாஸி கேட தாந அபயாந் விதா॥



### ''க்ஷ'' கார தேவீ (மாயாமாலிநீ)

க்ஷோ மாயா மாலிநீ தேவீ பஞ்சா நநவரா ஸ்திதா।
பஞ்சாஸ்யா பாடலா தத்தே கட்க சூலவராபயான்॥





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டேஸ்வரி



## தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச கரண்ட மகுடான்விதாம்
துகூல வஸனாம் ஸ்யாமாம் வாமஹஸ்த த்ருதோத்பலாம்
ஸுகாஸீனாம் ஸுரூபாம் ச ஸர்வாபரண பூஷிதாம்
சண்டேஸீம் ஸததம் நௌமி கௌரீ பல வர ப்ரதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீவித்யா உபாசனை

ஸ்ரீவித்யை என்பது அம்பிகையை விசேடமாக ஆராதிப்பதாகும். அது அன்னைக்கும் குழந்தைக்கும் இடையிலான அன்பைப் போன்றது. தொன்றுதொட்டு வருவது. வேதங்களிலும், பாவனோபநிஷத்து, த்ரிபுரோபநிஷத்து, பஹ்வ்ருசோபநிஷத்து முதலிய உபநிடதங்களிலும் ஸ்ரீசூக்தம், துர்க்கா சூக்தம், தேவீ சூக்தம் முதலிய சூக்தங்களிலும் தேவீ உபாசனை சொல்லப்படுகிறது. சந்த்யாவந்தனத்தில் ஸ்ரீ காயத்ரீ தேவி உபாசிக்கப்படுகிறாள்.

இதிஹாசமாகிய மஹாபாரதத்தில் போருக்குமுன் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனிடம் துர்க்காதேவியைப் பிரார்த்திக்குமாறு கூறுகிறான். பல புராணங்களில் தேவி பூஜை விபரிக்கப்படுகிறது. பிரம்மாண்ட புராணத்தில் **லலிதா சஹஸ்ர நாமமும், லலிதா த்ரிசதியும்** இடம்பெறுகின்றன. மார்க்கண்டேய புராணத்தில் **சப்தசதீ** எப் புகழ்பெற்ற **தேவீ மஹாத்மியம்** காணப்படுகிறது. **ஆகமரஹஸ்யம், ஸம்ஹிதை, யாமளம், ஆர்ணவம், தந்த்ரம்** என்ற பெயர்களில் எத்தனையோ நூல்கள் சக்தி வழிபாட்டு முறைகளையும் தத்துவங்களையும் விளக்குகின்றன.

ஸ்ரீவித்யை என்னும் சக்தி உபாசனையில் திளைத்தவர்களாகப் பன்னிருவரைச் சாஸ்திரங்கள் கூறும். மனு, சந்திரன், குபேரன், லோபாமுத்திரை, மன்மதன், அகஸ்தியர், அக்னி, சூரியன், இந்திரன், ஸ்கந்தன், சிவன், துர்வாசர் ஆகியோரே அவர்கள்.

மந்திரமும், யந்திரமும், தந்திரமும் ஸ்ரீவித்யை எனும் முக்கோணத்தின் மூன்று கோணங்கள். அவ்வகையில் இங்கு முக்கியமான மந்திரம் பஞ்சதசாக்ஷரீ. முக்கியமான யந்திரம் ஸ்ரீசக்ரம். முக்கியமான தந்திரம் ஐக்யானுசந்தானம். ஸ்ரீசக்ர பூஜையின் மிக உயர்வான நிலையில் சாதகன் தனது உடலையே ஸ்ரீசக்கரமாக பாவனை செய்வது மரபு.

சிவன் உலகிற்குப் பல தந்த்ர சாஸ்திரங்களை அளித்தபின் அம்பிகையின் வேண்டுகோளுக்கிணங்க எல்லாத் தந்திரங்களின் சாரமாக **ஸ்ரீதந்திரத்தை** அருளியதாக ஆதி சங்கரரின் **'ஸௌந்தர்ய லஹரி'** ஸ்லோகம் கூறுகிறது. **ஸ்ரீபுர உபாசனா** அல்லது **ஸ்ரீ வித்யா** எனப்படும் இந்த வழிபாட்டில் எல்லா உபாசனைகளும் அடங்கியிருத்தல் கண்டு **தத்தாத்திரேயர்** பதினெண்ணாயிரம் சுலோகங்களுடன் **'தத்த சம்ஹிதை'**யை உருவாக்கினார். அவரிடம் அதனைக் கற்ற **பரசுராமர்** அதனை ஆறாயிரம் சூத்திரங்களில் இயற்றினார். பரசுராமரின் சிஷ்யர் **ஸுமேதஸ்** என்பார் அதனை மேலும் சுருக்கி அமைத்து **பரசுராம கல்பம் சூத்திரம்** எழுதினார். இதன் அடிப்படையிலேயே இன்று தென்னாட்டின் தேவீ உபாசனை நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கரராயர் என்பார் 'ஸௌபாக்ய பாஸ்கரம்' என்ற பெயரில் லலிதா சஹஸ்ரநாமத்திற்கு ஒரு பாஷ்யம் எழுதியுள்ளார். வாமகேஸ்வர தந்திரத்தின் ஒரு பகுதியான 'நித்யா ஷோடசிகார்ணவம்' என்பதற்கு **'சேதுபந்தனம்'** என்ற பெயரில் ஒரு விரிவுரையும் பஞ்சதசாக்ஷரீ மந்திரத்திற்கு விளக்கமாக **'வரிவஸ்யா ரஹஸ்யம்'** என்ற இன்னொரு நூலையும் எழுதியுள்ளார். பாஸ்கரராயரின் லலிதா சஹஸரநாம பாஷ்யம், சேதுபந்தனம், வரிவஸ்யா ரஹஸ்யம் ஆகிய மூன்று நூல்களும் ஸ்ரீ வித்யைக்கு **'ப்ரஸ்தான த்ரயம்'** எனப்படுகிறது. அவரது சிஷ்யர் உமானந்தநாதர் பரசுராம கல்பசூத்திரத்தை அனுசரித்து 'நித்யோத்ஸவம்' என்ற நூலைத் தந்திருக்கிறார். அவருக்குப்பின் வந்த ராமேஸ்வர சாஸ்திரி **'ஸௌபாக்ய ஸுதோதயம்'** என்று ஒரு உரை எழுதியுள்ளார்.

1938இல் ஸ்ரீசக்ரபூஜை மரபில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டதெனலாம். மேற்கூறிய நூல்கள் யாவற்றையும் ஆராய்ந்து **சிதானந்த நாதர்** என்ற தீக்ஷா நாமத்தையுடைய ஸ்ரீ **சுப்பிரமணிய ஐயர்** என்பார் **ஸ்ரீவித்யா சபர்யா பத்ததி** என்ற நூலை ஆக்கினார். இதன் எளிமைப்படுத்திய வடிவமாக **லகு ஸ்ரீசக்ர பூஜா** முதலியனவும் பின்னர் உருவாகின.

இவற்றின் அடிப்படையிலேயே ஷோடசி, பஞ்சதசாக்ஷரீ முதலிய மந்த்ரோபதேசங்களைக் குரு மூலமாகப் பெற்று ஸ்ரீபுரமாகிய ஸ்ரீநகரத்தில் அமைந்துள்ள ஸ்ரீசக்ரத்தைப் பூஜை செய்து அம்பிகையை ஆராதிக்கும் முறைகள் வளம்பெற்றுள்ளன.

பாரத தேசத்தின் சக்தி பீடங்களிலும் மற்றும் பல்வேறு ஆலயங்களிலும் ஸ்ரீசக்ர ஆராதனைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

இலங்கையில் சக்தி பீடங்களுள் ஒன்றான அளகேஸ்வரம் எனப்படும் முன்னேஸ்வரம் தலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஆதீனகர்த்தராக இருந்த சிவஸ்ரீ நா. குமாரசுவாமிக் குருக்கள் ஸ்ரீ வித்யா உபாசகராக இருந்தார். அவரையடுத்து அவ்வாலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்த சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கு ஒரு மேரு யந்திரத்தை ஸ்தாபித்து ஸ்ரீசக்ர பூஜையை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நல்லூர் கமலாம்பிகா சமேத கைலாசநாதர் திருக்கோவிலிலும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திலும் ஸ்ரீசக்ர வழிபாடுகள் ஆரம்பமாயின. இன்று பல ஆலயங்களிலும் வீடுகளிலும் ஸ்ரீசக்ர வழிபாடுகள் பௌர்ணமி தினங்களிலும் நவராத்திரி காலங்களிலும் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அம்பிகையின் அழகு நகரம்

## ஸ்ரீநகர வர்ணனை

பிரம்மாவின் சத்யலோகம் போலவும், விஷ்ணுவின் வைகுண்டம் போலவும், சிவனின் திருக்கைலாயம் போலவும் அம்பிகையின் இருப்பிடமாக ஸ்ரீநகரம் இருக்கிறது.

பிரம்மாண்டங்களுக்கு அப்பால் அமிர்த சாகரத்தின் மத்தியில் மேருமலையின் மூன்று சிகரங்களான பிரம்மபட்டினம், விஷ்ணுபட்டினம், ருத்ரபட்டினம் ஆகியவற்றினிடையில் இரத்தினத் துவீபத்தில் இது அமைந்துள்ளது. தேவசிற்பி விஸ்வகர்மாவால் அமைக்கப்பட்ட இந்நகரத்தைச்சுற்றி நானா விருக்ஷ மஹோத்யானம், கல்பவாடிகை, சந்தானவாடிகை, ஹரிசந்தனவாடிகை, மந்தாரவாடிகை, பாரிஜாதவாடிகை, கதம்பவனவாடிகை முதலிய உத்தியானங்களும் இரும்பு, எஃகு, செம்பு, வெள்ளீயம், பித்தளை, பஞ்சலோகம், வெள்ளி, தங்கம், புஷ்பராகம், பத்மராகம், கோமேதகம், வஜ்ரம், வைடூர்யம், இந்திரநீலம், முத்து, மரகதம், பவழம், நவரத்தினம், நானாரத்னம் முதலியவற்றால் ஆக்கப்பட்ட கோட்டைகளும் உள்ளன.

அதற்குள்ளே மஹாபத்மாடவீ உள்ளது. அதன் நடுவில் சிந்தாமணி க்ருஹம். அதனுள் ஸ்ரீசக்ரம். அதன் ஒன்பதாவது ஆவரணத்தில் ஸர்வானந்தமயபீடத்தில் பஞ்ச ப்ரம்மாசனத்தில் காமேஸ்வரனது மடியில் காமேஸ்வரி ஆகிய ஸ்ரீமத் திரிபுரசுந்தரீ எழுந்தருளியிருக்கிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் திருவோலக்கம்

## அருட் கொலுவாகிய ஸ்ரீசக்ர வர்ணனை


## (சக்ர ராஜம்)

ஸ்ரீநகரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் யந்த்ர ஸ்வரூபமே ஸ்ரீசக்ரமாகும். இது வெளியிலிருந்து ஆரம்பித்து உள்நோக்கி ஒவ்வொரு சக்ரமாக அமையும் ஒன்பது சக்ரங்களைக் கொண்டது. நவாவரணம் என இது அழைக்கப்படும். அதாவது பூப்ரஸ்தாரம் என்னும் ஒரே தள அமைப்பில் இது ஒவ்வோர் ஆவரணமாக (வரிசை) அமையும். மேரு ப்ரஸ்தாரத்தில் இவ் ஆவரணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு படியாக - தளமாக - உயர்ந்து அமையும். நடுவில் அமைந்திருக்கும் பிந்து என்னும் வட்ட வடிவான சர்வானந்தமய சக்ரத்தில் அம்பிகை காமேஸ்வரன் என்னும் பரசிவனது மடியில் அமர்ந்திருக்க சூழ்ந்திருக்கும் ஒவ்வோர் ஆவரணங்களிலும் உள்ள கமல தளங்கள், முக்கோணங்கள் முதலிய பகுதிகளில் ஒவ்வொரு தேவதைகளாக சக்திகள் புடைசூழ எம்பிராட்டி கொலுவிருக்கும் யந்த்ரமே ஸ்ரீசக்ரமாகும்.

### சிவசக்தி ஐக்கிய வடிவமாகிய ஸ்ரீசக்ரம் - சிவலிங்க ஸ்வரூபமே

ஸ்ரீ சக்ரத்தில் ஒன்றையொன்று வெட்டிக்கொண்டு நான்கு முக்கோணங்கள் மேல் நோக்கிய முனைகளுடன் இருக்கும். இவை சிவ சக்ரம் எனப்படும்.

இதேபோல கீழ்நோக்கிய முனைகளோடு ஐந்து முக்கோணங்கள் ஒன்றையொன்று வெட்டியவாறு காணப்படும். இசை சக்தி சக்ரம் எனப்படும்.



இவையிரண்டும் ஒன்றன்மேல் ஒன்று பொருத்தப்படுவதால் அமைவது நாற்பத்து மூன்று முனைகள் கொண்ட சிவசக்தி ஐக்கிய வடிவம். இதன் நடுவில்தான் சிவசக்திகள் ஒன்றாக அமர்ந்திருக்கும் சர்வானந்தமய பீடமாகிய பிந்து எனும் ஆவரணம் அமைகிறது.

ஒருவகையில் பார்க்கும்போது நான்கு முனைகளைக்கொண்ட சிவசக்ரமானது மச்சை, சுக்கிலம், பிராணவாயு, ஜீவாத்மா ஆகியவற்றையும் ஐந்து முனைகளைக்கொண்ட சக்தி சக்ரம் தாது, தோல், இரத்தம், மாமிசம், எலும்பு ஆகிய ஐந்தையும் குறிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவகையில் தத்துவார்த்தமாக நோக்கினால், சிவசக்ரம் மாயை, சுத்தவித்தை, மகேஸ்வரர், சதாசிவர் ஆகியவற்றையும் சக்தி சக்ரம் பஞ்சபூதங்களையும் குறிக்கிறது.


நாற்பத்துமுக்கோணத்திற்கு வெளியே வட்டமும் எட்டிதழ்த் தாமரையும் அதன் வெளியே பதினாறிதழ்த் தாமரையும் அமையும். அதன் வெளியே மூன்று வட்டங்களும் கோட்டை போன்ற வாசல் அமைப்பும் உருவாகியிருக்கும்.

வெளியில் அமைந்திருக்கும் இந்த பூபுரம் என்னும் சதுரமாயமைந்த கோட்டை போன்ற அமைப்பே முதலாவது ஆவரணமாகும். இங்கிருந்து உள்நோக்கி (மேல் நோக்கி) பூஜைகள் நடைபெறும்.

## முதலாவது த்ரைலோக்ய மோகன சக்ரம்





ஸ்ரீசக்ர யந்த்ரத்தின் முதலாவது ஆவரணம் இதுவாகும். இது நாற்சதுரமாய் மூன்று பிராகாரங்களுடன் விளங்கும். பூபுரம் எனப்படும் இப்பகுதி கோட்டைபோல அமைந்து ஸ்ரீசக்ரத்தைப் பாதுகாப்பதாகும். இதனுள்ளே மேகலாத்ரயும் என்ற மூன்று வட்டங்கள் இருக்கும்.




பூபுரத்தின் வெண்மை நிறமான முதல் ரேகையில் பரதேவதையின் தேக காந்திகளையே சரீரமாகத் தரித்த **தசசித்தி தேவதைகளும்**

சிவப்பு நிறமான இரண்டாவது ரேகையில் **அஷ்டமாதர்களும்**


மஞ்சள் நிறமான மூன்றாவது ரேகையில் **தசமுத்ரா தேவதைகளும்** வசிப்பார்கள்.




இவர்கள் இருபத்தெட்டுப் பேருக்கும் **பிரகட யோகினிகள்** என்று பெயர். இவர்களின் தலைவியான **திரிபுரா சக்ரேஸ்வரீ** முன்புறத்தில் **ரத்னசிம்மாசனத்தில்** பேரானந்தத்துடன் வீற்றிருப்பாள்.

இந்த ஆவரணத்தின் ராகம் - ரீதிகௌளை

## இரண்டாவது ஸர்வாசா பரிபூரக சக்ரம்




இது வெண்ணிறமான பதினாறு தளங்கள் கொண்ட கமலமாகும். ஷோடச கலைகளின் வடிவான - சந்திர ஸ்வரூபமான இச்சக்கரத்தில் பதினாறு **ஆகர்ஷிணீ** தேவதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிப்பார்கள். இவர்களுக்கு **குப்த யோகினிகள்** என்று பெயர். இவர்களின் தலைவியாகிய **திரிபுரேசீ** என்னும் சக்ரேஸ்வரி **மணிபீடத்தில்** வீற்றிருப்பாள்.


இந்த ஆவரணத்தின் ராகம் - சாந்தகல்யாணி



## மூன்றாவது ஸர்வ ஸ்க்ஷோபண சக்ரம்

இது செந்நிறமான எட்டிதழ்ப் பதுமம் (கமலம்).


அஷ்டமூர்த்தி ஸ்வரூபமான இச்சக்கரத்தில் எட்டு **அநங்கதேவதைகள்** வசிப்பர். இவர்கள் **குப்ததர யோகினிகள்** எனப்படுவர். இவர்களுக்குத் தலைவி **திரிபுரசுந்தரீ** எனும் சக்ரேஸ்வரி **சிம்மாசனத்தில்** வீற்றிருப்பாள்.




இந்த ஆவரணத்தின் ராகம் - தீரசங்கராபரணம்

## நான்காவது ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்ரம்


இது பதினான்கு முக்கோணங்களைக் கொண்ட சக்ரமாகும். இது மஞ்சள் நிறமானது. பதினாக்கு லோகஸ்வரூபமான இம் முக்கோணங்களில் பதினான்கு **ஸம்ப்ரதாய யோகினிகள்** வசிக்கிறார்கள். இவர்களின் தலைவி **திரிபுரவாஸினி** எனும் சக்ரேஸ்வரி **மணிமயபீடத்தில்** அமர்ந்திருப்பாள்.




இந்த ஆவரணத்தின் ராகம் - கேதாரகௌளை


## ஐந்தாவது ஸர்வார்த்த ஸாதக சக்ரம்

இது வெளியே உள்ள பத்து முக்கோணங்களாகும். அதனால் பஹிர் தசாரம் எனப்படும். இது பச்சை நிறமானது. தசாவதாராத்மகமான விஷ்ணு ஸ்வரூபமான இச்சக்கரத்தில் பத்து **குலோத்தீர்ண யோகினிகள்** வசிக்கிறார்கள். இவர்களுக்குத் தலைவியாய் **திரிபுராஸ்ரீ** எனும்சக்ரேஸ்வரி **ஸ்வர்ண சிம்மாசனத்தில்** அமர்ந்திருக்கிறாள்.




இந்த ஆவரணத்தின் ராகம் - பைரவி

## ஆறாவது ஸர்வரக்ஷாகர சக்ரம்.





இது அந்தர் தசாரம் என அழைக்கப்படும் உள் பத்து முக்கோணங்களால் ஆனது. பத்துக் கலைகளின் வடிவான இது வெள்ளை நிறமானது. இங்கிருப்பவர்கள் **நிகர்ப்ப யோகினிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படும் பத்துப் பேராவர். **திரிபுரமாலினி** என்னும் சக்ரேஸ்வரி இவர்களின் தலைவியாய் **ரத்னசிம்மாசனத்தில்** வீற்றிருப்பாள்.

இந்த ஆவரணத்தின் ராகம் - புன்னாகவராளி



## ஏழாவது ஸர்வரோக ஹர சக்ரம்

எடடுக் கோணங்களையுடைய வெள்ளை நிறமான இந்த அஷ்டமூர்த்யாத்மகமான ஏழாவது சக்கரத்தில் **வாக்தேவதைகள்** என்னும் பெயரையுடைய **ரஹஸ்ய யோகினிகள்** எட்டுப் பேர் கொலுவிருப்பார்கள். இவர்களின் தலைவியாகிய **திரிபுராசித்தா** என்னும் சக்ரேஸ்வரி **மஹாபீடத்தில்** எழுந்தருளியிருப்பாள்.

இந்த ஆவரணத்தின் ராகம் - சஹானா


## எட்டாவது ஸர்வஸித்தி ப்ரதாயக சக்ரம்

முக்கோண வடிவிலுள்ள இந்தச் வெள்ளை நிறமான சக்கரத்திற்கும் இதற்கு முந்திய எட்டுக் கோணங்களுக்கும் இடையில் வலது, இடது பக்கங்களிலும் மேற்புக்கத்திலுமாக மூன்று நாற்கோணங்கள் அமைந்திருக்கும். இந்த நாற்கோணங்களில் சகல அஸ்திர தேவதைகளும் பாணம், தனுசு, பாசம், அங்குசம் முதலிய ஆயுத தேவதைகளும் வசிப்பர்.

முக்குண ரூபமாகவும் த்ரிசக்த்யாத்மகமாகவும் உள்ள இந்த முக்கோணத்தில் சாதகனுக்கு எதிராக அமைந்துள்ள கீழ்க் கோணத்தில் காமகிரி ஆலயத்தில் அக்னிமயமான **காமகிரி பீடத்தில்** ஆத்மதத்வமயமான வாக்பவபீஜ ரூபிணியும் காதிவித்யாமய ப்ரம்மாத்மக சக்தியும் ஆகிய ஸ்ருஷ்டிக்ருத்ய க்ரியாசக்தி ஸ்வரூபிணி **மஹாகாமேஸ்வரி**யானவள், ஆறுகரங்களுடன் கூடியயவளாக **மித்ரேசநாத**ருடன் வீற்றிருப்பாள்.

வலது கோணத்தில் சூர்யமண்டல மயமான ஜாலந்தர பீடத்தில் வித்யாதத்வமயமான காமராஜபீஜ ரூபிணியும் ஹாதிவித்யாமய விஷ்ணு ஆத்மக சக்தியும் ஆகிய ஸ்திதி க்ருத்ய ஞானசக்தி ஸ்வரூபிணி **மஹாவஜ்ரேஸ்வரி**யானவள் ஆறு கரங்களுடனும் **ஷஷ்டீசநாத**ருடன் வீற்றிருப்பாள்.

இடது கோணத்தில் சந்திரமண்டல மயமான **பூர்ணகிரி** பீடத்தில் சிவதத்வமயமான சக்திபீஜ ரூபிணியும் ஸாதிவித்யாமய ருத்ராத்மக சக்தியும் ஆகிய ஸம்ஹார கருத்ய க்ரியாசக்தி ஸ்வரூபிணி **மஹாபகமாலினி** யானவள் ஆறு கரங்களுடன் **உட்டீசானந்தநாத**ருடன் வீற்றிருப்பாள்.




இம்மூவரும் அதிரஹஸ்ய யோகினிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் தலைவியான திரிபுராம்பா எனும் சக்ரேஸ்வரி முக்கோணத்தின் எதிர்க் கோணத்திலுள்ள இரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறாள்.

இந்த ஆவரணத்தின் ராகம் - ஶ்ரீராகம்

**ஒன்பதாவது ஸர்வானந்தமய சக்ரம்.**

முக்கோணத்தின் மத்தியில் ப்ரஜ்ஞான ஸ்வரூபமான பிந்து சக்ரம் அமைந்துள்ளது. இங்கு மாயாமயமான கயிறுகளால் கட்டப்பட்டுள்ள கருந்திரையினுள் மல்லிகை, முல்லை முதலிய நறுமலர்களால் அலங்கரிக்கப்பட்டு இலவம்பஞ்சு மெத்தை இடப்பட்ட மூப்பத்தாறு தத்வரூபமான படிகளுடன் விளங்குவதுமான பஞ்ச ப்ரம்ம மஞ்சத்தில் திரிலோக சுந்தரனும் காமேஸ்வரனும் ஆகிய பரப்ரம்மம் வீற்றிருக்க, அவரது இடது தொடைமேல் திரிலோக மோகினியாகிய மஹாதிரிபுரசுந்தரி பராபட்டாரிகை வீற்றிருந்தருளுகின்றாள்.

இந்த ஆவரணத்தின் ராகம் - ஆஹிரி

*ஶ்ரீவித்யே பரிபூர்ண மேரு சிகரே*
*பிந்து த்ரிகோண ஸ்திதே*
*வாகீசே சுர வந்திதே ஸுஸமயே*
*மஞ்சே சிவாகாரகே*
*காமாக்ஷீம் கருணாலயாங்கித தனும்*
*காமேஸ்வராங்க ஸ்திதாம்*
*காஞ்ச்யாம் சின்மய காமகோடி நிலையாம்*
*ஶ்ரீ ப்ரம் வித்யாம் பஜே.*


*சிவே சிவஸுசீதலாம்ருத தரங்க கந்தோல்லஸந்*
*நவாவரண தேவதே நவநவாம்ருத ஸ்யந்தினி*
*குரு க்ரம புரஸ்க்ருதே குணசரீர நித்யோஜ்வலே*
*ஷடங்க பரிவாரிதே கலித ஏஷ புஷ்பாஞ்ஜலிம்.*

மங்கள வடிவினளே,
குளிர்ந்த சிவாம்ருதத்தின் திவலைகளில் உதித்த
சந்தனம் கமழும் நவாவரண தேவதை வடிவினளே,
புதிது புதிதாக அமிர்தத்தைப் பெருக்குபவளே,
குரு மண்டலத்தை முன்னிட்டு உணரப்படுபவளே,
முக்குணத்தைச் சரீரமாய்க் கொண்டு விளங்குபவளே,
ஆறு அங்க தேவதைகளால் சூழப்பெற்றவளே,
இந்த புஷ்பாஞ்ஜலியை உனக்குச் சமர்ப்பிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நித்யாதேவிகளும் அவர்களின் யந்திரங்களும்




காமேஸ்வரி நித்யா



பகமாலினி நித்யா









நித்யக்லின்னா நித்யா



பேருண்டா நித்யா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வஜ்ரனிவாஸினீ நித்யா




மஹா வஜ்ரேஸ்வரீ நித்யா

வஜ்ரனிவாஸினீ நித்யா



மஹா வஜ்ரேஸ்வரீ நித்யா






ஶிவதூதீ நித்யா




த்வரிதா நித்யா

ஶிவதூதீ நித்யா



த்வரிதா நித்யா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குலஸுந்தரீ நித்யா



நித்யா நித்யா








நீலபதாகா நித்யா



விஜயா நித்யா








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸர்வமங்களா நித்யா



ஜ்வாலாமாலினி நித்யா




ஜ்வாலாமாலினி நித்யா





சித்ரா நித்யா

சித்ரா நித்யா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ப்ரத₂மாவரணம்

### த்ரைலோக்ய மோஹன சக்ரம்










| | | |
|---|---|---|
| சக்ரேஶ்வரி | - | த்ரிபுரா |
| யோகினீ | - | ப்ரகட |
| ஸ்வரூபம் | - | ப்ருத்₂வீ |
| ரஸம் | - | ஶ்ருங்காரம் |
| நிறம் | - | வெள்ளை, சிவப்ப, மஞ்ஜள் |

## த்₃விதீயாவரணம்

### ஸர்வாஶாபரிபூரக சக்ரம்








| | | |
|---|---|---|
| சக்ரேஶ்வரி | - | த்ரிபுரேஶீ |
| யோகினீ | - | குப்த |
| ஸ்வரூபம் | - | சந்த்ரன் |
| ரஸம் | - | வீரம் |
| நிறம் | - | வெண்மை |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த்ருதீயாவரணம்

### ஸர்வஸம்க்ஷோபண சக்ரம்









சக்ரேஸ்வரீ - த்ரிபுரஸுந்தரீ
யோகினீ - குப்ததரா
ஸ்வரூபம் - ஶிவ
ரஸம் - கருணை
நிறம் - செம்மை

## துரீயாவரணம்

### ஸர்வ ஸௌபாக்யதாயக சக்ரம்








சக்ரேஸ்வரீ - த்ரிபுரவாஸினீ
யோகினீ - ஸம்ப்ரதாய
ஸ்வரூபம் - மஹாமாயா
ரஸம் - பயானகம்
நிறம் - மாதுளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சமாவரணம்

### ஸர்வார்த, ஸாதக சக்ரம்









| | | |
|---|---|---|
| சக்ரேஸ்வரி | - | த்ரிபுராஸ்ரீ |
| யோகினி | - | குலோத்தீர்ண |
| ஸ்வரூபம் | - | விஷ்ணு |
| ரஸம் | - | பீபத்ஸம் |
| நிறம் | - | ஸிந்தூரம் |

## ஷஷ்டாவரணம்

### ஸர்வரக்ஷாகர சக்ரம்








| | | |
|---|---|---|
| சக்ரேஸ்வரி | - | த்ரிபுரமாலினி |
| யோகினி | - | நிகர்ப |
| ஸ்வரூபம் | - | அக்னி |
| ரஸம் | - | ரௌத்ரம் |
| நிறம் | - | செம்பருத்திப்பூ |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸப்தமாவரணம்

### ஸர்வ ரோக₃ஹர சக்ரம்










| | | |
|---|---|---|
| சக்ரேஶ்வரீ | - | த்ரிபுராஸித்₃தா₄ |
| யோகினீ | - | ரஹஸ்ய |
| ஸ்வரூபம் | - | ப்ரக்ருதி |
| ரஸம் | - | ஹாஸ்யம் |
| நிறம் | - | பத்மராகம் |

## அஷ்டமாவரணம்

### ஸர்வ ஸித்₃தி₄ப்ரத₃ சக்ரம்









| | | |
|---|---|---|
| சக்ரேஶ்வரீ | - | த்ரிபுராம்பா |
| யோகினீ | - | அதிரஹஸ்ய |
| ஸ்வரூபம் | - | ஸகுணம் |
| ரஸம் | - | அற்புதம் |
| நிறம் | - | தேஜஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நவமாவரணம்
ஸர்வானந்த மய சக்ரம்





| | | |
|---|---|---|
| சக்ரேஸ்வரீ | - | ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரீ |
| யோகினீ | - | பராபராதி ரஹஸ்ய |
| ஸ்வரூபம் | - | ப்ரஹ்மம் |
| ரஸம் | - | ஶாந்தி |
| நிறம் | - | மஹாதேஜஸ் |







மஹா த்ரிபுரஸுந்தரி
[illegible]
ஆவரணம் 9




மஹா த்ரிபுரஸுந்தரி
ஆவரணம் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்ராவிதானம்


## தசமுத்ரா



சர்வ சம்க்ஷோபிணீ

### ஸர்வஸம்க்ஷோபிணீ முத்ரா (த்ராம்)

இரு கைவிரல்களும் அபிமுகமாயிருக்க தர்ஜனிகளைத் தவிர மற்ற விரல்களின் நுனிகள் ஒன்றுக்கொன்று தொட்டுக் கொண்டிருக்க தர்ஜனிகளை மட்டும் நீட்டிப் பிடிக்கவேண்டும்.



சர்வ வித்ராவிணி

### ஸர்வ வித்ராவிணீ (த்ரீம்)


ஸர்வஸம்ஹோபிணீ முத்திரை போட்டு இரு கைகளின் மத்யமைகளையும் நீட்டிப் பிடிக்கவேண்டும்.



சர்வாகர்ஷிணி

### ஸர்வாகர்ஷிணீ (க்லீம்)

ஸர்வ வித்ராவிணீ முத்திரை போட்டு விரல்களை நீட்டாமல் சற்று வளைத்துப் பிடிக்கவேண்டும்.



சர்வ வசங்கரி

### ஸர்வ வசங்கரீ (ப்லூம்)


கைகளிரண்டையும் பின்னிக்கொண்டு, பின்னிய அக் கைகளைச்சேர்த்துக்கொண்டு இரு அங்குஷ்டங்களையும் மடக்கிய விரல்கள்மேல் வைக்கவேண்டும்.



சர்வோன்மாதினி

### ஸர்வோன்மாதினி (ஸ:)

உள்ளங்கைகள் மேல்நோக்கியிருக்கக் கைவிரல்களை நீட்டியபடி இரு கனிஷ்டிகைகளையும் ஒன்றன்மேல் ஒன்று குறுக்காக வைக்கவேண்டும். மத்யமைகளால் இரண்டையும் மடக்கிப் பிடித்து அங்குஷ்டங்கள் இரண்டையும் மத்யமைகளின்மேல் வைத்து தர்ஜனிகளையும் அனாமிகைகளையும் நீட்டிப் பிடிக்கவேண்டும்.




சர்வ மஹாங்குசா

### ஸர்வ மஹாங்குசா (க்ரோம்)

ஸர்வோன்மாதினியில் நீட்டியவாறிருந்த இரு அநாமிகைகளையும் தர்ஜனிகளையும் அங்குசம்போல் சற்று வளைத்துப் பிடிக்கவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வயோனி

## ஸர்வயோனி (ஐம்)


இரண்டு கைகளையும் மேல்நோக்கியவாறு விரித்து, மத்யமைகளை மடக்கி, அநாமிகைகளை அவற்றின் பின்புறமாக்கவேண்டும். இடது அநாமிகையை வலது தர்ஜனியாலும் வலது அநாமிகையை இடது தர்ஜனியாலும் பிடித்துக்கொண்டு, மத்யமைகளை நீட்டவேண்டும். கனிஷ்டிகைகளை உட்புறமாக்கி இடது கனிஷ்டிகைமேல் வலது கனிஷ்டிகையை வைத்து அங்குஷ்டங்களுக்கிடையில் வருமாறு செய்யவும்.



த்ரிகண்டமுத்ரா

## ஸர்வ த்ரிகண்டா (ஹ்ஸ்ரைம் ஹ்ஸ்க்ல்ரீம் ஹ்ஸ்ரஸௌ:)


யோனிமுத்திரை போட்டு கனிஷ்டிகைகளை வெளியில் எடுத்துச் சேர்த்து நீட்டியவாறு இரு அங்குஷ்டங்களையும் நீட்டி ஒன்றாக்கவும்.



சர்வகேசரீ

## ஸர்வகேசரி (ஹ்ஸ்க்ப்ரேம்)

இடது கையை உயர்த்தி வலதுகைமேல் வைத்து அதை வலது கையால் சுற்றி இரு உள்ளங்கைகளும் மேல்நோக்கியிருக்க மத்யமைகளை மடக்கி அநாமிகைகளை மடித்த மத்யமைகளின் பின்புறமாக்கி வலது தர்ஜனியால் இடது அநாமிகையையும் இடது தர்ஜனியால் வலது அநாமிகையையும் மடக்கிப் பிடித்து மத்யமைகளை நீட்டி கனிஷ்டிகைகளை உட்புறமாக்கவேண்டும். கைகளை அபிமுகமாக ஒன்றாக்கி அங்குஷடங்களை மத்யமைகளின்மீது வைத்து கனிஷ்டிகைகளை அங்குஷ்டங்களின் இடையில் வரும்படி செய்யவேண்டும்.




சர்வபீஜமுத்ரா

## ஸர்வ பீஜா (ஹ்ஸௌ:)


இரண்டு உள்ளங்கைகளையும் மேல்நோக்கியவாறு வைத்து வலது கனிஷ்டிகையை இடது அநாமிகையாலும் இடது கனிஷ்டிகையை வலது அநாமிகையாலும் மடக்கிப் பிடித்துமத்யமைகளை நீட்டி ஒன்றையொன்று தொடும்படி செய்து, மற்ற இரு விரல்களும் ஒன்றையொன்று படும்படியும் உள்ளங்கைகளும் மூடிய விரல்களும் ஒட்டியிருக்குமாறு செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ம்ருகீ₃




தே₄நு

**ம்ருகீ₃** - இருகைகளின் அங்குஷ்டங்கள், மத்யமைகள் அநாமிகைகளை மடக்கிச் சேர்த்து, தர்ஜனிகளையும் கனிஷ்டிகைகளையும் நீட்டித் தொடுமாறு சேர்த்துச் சிரஸின் மேல் வைத்துக் கொள்ள வேண்டும்.


**தே₄நு** - இரு கைகளையும் ஒன்றாக்கி, கீழ் நோக்கி வைத்துக் கொண்டு, வலது கனிஷ்டிகையின் நுனி இடது அநாமி கையின் நுனியின் மீதும், வலது அநாமிகையின் நுனி இடது கனிஷ்டிகையின் நுனியின் மீதும், வலது தர்ஜனியின் நுனி இடது மத்யமையின் நுனியின் மீதும், இடது தர்ஜனியின் நுனி வலது மத்யமையின் மீதும் படும்படி வைத்து, அங்கு ஷ்டங்களைச் சேர்த்து கீழ்நோக்கிக் காண் பிக்கவும்.




ப்ராண




அபான




வ்யான



உதான



Samāna



ப்ரஹ்மணே

### நைவேத்₃ய க்₃ராஸ முத்₃ரா :

***க்₃ராஸ*** - மேல் நோக்கி விரித்த இடது கை விரல்களை வளைத்துக் கிண்ணம் போல் பிடிக்கவும்.

***ப்ராண*** - வலது அங்குஷ்டம், அநாமிகை, கனிஷ்டிகா இவற்றைச் சேர்த்து இடது கை க்ராஸ முத்திரையை நோக்கி அசைக்கவும்.

***அபான*** - வலது அங்குஷ்டம், தர்ஜனி, மத்யமைகளை ஒன்றாக்கி இடது கை க்ராஸ முத்திரையை நோக்கி அசைக் கவும்.

***வ்யான*** - வலது அங்குஷ்டம், அநாமிகை, மத்யமைகளை ஒன்றாக்கி இடது கை க்ராஸ முத்திரையை நோக்கி அசைக் கவும்.


***உத₃ான*** - வலது கனிஷ்டிகையைத் தவிர மற்ற விரல்களை ஒன்றாக்கி இடது கை க்ராஸ முத்திரையை நோக்கி அசைக் கவும்.


***ஸமான*** - வலது கையின் எல்ல விரல்களையும் ஒன்று சேர்த்து இடது கை க்ராஸ முத்திரையை நோக்கி அசைக்கவும்.

***ப்₃ரஹ்மணே ஸ்வாஹா*** - நைவேத்யங்களை அங்கீகரிக்க வேண்டும் என்று வேண்டும் பாவனையில், வலது கையை உயர்த்தி தேவியை நோக்கிக் காண்பிக்கவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீநகர நாயகி

### ராகமாலிகை

நாட்டை

**பல்லவி**

ஸ்ரீநகரம் தேடித் தரிசிக்க நான் வருவேன்
தேவியுன் திருவுருவம் சேவித்துமே மகிழ்வேன் ஸ்ரீநகரம் தேடி.........

**அனுபல்லவி**

அங்குச பாசமும் அழகு மலர்க் கணையும்
தங்குகரம் மீதில் தனுக்கரும்பும் காண ஸ்ரீநகரம் தேடி.........

**சரணங்கள்**

அடாணா
கோட்டைகள் இருபத்து ஐந்தினையும் தாண்டி
பாட்டுக்கள் பாடியுன்னைப் பணிந்திட நான் வருவேன்
ஹரிசந்தனம், கதம்பம், பாரிஜாதம், கல்பம்,
அரியமந் தாரம் என்னும் தருக்களின் வனம் கடந்தே ஸ்ரீநகரம் தேடி.........

கானடா
எட்டுலோகக் கோட்டை அனைத்தையும் கடந்திடுவேன்
கிட்டவந்தே உனது திருவடியில் வீழ்வேன்
ரத்தினக் கோட்டைகளை ரசித்துக் கடந்திடுவேன்
பக்தியுடன் உன்னைப் பாடிக்கொண்டே வருவேன் ஸ்ரீநகரம் தேடி.........

காபி
வந்த களை நீங்கக் கதம்பவனத் தமர்ந்தே
சிந்தா மணியகத்தைச் சிந்தைகுளிரக் காண்பேன்
எந்தைசதா சிவனும் நீயும் அமர்ந்திருக்கும்
மந்திர சக்கரத்தை மனம் குளிரக் காண்பேன் ஸ்ரீநகரம் தேடி.........

பாகேஸ்ரீ
வட்டக் கலைகளுடன் வாசலும் பூபுரங்கள்
எட்டிரு தளக் கமலம் அட்டதள பதுமம்
இட்டமுடன் எழுந்த நாற்பத்து முககோணங்கள்
எட்டிக் கடந்தெனது இன்னமுதைக் காண்பேன் ஸ்ரீநகரம் தேடி.........

சுருட்டி
பஞ்சப்ரம் மாசனத்தில் பரமசிவன் மடியில்
பஞ்ச மலர்க் கணையும் பாசம் அங்குசத்தோடும்
கொஞ்சும் அருள்விழியால் குழந்தை எனை அழைப்பாய்
தஞ்சம் என உனது தாள்களில் நான் பணிவேன் ஸ்ரீநகரம் தேடி.........

- வித்யாபூஷணம் 'கோப்பாய் சிவம்' (ப. சிவானந்த சர்மா **B.A. (Hons)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி பீடங்கள்

சிவபெருமானை மதிக்காமல் தக்கன் செய்த யாகத்திற்குச் சென்ற பராசக்தியாகிய தாக்ஷாயணி, அங்கு தானும் தனது நாயகனும் அவமதிக்கப் பட்டதையறிந்து மனம் பொறுக்காமல் அந்த யாககுண்டத்திலேயே விழுந்து உயிர் துறந்தாள். இதனைக் கேள்வியுற்ற சிவபெருமான் அடங்காச் சினத்துடன் அங்கு வந்து கோபக் கனலாக மாறித் தனது தேவியின் இறந்த உடலை எடுத்துச் சிரசின் மேலே வைத்துச் சுழன்று சுழன்று ஆவேசமாக ஆடினான். உலகமே அஞ்சியது. அழிவு நெருங்கி விட்டதோ என்று பிரம்மா முதல் அனைவரும் நடு நடுங்கினர். கடல் பொங்கியது. கோள்கள் நிலைதடுமாறிச் சுழன்றன. பூமி நடுங்கியது. இதனைப் பார்த்த காத்தற் கடவுளாகிய திருமால், தனது சக்கராயுதத்தை ஏவிப் பராசக்தியின் உடலைத் துண்டுகளாக்கித் தெறித்து வீழச் செய்தார். பாரத நாட்டின் பல்வேறு பாகங்களில் உடற்பாகங்கள் விழுந்தன. அவையே சக்தி பீடங்களாகத் திகழ்கின்றன.

சக்தி பீடங்கள் ஐம்பத்தொன்று என்றும், அறுபத்து நான்கு என்றும், நூற்றெட்டு என்றும் கூறுவர். 'பீடநிர்மயா' என்ற நூல் ஐம்பத்தொரு சக்தி பீடங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது.

தட்சன் மகளாய் அன்னை அவதரித்து, சதிதேவி எனப் பெயர் பெற்று, தந்தை சிவனை தூஷித்ததால் அக்னியில் பாய அக்கினிக்குள் சித்கலாரூபமாக இருந்த சதி தேவியின் திருமேனியைத் தோளில் தூக்கிக் கொண்டு உலகமெலாம் திரிந்த சிவன், விஷ்ணு வேண்ட சித்கலாரூபமான அன்னையின் கலைகளை அகிலமெங்கும் தனித் தனிப் பீடமாக இருக்கச் செய்தார். அங்ஙனம் அமைந்த நூற்றெட்டுப் பீடங்களிலும் தானும் அமர்ந்து அருள் செய்தார். இந் நூற்றெட்டுச் சக்தி பீடங்களின் பெயர்களையும், தேவியின் பெயர்களையும் கேட்கவோ நினைக்கவோ செய்பவர் பாவங்களில் இருந்து விடுபட்டுத் தேவியின் திருவடி அடைவர் எனத் தேவிபாகவதத்தில் வியாசர் கூறியுள்ளார்.

சிவபெருமான் தேவியின் சிற்கலாரூபத்தைத் தாங்கி நிற்கையில் உலக ஜீவனத்தின் பொருட்டு அதனை வேண்டி திருமாலே சக்தி பீடங்களாக ஸ்தாபித்தார் என்கிறது அபிதான சிந்தாமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பத்தொரு சக்தி பீடங்கள்

1. காஞ்சிபுரம் : இது ஸ்ரீ சக்கரபீடம். தேவியின் எலும்புகள் இங்கு வீழ்ந்ததாகக் கூறுவர்.
2. மதுரை : இது மந்த்ரிணி பீடம்.
3. திருஆனைக்கா : இது வராகி பீடம்.
4. திருக்குற்றாலம் : இது பராசக்தி பீடம்.
5. திருவாரூர் : இது கமலை பீடம் – காமகலா பீடம் என்றும் கூறுவர்.
6. கன்னியாகுமரி : இது தேவியின் பிருஷ்டபாகம் விழுந்த இடம்.
7. அம்பத்தூர் : சென்னைக் கருகிலுள்ள வைணவி ஆலயம், சக்திபீட வரிசையில் ஐம் பத்தோரூர் என்பதே அம்பத்தூர் என மருவியதாகக் கூறுவர்.
8. கோகர்ணம் : வலது காது விழுந்த இடம். பரசுராம க்ஷேத்திரம். தேவியின் திருநாமம் பத்ரகர்ணிகை.
9. ஸ்ரீ சைலம் : இடது காது விழுந்த இடம். சிறந்த சிவத்தலம். அம்பிகையின் திருநாமம் பிரமராம்பாள். மாதவி பீடம்.
10. பூரி : நாபி விழுந்த இடம். உத்கலம் எனப் படும் ஒரிசா மாநிலத்தில் உள்ளது. பைரவபீடம். தேவியின் திருநாமம் விமலை.
11. சிருங்கேரி : மைசூர் மாநிலத்தில் உள்ளது. தேவி சாரதையாகத் திகழ்கின்றாள்.
12. கோலாப்பூர் : கண்கள் விழுந்த இடம். அன்னை மகா இலக்குமியாக விளங்குகின்றாள்.
13. அரசூர் : தனம் விழுந்த இடம். ஆபூமலைக்கு அருகில் உள்ளது. இங்கு சிலாவடிவில் இல்லாமல் அம்பிகை யந்திர வடிவில் அம்பிகா என்ற திருநாமத்துடன் விளங்குகின்றாள்.
14. ஜலந்தரா : தனம் விழுந்த இடம். தேவியின் திருநாமம் திரிபுரமாலினி.
15. துவாராவாட் : குஜராத் மாநிலத்தில் உள்ளது.
16. பிரபாசா : திருவயிறு விழுந்த இடம். இதனை சோமநாதத் தலம் என்றும் கூறுவர்.
17. பராகத் : இக்குன்றின் அமைப்பே காளிகா யந்திர உருவில் உள்ளது.
18. சிம்லா : தேவியின் திருநாமம் சியாமளா. இதுவே திரிந்து சிம்லா வாயிற்று.
19. மானசரோவர் : இது ஒரு தடாகம். தலை விழுந்த இடம். இமயத்தில் உள்ளது. அம்பிகை தாட்சாயணி. குமுதா பீடம்.
20. காஷ்மீரம் : கழுத்து விழுந்த இடம். அம்பிகையின் திருநாமம் மகாமாயை.
21. நேபாளம் : முழங்கால் விழுந்த இடம். இங்குள்ள அஷ்ட மாத்ருகைகளின் ஆலயம் புகழ்மிக்கது.
22. ஜுவாலாமுகி : நாக்கு விழுந்த இடம்.
23. சுகந்தா : மூக்கு விழுந்த இடம். இமய மலைச் சரிவில் உள்ள தலம்.
24. வாரணாசி(காசி): காதுக் குண்டலம் விழுந்த இடம். இது மணிகர்ணிகை பீடம். தேவியின் திருநாமம் விசாலாக்ஷி.
25. நைமிசாரண்யம் : அம்பிகை இலிங்க தாரிணி யாகத் திகழ்கின்றாள்.
26. குருக்ஷேத்திரம் : முழங்கை விழுந்த இடம்.
27. பிரயாகை : கைவிரல்கள் விழுந்த இடம். லலிதா பீடம்.
28. உஜ்ஜயினி : இங்கு தேவி மங்கள சண்டிகையாக விளங்குகின்றாள். மகாகவி காளி தாசனுக்கு அருள் நல்கியவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. பிருந்தாவனம் : கூந்தல் விழுந்த இடம். இராதா பீடம்.

30. அத்தினாபுரம் : இங்கு அம்பிகையின் திருநாமம் ஜெயந்தி. ஜயந்தி பீடம்.

31. கன்னியாகுப்ஜம் : கௌரி பீடம். அம்பிகையின் திருநாமம் கௌரி.

32. புஷ்கரம் : அன்னையின் திருநாமம் புருஹூதை. புருஹூதா பீடம்.

33. கேதாரம் : சன்மார்க்க தாயினி பீடம்.

34. பத்ரை : பத்ரேஸ்வரி பீடம்.

35. உருத்திர கோடி: உருத்ராணி பீடம்.

36. சாளக்ராமம் : மஹாதேவி பீடம்.

37. மலயாசலம் : தேவியின் திருநாமம் கல்யாணி. ரம்பா பீடம்.

38. தேவிகா தடம் : நந்தினி பீடம்.

39. சஹஸ்திராக்ஷம்: உத்பலாக்ஷி பீடம்.

40. வராக சைலம் : ஜயா பீடம்

41. இரண்யாக்ஷம் : மகோத்பலா பீடம்.

42. திரிகூடபர்வதம்: உருத்திர சுந்தரீ பீடம்.

43. சஹ்யபர்வதம் : ஏகவீரா பீடம்.

44. வைத்தியநாதம்: ஆரோக்யா பீடம்.

45. மகாகாளம் : மஹேஸ்வரி பீடம்.

46. விந்தியபர்வதம்: நிதம்பை பீடம்.

47. வேதமுகம் : காயத்ரீபீடம்.

48. ஹேமகூடம் : மன்மதா பீடம்.

49. அமர கண்டம் : சண்டிகா பீடம்.

50. கல்கத்தா : கால் விரல்கள் விழுந்த இடம். அன்னை காளிகா தேவியாக அருள் பாலிக்கின்றாள்.

51. காமரூபம் : உபஸ்தம் விழுந்த இடம், இத்தலம் அஸ்ஸாமில் உள்ளது. காமாக்யா என்பது அம்பிகையின் திருநாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபத்துநான்கு சக்தி பீடங்கள்

1. மாத்ரு புரம் – ரேணுகா பீடம்
2. கொல்லாபுரம் – லக்ஷமி பீடம்
3. துளஜாபுரம் – சப்தச்ருங்க பீடம்
4. இங்குளை – ஜவாலாமுகீ பீடம்
5. ஸ்ரீ காசி – அன்னபூர்ணா பீடம்
6. ரக்த தந்த்ரிகை – விந்த்யாசல பீடம்
7. ரக்த தந்த்ரிகை – துர்கா பீடம்
8. சாகம்பரீ – ப்ராமீரி பீடம்
9. மதுரை – மீனாட்க்ஷி பீடம்
10. நேபாளம் – ரக்ஷய காளீ பீடம்
11. ஸ்ரீ நகரம் – சாம்பு நகேச்வரி பீடம்
12. நிலபர்வதம் – நீலாம்பரி பீடம்
13. ஸ்ரீ சந்திரகலை – கௌசிகீ பீடம்
14. ஸ்ரீ காஞ்சி – காமாக்ஷி பீடம்
15. வைத்ய நாதம் – ஜ்வாலா பீடம்
16. சைனா – நீலசரஸ்வதி பீடம்
17. வேதாரண்யம் – ஏகாம்பர பீடம்
18. வேதாரண்யம் – சுந்தரீ பீடம்
19. மஹாசலம் – யோகேஸ்வர பீடம்
20. ஹிதய பர்வதம் – மாதேவீ பீடம்
21. மணித்வீபம் – புவனேஸ்வரி பீடம்
22. மணித்வீபம் – திரிபுரபைரவீ பீடம்
23. அமரேசம் – சண்டிகா பீடம்
24. ப்ரபாஸம் – புக்ஷகரேக்ஷணி பீடம்
25. புக்ஷ்கரம் – காயத்ரீ பீடம்
26. நைமிபீசம் – தேவி பீடம்
27. புக்ஷ்காராக்ஷம் – புருகாதா பீடம்
28. ஆக்ஷாடம் – ரதி பீடம்
29. பாரபூதி – பூதி பீடம்
30. கண்ட முண்டம் – தண்டினீ பீடம்
31. நாமுலம் – நாகுலேஸ்வரி பீடம்
32. ஸ்ரீகிரி – சாராதா பீடம்
33. பஞ்ச நகம் – திரிசூல பீடம்
34. ஹரிச் சந்திரம் – சந்திரா பீடம்
35. ஆமரதகேஸ்வரம் – ஸிக்ஷ்மபீடம்
36. மஹாகாளாஸ்தி – சாங்கரீ பீடம்
37. மத்யாபீதம் – சர்வாணிபீடம்
38. கயை – மங்களா பீடம்
39. கேதாரம் – மார்க்கதாயினீ பீடம்
40. பைரவம் – பைரவீ பீடம்
41. குருக்ஷேத்ரம் – தர்ணுப்பிரியை பீடம்
42. விபினாகுலம் – ஸ்வாயம் பலி பீடம்
43. கணகளம் – உக்ரபீடம்
44. விமகேஸ்வரம் – விஸ்வேஸ பீடம்
45. ஹடாஹாசம் – மதாந்தக பீடம்
46. பீமம் – பீமபீடம்
47. வஸ்த்ரம்பதம் – பவானிபீடம்
48. அவமுக்தம் – விசாலாக்ஷிபீடம்
49. அர்த்த கோடிகம் – ருத்ராணிபீடம்
50. அவமுக்தம் – வராஹிபீடம்
51. மஹாலயம் – மஹாபாகாபீடம்
52. கோகர்ணம் – பத்ரகாளீபீடம்
53. பத்ரகர்ணிகம் – பத்ராபீடம்
54. ஸ்தாணும் – ஸ்தாண்வீசாபீடம்
55. ஸ்வர்ணாக்ஷம் – உத்பலாக்ஷிபீடம்
56. கமலாலயம் – கமலாபீடம்
57. சகமண்டலம் – ப்ரசண்டபீடம்
58. மகேடம் – மகுடேஸ்வரிபீடம்
59. குரண்டலம் – த்ரிசந்திரகாபீடம்
60. மண்டலேசம் – சரண்டகாபீடம்
61. ஸ்தூல கேஸ்வரம் – ஸ்தூல பீடம்
62. சங்க கர்ணம் – தீவனி பீடம்
63. கரவஞ்சம் – காளி பீடம்
64. ஞானிகள் இதயம் – பரமேஸ்வரி பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றெட்டு சக்தி பீடங்கள்

1. காசி க்ஷேத்திரத்தில் *விசாலாக்ஷி*
2. நைமிசாரண்யத்தில் *லிங்க தாரணி*
3. பிரயாகையில் *லலிதை*
4. கந்தமாதனத்தில் *காமுகீ*
5. மானசசரஸில் *குமுதா*
6. அதன் தென்திசையில் *விசுவகாமா பகவதி*
7. அதன் வடதிசையில் *விஸ்வகாமப்பூரணி*
8. கோமந்தகத்தில் *கோமதி*
9. மந்தரத்தில் *காமசாரிணி*
10. சயித்திராதத்தில் *மதோத்கடை*
11. அஸ்தினாபுரத்தில் *ஜயந்தி*
12. கன்யாகுப்ஜத்தில் *கௌரி*
13. மலையாசலத்தில் *ரம்பை*
14. ஏகாம்பர பீடத்தில் *கீர்த்திமதி*
15. விஸ்வத்தில் *விஸ்வேஸ்வரி*
16. புஷ்பகரத்தில் *புருஹூதை*
17. கேதார பீடத்தில் *சன்மார்க்கதாயினி*
18. இமயமலையின் பின்புறத்தில் *மந்தா தேவி*
19. கோகர்ணத்தில் *பத்திரகர்ணிகா தேவி*
20. பவானியில் *ஸ்தானேஸ்வரி*
21. வில்வ பத்திரிகையில் *பில்வகை*
22. ஸ்ரீசைலத்தில் *மாதவி*
23. பத்திரையில் *பத்திரேஸ்வரீ*
24. வராக மலையில் *ஜயை*
25. கமலாலயத்தில் *கமலை*
26. ருத்ரகோடியில் *ருத்திராணி*
27. காலஞ்சரத்தில் *காளி*
28. சாளக்கிராமத்தில் *மகாதேவி*
29. சிவலிங்கத்தில் *ஜலப்பிரபை*
30. மகாலிங்கத்தில் *கபிலை*
31. மாகோட்டத்தில் *மகுடேஸ்வரி*
32. மாயாபுரியில் *குமாரி*
33. சந்தானத்தில் *லலிதாம்பிகை*
34. கயையில் *மங்களாம்பிகை*
35. புருஷோத்தமத்தில் *விமலை*
36. சகஸ்ராக்ஷத்தில் *உத்பலாட்சி*
37. இரண்யாக்ஷத்தில் *மகோத்பலை*
38. விபசாவில் *அமோகாக்ஷி*
39. புண்டரவர்த்தனத்தில் *பாடலீ*
40. சுபாரு சுவத்தில் *நாராயணி*
41. திரிகூட பர்வதத்தில் *ருத்திர சுந்தரி*
42. விபுலத்தில் *விபுலாதேவி*
43. மலையாசலத்தில் *கல்யாணி*
44. சஹ்ய பர்வதத்தில் *ஏகவீனர்*
45. அரிச்சந்திரத்தில் *சந்திரிகாதேவி*
46. ராமதீர்த்தத்தில் *ரமணா*
47. யமுனா தீர்த்தத்தில் *மிருகாவதி*
48. கோடிக்கரையில் *கோடவீ*
49. மாதவவனத்தில் *சுகந்தாதேவி*
50. கோதாவரியில் *திரிசந்தி*
51. கங்காதுவாரத்தில் *ரதப்பிரியை*
52. சிவகுண்டத்தில் *சுபானந்தை*
53. தேவிகாதடத்தில் *நந்தினி*
54. துவாரகையில் *ருக்மிணி*
55. பிருந்தாவனத்தில் *ராதை*
56. மதுரையில் *தேவகி*
57. பாதாளத்தில் *பரமேஸ்வரி*
58. சித்திரகூடத்தில் *சீதாதேவி*
59. விந்தியத்தில் *விந்தியாவாசினி*
60. கரவீரத்தில் *மகாலக்ஷ்மி*
61. வைத்தியநாதத்தில் *ஆரோக்யை*
62. விநாயகத்தலத்தில் *உமாதேவி*
63. மகாகளத்தில் *மகேஸ்வரி*
64. உஷ்ண தீர்த்தத்தில் *அபயாம்பிகை*
65. விந்தியமலையில் *நிதம்பை*
66. மாண்டவியத்தில் *மாண்டவி*
67. மகேஸ்வரபுரத்தில் *ஸ்வாஹாதேவி*
68. சகலண்டலத்தில் *பிரசண்டை*
69. அமரகண்டத்தில் *சண்டிகாதேவி*
70. சோமேஸ்வரத்தில் *வராரோகை*
71. பிரபாசத்தில் *புஷ்கராவதி*
72. மகாலயத்தில் *மகாபாகை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. சரசுவதிநதித் தலத்தில் *தேவமாதை*

74. பயோஷணியத்தில் *பிங்களேஸ்வரி*

75. கிருத செளக்யத்தில் *சிம்மாகை*

76. கார்த்திகையில் *ஆதிசங்கரி*

77. உற்பலாவர்தத்தில் *லோலாதேவி*

78. சோணசங்கமத்தில் *சுபத்திரா*

79. சித்தவதனத்தில் *லக்ஷ்மி*

80. பரதாசிரமத்தில் *அனங்கை*

81. ஜாலந்தரத்தில் *விஸ்வமுகி*

82. கிஷ்கிந்தமலையில் *தாராதேவி*

83. தேவதாரு வனத்தில் *யுஷ்டிர்மேதை*

84. காஷ்மீரத்தில் *பீமாதேவி*

85. ஹிமாத்திரியில் *துஷ்டிவிஸ்வேஸ்வரி*

86. கபால மோசனத்தில் *சுத்தி*

87. காயாரோகணத்தில் *மாதாதேவி*

88. சங்கோத்தரத்தில் *தாரா*

89. பிண்டாரக ஆலயத்தில் *திருதி*

90. சந்திரபாகா நதியில் *கலாதேவி*

91. அச்சோதயத்தில் *சிவதாரணி*

92. வேணீயாற்றில் *அமுதாதேவி*

93. பதரியில் *உரசி*

94. உத்தரகிரியில் *ஔஷதை*

95. குசத்வீபத்தில் *குசோதகாதேவி*

96. ஏமகூடத்தில் *மன்மதை*

97. குமுதத்தில் *சத்தியத்வாதினி*

98. அஸ்வத்தில் *வந்தினி*

99. குபோலயத்தில் *நிதிதேவி*

100. தேவமுகத்தில் *காயத்திரி தேவி*

101. பிருமாமுகத்தில் *சரஸ்வதி*

102. சிவ சந்நிதியில் *பார்வதி தேவி*

103. தேவலோகத்தில் *இந்திராணி*


104. சூரிய பிம்பத்தில் *பிரபாதேவி*

105. சப்த மாதர்களில் *வைஷ்ணவி*

106. பதிவிரதைகளில் *அருந்ததி*

107. அழகான மங்கையரில் *திலோத்தமை*

108. சகலதேகிகளின் சித்தத்தில் *சக்தி பிரம்மகலை.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் அழகுநாமங்களும் அருள்சிந்தும் அர்த்தங்களும்

தேவீ - ஒளிமிக்கவள்
அம்பிகை - தாயாக இருப்பவள்
மீனாக்ஷி - மீன்போன்ற கண்களை உடையவள்.
அக்ஷி - கண். (தோற்றத்தில் மட்டுமல்லாமல் இயல்பிலும்கூட. அதாவது மீன் முட்டைகளை இட்டபின் மிகத் தொலைவிலிருந்து கண்களால் பார்த்தது அவற்றைக் காத்துப் பொரிக்கச்செய்கிறது. அதுபோல அம்பிகையும் பார்வையால் எம்மைப் பரிபாலிப்பவள்)
காமாக்ஷி - அடியார்களது விருப்பத்தை நிறைவேற்றும் கண்களை உடையவள்.
விசாலாக்ஷி - விசாலமான - அகன்ற கண்களை உடையவள் (பரந்துபட்ட இப் பிரபஞ்சத்தை அருள்நோக்கம் செய்பவள்)
சிவகாமி - சிவனை விரும்புபவள், சிவனது விருப்பத்துக்குரியவள்
பார்வதி - பர்வதராஜன் (மலையரசன்) மகள்
தாக்ஷாயணி - தக்கனின் மகள்
துர்க்கா - துக்கத்தைப் போக்குபவள், நமக்குக் காப்பாக உள்ளவள் (துர்க்கம் என்றால் கோட்டை என்பது பொருள்)
காயத்ரீ - பாடுபவர்களை - தன்னைத் துதிப்பவர்களைக் காப்பவள்.
பராசக்தி - மேலான சக்தி
பரமேஸ்வரி - மேலான தலைவி.
(பரம - மேலான, ஈஸ்வரி - தலைவி.)
மஹேஸ்வரி - பெருந்தலைவி. (மஹா ஈஸ்வரி. மஹா - பெரிய.)
புவனேஸ்வரி - உலகின் தலைவி. புவனம் - உலகம்.
லோகேஸ்வரி - உலகின் தலைவி. லோகம் - உலகம்.
அகிலாண்டேஸ்வரி - அகில அண்ட ஈஸ்வரி. எல்லாப் பிரபஞ்சங்களுக்கும் தலைவி.
அன்னபூர்ணா - அன்னம் அளிப்பவள்.
காளி - கரியவள். காலரூபமானவள். காலம் கடந்து நிற்பவள்.
மாதங்கி - மதங்க முனிவரின் புதல்வியாக அவதரித்தவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவி - ப்ருகு முனிவரின் புதல்வியாக அவதரித்தவள்.
சந்தோஷி - சந்தோஷம் தருபவள்.
வாகீஸ்வரி - கல்விக்கரசி. வாக் - வித்தை, கல்வி.
கிரிஜா - மலைமகள்
வனஜா - அலைமகள்
காமேஸ்வரி - விருப்பங்களை நிறைவேற்றுபவள்
யோகேஸ்வரி - யோகங்களுக்குத் தலைவி
ஜெகதீஸ்வரி - உலகத்திற்குத் தலைவி (ஜெகம் - உலகம்)
சங்கரி - சுகத்தைச் செய்பவள்
நிர்மலா - குற்றமற்றவள்
கல்யாணீ - மங்கலமானவள்
மஞ்ஜுபாஷிணீ - இனிமையான பேச்சை உடையவள்
கமலா - தாமலையில் இருப்பவள்
சுலோசனா - நல்ல (அழகிய) கண்களை உடையவள் (லோசனம் - கண்)
சசீலா - நல்லொழுக்கம் உடையவள் (சீலம் - ஒழுக்கம்)
மோகனா - மனத்தைக் கவர்பவள்
காஞ்சனா - பொன்போல் ஒளிர்பவள் (காஞ்சனம் - பொன்)
சுந்தரி - அழகானவள்
சாரதா, பாரதி - சரஸ்வதி
நித்யா - என்றும் உள்ளவள்
ஸ்ரீவித்யா - கல்வி, கலைகளின் வடிவானவள்
பூர்ணா - நிறைவானவள்
ஜனனீ - தாயானவள்
வந்த்யா - வணக்கத்திற்குரியவள்
வரதா - வரம் கொடுப்பவள் (வரம் - சிறந்தது)
நிருபமா - ஒப்புவமை இல்லாதவள்
ஜயா, விஜயா - வெற்றியை உடையவள்.
சுபகரி - நலம்செய்பவள்
சிவா, மங்களா - மங்களமானவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் அருள் வடிவங்கள்

இனிவரும் பக்கங்களில் அம்பிகையின் பல அருட் திரு உருவங்கள் இடம்பெறுகின்றன. "ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து........" என அபிராமிபட்டர் கூறுவதற்கிணங்க அம்பிகையின் எண்ணற்ற கருணை வடிவங்களில் மிக முக்கியமான சில இங்கு அழகிய வண்ணப்படங்களாகத் தரப்படுகின்றன. அவைபற்றிய சில குறிப்புக்கள், தியான சுலோகங்கள் என்பனவும் இணைக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பார்க்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயம், இப்படங்கள் வரிசைப்படுத்தியிருக்கும் முறையும் அவற்றிற்கு வழங்கப்பட்டிருக்கும் தலைப்புக்களும் ஆகும்.

தத்துவ அடிப்படையில் சித்தாந்த உண்மைகள் இங்கு புலப்படுத்தப்படுகின்றன. இதற்கு முந்திய பக்கங்களில் கோட்டுச் சித்திரங்களாக காணப்படுகின்ற படங்களோடு இவற்றையும் வரிசைப்படுத்தி அவதானிக்கலாம். ஒன்றுமே இல்லை என, இன்மையுள் உண்மையாக, பூச்சியத்துக்குள் ஒரு இராச்சியத்தை ஆண்டுகொண்டு அனைத்தினுள்ளும் மறைந்துள்ள அருவநிலையிலுள்ள நிலைச் சக்தியான அந்தப் பரம்பொருட் சக்தியானது சிவம், சக்தி, நாதம், பிந்து எனும் நான்கு அருவ நிலைகளில் இறங்கிவந்து அருவுருவ நிலையில் தன்னை வெளிப்படுத்திச் சதாசிவமும் மனோன்மணியுமாக - சிவலிங்க வடிவமாக உருக்காட்டும் நிலையை முதலில் காணலாம். மேல்நிலையாகிய சிவம், சக்தி, நாதம், பிந்து எனும் நான்கும் நடுநிலையாகிய அருவுருவமும் அதற்கு அடுத்த நிலையாகிய உருவ வெளிப்பாட்டு நிலைகள் நான்கும் - மஹேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரம்மா - சேர்ந்து நவந்தருபேதம் எனச் சிவலிங்கத்தில் காட்டப்படுகின்றன.

உருவ நிலைகளில் பிரம்மாவுடன் சேரும் முச்சக்திகளும், அவற்றிலொன்றான சரஸ்வதியின் பல்வேறு தோற்றங்களும் முதலில் வருகின்றன. விஷ்ணுவுடன் சேரும் இலக்குமியும் அஷ்டலக்ஷ்மி வடிவங்களும் காட்டப்படுகின்றன. இவற்றின் வளர்ச்சிப்படியாகப் பரசிவத்தின் பல்வேறு வடிவங்களில் இடப்பாகம் கலந்த சக்தி வடிவங்களான மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி முதலிய தோற்றங்களும் தனியாக இடம்பெறுகின்றன. இவற்றுக்குச் சமாந்தரமாக சப்தமாதர், நவசக்தி, நவதுர்க்கா எனும் தோற்றங்களும் அட்சர தேவிகளும் கேவல சக்தி என அழைக்கப்படும் (கேவல - தனித்துவமான) உயர்தனிச் சக்தி வடிவங்களான காளி, மஹாமாரி, திரிபுரசுந்தரி மற்றும் தசமஹாவித்தைக்குரிய சக்திகளும் இங்கு காட்டப்படுகின்றன.


சக்திவழிபாட்டின் சிகரமாக விளங்கும் ஸ்ரீசக்ரத்தின் பல இரகசியங்கள் இங்கு வெளிப்படுத்தப்பட்டுத் தனித்தனி ஆவரணங்களாக விளக்கப்படுகின்றன. இந்த வரன்முறையையும் வரிசைக் கிரமத்தையும் ஆராய்ந்து உணர்ந்து அனுபவித்து மகிழும்படி கேட்டுக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவந்தரு பேதம்

இயங்கும் இப் பிரபஞ்ச சக்தியின் மூலகாரணமாய், நிலைத்த நிர்மலப் பொருளாய், நிலைச் சக்தியாய், உருவமாய், அருவமாய், அருவுருவாய், மஹேஸ்வர வடிவங்களாய் விளங்கி அருள்தரும் அனந்த ரூபங்களுக்கு அடிநாதமாய் சிவசக்தி ஸ்வரூபமாய் விளங்கும் சதாசிவ வடிவம்.




## அருவுருவத் திருமேனி

மலர்ந்த வயன்மா லுருத்திரன் மகேசன்
பலந்தரு மைம்முகன் பரவிந்து நாத
நலந்தருஞ் சக்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே

\- திருமந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிவசக்தி ஐக்கியம்

## அர்த்தநாரீஸ்வரர்

இன்பக் கலவியி லிட்டெழு கின்றதோர்
அன்பிற் புகவல்ல னாமெங்க ளப்பனும்
துன்பக் குழம்பிற் றுயருறும் பாசத்துள்
என்பிற் பராசக்தி என்னம்மை தானே - திருமந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிடர்க்காய் வாழாத மானிடத் தெய்வம்




**ஸ்ரீ ஆண்டாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருமாரியம்மன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்து மாரியம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்துணர்வை உலகிற்குணர்த்திட . . .




# ஊமையையும் பேசவைக்கும் மூகாம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்போன் நாவினில் படர்ந்திடு செல்வி
பாரினில் நம்மைப் பேச வைப்பவள்



# கலையரசி சரஸ்வதி தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லக்ஷ்மி நாராயணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் போற்றும் வேத நாயகி



# மந்திரச் செல்வி காயத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பூர்ண கும்ப லெட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாற்கடல் தந்த பாக்கியம்



மஹாலக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகியல் வாழ்வை நடத்திட உதவும்
## அருள்மிகு நங்கையர் அஷ்ட லக்ஷ்மியர்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகியல் வாழ்வை நடத்திட உதவும்
# அருள்மிகு நங்கையர் அஷ்ட லக்ஷ்மியர்







11825







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கத்திலிருந்து நம்மைக் காத்திடும் கோட்டை



# அருள்மிகு துர்க்காம்பிகை

(பட்டீஸ்வரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு ஸ்வரங்களை இயக்கிடும் நாயகி



மகிழ்கலைச் செல்வி மாதங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகாலனின் காரியம் நடத்திடக்
காலத்தை வென்றவள், காளி ஆனவள்



காளிகா பரமேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகள் மூவரின் சங்கமப் புதல்வி



விநாயகர் புதல்வி ஸ்ரீ சந்தோஷி மாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலதின் அப்பனுக்கே அன்னமளிக்கும்
அமுதசுரபி



அன்னபூரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலக மாதா புவனேஸ்வரி

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே
- அபிராமி அந்தாதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆதி பராசக்தி

## அகிலத்தின் அன்னை

**(சசாமர ரமா வாணீ சவ்ய தக்ஷிண சேவிதா)**

தோத்திரம் செய்துதொழுது துணையடி
வாய்த்திட வேத்தி வழிபடும் வாறிரும்
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்
பார்த்திடும் பூம்பிள்ளை யாகுமா மாதிக்கே

- திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத்தைக் காக்க அறம் வளர்க்கும் நாயகி



காஞ்சி காமாக்ஷி

11825

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சக்தி தாண்டவம்

## சிவசக்தி தத்துவம்

**(நிலைச்சக்தியிலிருந்து இயக்க சக்தியின் வெளிப்பாடு)**

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி ஊர்புகு மாறறி யேனே — திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆனந்த தாண்டவம்
## ஐந்தொழில் விளக்கம்

தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தே திரோதம், முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. - உண்மை நெறி விளக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரத்தவத்தால் தலைவன்தாள் சேர்ந்த நாயகி



# மதுரை மீனாக்ஷி

(மந்த்ரிணீ - சியாமளா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வ நாயகனின் செயல்திறம் நோக்க
விழிகளை விரித்த விசாலாட்சி நாயகி



காசி விசாலாக்ஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மையப்பர்

## சோமாஸ்கந்தர்

செய்யமேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ்சுகத்துப் பயிரவர் யாம்
உய்ய அமுது செய்யாதே ஒளித்த தெங்கே எனத் தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த அவர்தாம் மலைபயந்த
தையலோடும் சரவணத்துத் தனயரோடும் தாம் அணைவார்

- சேக்கிழார் பெரியபுராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மையப்பர்

## உலகியல் வாழ்க்கைத் தத்துவம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே

- திருஞான சம்பந்த சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தாள் தலை சேரத் தவம் செய்யும் நாயகி



கோடியில் நின்று குவலயம் காத்தருள் கன்னியாகுமரி
(பாலா திரிபுரசுந்தரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மந்திரமாய் உத்பவித்து தந்திரமாய் விகசித்து**
**யந்திரமாய் நிலைபெற்றவள்**
**ஸ்ரீசக்கர ராஜ சிம்மாசனேஸ்வரி**



கண்டிடும் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை
கொண்டிடு முன்னே குறித்த வினைகளை
வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கு
நின்றிடும் சக்கரம் நிலைக்கு மளவே

- திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உருவத் திருமேனி
(உமா - மகேஸ்வரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிராமிய மக்களின் இதயத்திலிருப்பவள்



பேச்சியம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

186p



சர்வ தேவதா ஸ்வரூபம்
காமதேனுவாம் காராம்பசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பிகையின் அருள்வடிவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org